**இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின்**

**எட்டாவது பாராளுமன்றத்தின்**

**(முதலாவது கூட்டத்தொடர்)**

# பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம் 99

**அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவின்**

**முதலாவது அறிக்கை**

**( 01.01.2016 - 07.04.2016 வரை)**

**அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவின் தவிசாளர்**

**கௌரவ லசந்த அலகியவன்னஅவர்களால்**

**2016 செப்டெம்பர் மாதம் 22 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டது.**

2016 செப்டெம்பர் 22 ஆம் திகதி அச்சிடுவதற்காக
பாராளுமன்றத்தால் பணிக்கப்பட்டது.

# எட்டாவது பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தொடர்

## அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவின் உள்ளடக்கம்

கௌரவ லசந்த அலகியவன்ன (தவிசாளர்)
கௌரவ எஸ்.பி.திசாநாயக்க
கௌரவ மஹிந்த சமரசிங்க
கௌரவ பீ. ஹரிசன்
கௌரவ பைசர் முஸ்தபா
கௌரவ பாலித ரங்கே பண்டார
கௌரவ நிரோஷன் பெரேரா
கௌரவ சுஜீவ சேனசிங்க
கௌரவ இரான் விக்கிரமரத்ன
கௌரவ பந்துல குணவர்தன
கௌரவ விஜித ஹேரத்
கௌரவ வாசுதேவ நாணாயக்கார
கௌரவ நிஹால் கலப்பத்தி
கௌரவ பிமல் ரத்நாயக்க
கௌரவ செயிட் அலி சாஹிர் மௌலானா
கௌரவ புத்திக பத்திரண
கௌரவ சீனித்தம்பி யோகேஸ்வரன்
கௌரவ எஸ். சிறீதரன்
கௌரவ சந்திம கமகே
கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ
கௌரவ (டாக்டர்) காவிந்த ஹேஷான் ஜயவர்தன
கௌரவ ஐ. சாள்ஸ் நிர்மலநாதன்
கௌரவ (திருமதி) ஹிருனிகா பிரேமசந்திர
கௌரவ பந்துல லால் பண்டாரிகொட
கௌரவ பிரசன்ன ரணதுங்க
கௌரவ எஸ். வியாழேந்திரன்

## உள்ளடக்கம்

**பக்கம்**


❖ தவிசாளரின் செய்தி 7
❖ அறிமுகம் 11
❖ அறிக்கையின் சுருக்கம் 15
❖ குழுவின் விடயப்பரப்பில் அடங்குகின்ற நிறுவனங்கள் 17
❖ அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவுக்கும் ஏனைய
நிறுவனங்களுக்கும் இடையிலான தொடர்கள் 19
❖ அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவின் புதிய நோக்கு 25
❖ விசாரணை செய்யப்பட்ட நிறுவனங்கள். 31
❖ பொதுவான அவதானிப்புகளும், முடிவுகளும், சிபாரிசுகளும் 35
❖ விசேடமான அவதானிப்புகள் 43
❖ புலனாய்வு செய்யப்பட்ட நிறுவனங்களில்
கண்டறியப்பட்ட முக்கியமான பிரச்சினைகள் மற்றும்
வழங்கப்பட்ட சிபாரிசுகள். 47
❖ பின்னிணைப்பு :
(i) அமைச்சுகள்/திணைக்களங்கள்/மாவட்ட செயலாளர்
அலுவலங்கள் என்பன தொடர்பான வினாக்கொத்து 151
(ii) உள்ளூராட்சி மன்றங்கள் தொடர்பான வினாகொத்து 195
(iii) மோட்டார் வாகனப் போக்குவரத்துத்
திணைக்களத்தின் கோவைகள் தொடர்பான அறிக்கை 213
(iv) அரசாங்க வருமானத்திற்கான அரசாங்கத்
திணைக்களங்களின் பங்களிப்பு 214
(v) மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி
மன்றங்கள் தொடர்பிலான கணக்காய்வு அபிப்பிராயம் 215
❖ பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட அரசாங்க
❖ ணக்குகள் பற்றிய குழுவினது அறிக்கை பற்றிய சுருக்கம். 219
❖ சூசிகை 221

# தவிசாளரின் செய்தி

அரசியலமைப்பினால் பாராளுமன்றத்திடம் கையளிக்கப்பட்டுள்ள பகிரங்க நிதிகள் பற்றிய கட்டுப்பாட்டினை அமுலாக்க உதவுகின்ற ஒரு மேற்பார்வைக் குழுவான அரசாங்க கணக்குகள் பற்றிய குழு நேரடியான பங்களிப்பினை வழங்குகின்றது. அரசியலமைப்புக்கான பத்தொன்பதாவது திருத்தத்திற்கிணங்க அரச கணக்காய்வுச் செயற்பாட்டுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ள தருணத்தில் அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவில் தலைமை வகிக்க வாய்ப்புக் கிடைத்ததையிட்டு நான் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவிடம் கையளிக்கப்படுள்ள தத்துவங்கள் ஒருசில விடயங்கள் சம்பந்தமாக போதுமானதாக இல்லையென்பதால் ஏற்புடைய நிலையியற் கட்டளைகளை திருத்தியமைப்பதற்கான முன்மொழிவுகளை சமர்ப்பித்ததன் ஊடாக குழுவினை மேலும் பலப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதோடு நிகழ்காலத்தில் அதற்கு உரித்தான தத்துவங்களை உச்ச அளவில் அமுலாக்கி தாபிக்கப்பட்டமைக்கான நோக்கங்களை அடைவதில் குழு வெற்றிகண்டுள்ளது.

அரசாங்க கணக்குகள் பற்றிய குழு பாராளுமன்றத்தில் இருக்கின்ற அனைத்துக் கட்சிகளினதும் பிரதிநிதிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தக் கூடியவகையில் உருவாக்கப்பட்ட ஒன்றாகும். அனைவரினதும் ஒத்துழைப்பு மற்றும் அர்ப்பணிப்பு காரணமாகவே அரசாங்கத்தின் இரண்டு பிரதான கட்சிகளினதும் இணக்கப்பாட்டுக்கு அப்பால் பயணஞ்செய்து கூட்டுப் பொறுப்புடன் கையளிக்கப்பட்டுள்ள நிதிசார் பொறுப்புக்களை முழுமனதுடன் ஈடேற்ற குழுவுக்கு இயலுமானதாக உள்ளதென்பதை வலியுறுத்துகிறேன்.

நிறுவனங்களை பரிசோதனைக்கு உட்படுத்துகையில் இனங்காணப்பட்ட குறைபாடுகளை சரிசெய்து நிலவுகின்ற ஆக்கமுறையான பண்புகளையும் போக்குகளையும் மிகவும் மேலோங்கச் செய்து பகிரங்க அலுவலர்களின் கௌரவத்தைப் பாதுகாத்து அவர்களுக்கு வழிகாட்ட வேண்டுமென்பது குழுக்களிலிருந்து பெற்ற நீண்டகால அனுபவம் வாயிலாக தெளிவாகின்றது. கணக்காய்வு எனப்படுகின்ற பிற்பட்ட செயற்பாட்டின்போது நிறுவனங்களின் பலவீனங்களை இனங்கண்டு தீர்வுகளைப் பெற்றுக்கொடுப்பதைப் பார்க்கிலும் அத்தகைய வினைத்திறமையீனங்கள் ஏற்படுவதை முன்கூட்டியே தடுப்பது பயனுறுதிமிக்கதாக அமைவதால் எதிர்வரும் காலப்பகுதியில் கடந்தகால குறைபாடுகள் மீண்டும் தோன்றுவதைத் தடுக்க நிறுவனத்திற்கு வழிகாட்டுதல் குழுவினால் மேற்கொள்ளப்படுகின்றது.

புதிய நிதிசார் மற்றும் முகாமைத்துவ போக்குகளின் மத்தியில் புதிய திசைகளை நோக்கி பயணஞ்செய்ய வேண்டியதன் காலத்தேவையை இனங்கண்ட குழு மேற்படி நோக்கங்களை ஈடேற்றிக்கொள்ள தனித்துவமான மூன்று வழிமுறைகளை கடைப்பிடித்தது.

* தேர்ந்தெடுக்கப்பட்ட அளவுகோல்களின் அடிப்படையில் நிறுவனங்களை மதிப்பீடு செய்தல்
* நிறுவனங்களுக்கு அழைப்பு விடுப்பதற்கான புதிய வழிமுறை
* மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களை அழைப்பதனை செயற்படுத்தல்.
* கணனி மென்பொருள் நிகழ்ச்சித்திட்டங்களை ஊக்குவித்தல்.

கடந்த பல வருடங்களாக மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு முன்னுரிமை அளித்து அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவின் முன் தோற்றுமாறு அழைப்பு விடுக்கப்படவில்லை என்பதோடு மீண்டும் அச்செயற்பாட்டினை வினைத்திறன்மிக்கதாக

அமைக்க குழு தீர்மானித்தது. அந்நோக்கத்துடன் அந்நிறுவனங்களின் நிர்வாக உத்தியோகத்தர்களை அழைத்து நடத்தப்பட்ட செயலமர்வில் அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவின் புதிய வேலைத்திட்டம் அவர்களுக்கு தெளிவுபடுத்தப்பட்டது. மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களின் நிதிக்கட்டுப்பாடு மீது குழுவின் தீவிர கவனஞ் செலுத்தப்படுவதாகவும் எதிர்காலத்தில் அவர்களை குழுவின்முன் தோற்றுமாறு அழைப்பு விடுப்பதாகவும் வலியுறுத்தப்பட்டது.

அரசாங்க கணக்குக் குழு உப குழுக்களை நியமித்தல் தொடர்பாகவும் தனது கவனத்தைச் செலுத்தி உள்ளது. இன்றளவில் அரசாங்கத்தின் பிரதான அலுவலகங்களில் கணனி உள்ளீட்டுப் பாவனை தொடர்பாக உள்ள சிக்கல்களை அடையாளம் காணல், முன்னேற்றுதல் மற்றும் நிறுவனங்களுக்கிடையில் கணனி வலையமைப்புடன் தொடர்புடைய செயல்முறையொன்றைத் தயாரித்தல் ஊடாக தோன்றக்கூடிய தவறுகளை, முறைகேடுகளை குறைப்பதற்காகவும் அரசாங்கத்திற்கு கிடைக்கவேண்டிய வருமானத்தை அதிகரிப்பதற்கான இயலுமையை கண்டறிவதற்காகவும் உப குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

குழுவின் தவிசாளரான எனக்கும் அதன் உறுப்பினர்கள் அனைவருக்கும் சுயாதீனமாகவும் பக்கச்சார்பின்றியும் குழுவின் நோக்கத்தின்பால் அதனை நெறிப்படுத்த ஒத்துழைப்பு வழங்குகின்ற அதிமேதகு சனாதிபதியவர்களுக்கும் கௌரவ பிரதம அமைச்சருக்கும் கௌரவ சபாநாயகருக்கும் அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவின் அனைத்து உறுப்பினர்கள் சார்பாகவும் நன்றி தெரிவிக்க இச்சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொள்கிறேன்.

அரசாங்க கணக்குக் குழுவின் வெற்றியானது அதில் பங்கேற்கின்ற அனைத்துத் தரப்பினர்களினதும் ஒத்துழைப்பாகும். பல்வேறு சவால்களின் மத்தியிலும் எல்லாவேளைகளிலும் நான் எதிர்பார்க்கின்ற மேற்படி ஒத்துழைப்பினை நிறைவாக வழங்குகின்ற பாராளுமன்றச் செயலாளர் நாயகம், பிரதிச் செயலாளர் நாயகம் மற்றும் உதவிச் செயலாளர் நாயகங்கள் ஆகியோர் உள்ளிட்ட அரசாங்க கணக்குகள் பற்றிய குழுப் பணியகத்தின் பதவியணியினரினதும் கணக்காய்வாளர் தலைமை அதிபதி உள்ளிட்ட பதவியினரதும் திறைசேரியின் உத்தியோகத்தர்களினதும் அர்ப்பணிப்பினை நான் பெரிதும் மதிக்கிறேன்.

எதிர்வரும் ஆண்டுகளில் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ள மாபெரும் செயற்பொறுப்பு ஊடாக அரச சேவையை மிகவும் பயன்விளைவு கொண்டதாக மாற்ற பங்களிப்பு வழங்கவும் அதனூடாக நல்லாட்சியின் உண்மையான அர்த்தத்தை பிறப்பிக்கும் நோக்கத்தை அடைவதற்காக குழுவின் முழுப் பலத்தையும் பிரயோகித்து செயலாற்றுவேன் என்பதையும் இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

# அறிமுகம்

இலங்கைப் பாராளுமன்றத்தின் மிக நீண்ட வரலாற்றுக்கு உரிமை பாராட்டுவது நிதிசார் மேற்பார்வைக்காக தாபிக்கப்பட்ட அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவாகும். இந்த குழு 1923 செத்தெம்பர் மாதம் 05 ஆந் திகதி தாபிக்கப்பட்டு அதன் முதலாவது கூட்டம் 1923 ஒக்டோபர் மாதம் 17 ஆந் திகதி நடைபெற்றது.

இலங்கைப் பாராளுமன்றத்தின் அரசாங்க கணக்குகள் பற்றிய குழு நிலையியற் கட்டளை இலக்கம் 125 இன் கீழ் அமுலாக்கப்பட்டுள்ளதோடு அதன் செயற்பொறுப்பு பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

***"125 (2) அரசாங்க செலவுகளை எதிர்நோக்குவதற்காகப் பாராளுமன்றத்தால் வழங்கப்பட்ட ஒதுக்கீட்டுத் தொகைகளைக் காட்டுகின்ற கணக்குகளையும் குழு தக்கதெனக் கருதும் பாராளுமன்றத்தின் முன்னிடப்படும் பிற கணக்குகளையும் அவை பற்றிய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைகளுடனும் உள்ளூர் அதிகார சபைகள் பற்றிய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைகளுடனும் பரிசோதித்தல் குழுவின் கடமையாதல் வேண்டும்.***

***குழு காலத்திற்குக் காலம் பொதுவாக எந்தவொரு திணைக்களத்தினதும் உள்ளூர் அதிகார சபையினதும் பரிசோதிக்கப்பட்ட கணக்குகள், நிதியங்கள், நிதி நடைமுறைகள், செயற்பாடும் நிருவாகமும் என்பவை பற்றியும் அவற்றினின்று எழும் எந்தவொரு விடயம் பற்றியும் பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடுதல் வேண்டும்.***

***குழு அவசியமெனக் கருதுமிடத்து அதன் உறுப்பினர்களைக் கொண்ட உப குழுக்களை நியமிக்கலாம். அவை குழுவால் பணிக்கப்படும் வகையில் அத்தகைய திணைக்களங்கள், உள்ளூர் அதிகார சபைகள் ஆகியவற்றின் எல்லாக் கணக்குகளையும், நிதியங்களையும், நிருவாகத்தையும் பரிசோதித்து குழுவிற்கு அறிக்கையிடும்.***

***குழு அல்லது அதன் உபகுழுக்களின் ஏதாவதொன்று தன் கடமைகளை நிறைவேற்றுவதற்காக எந்தவோர் ஆளையும் அதன் முன் வரவழைப்பதற்கும் கேள்வி கேட்பதற்கும் எந்தவொரு பத்திரத்தை, புத்தகத்தை, பதிவேட்டை அல்லது பிற ஆவணத்தைக் கேட்டுப் பெறுவதற்கும் பரிசோதிப்பதற்கும் களஞ்சியங்கள், சொத்துக்கள் முதலியனவற்றை பார்வையிடவும் அதிகாரமுடையதாயிருத்தல் வேண்டும்."***

பாராளுமன்றத்திற்காக கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் அரச நிறுவனங்களின் கணக்காய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதோடு நிதிசார் பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்துவதற்காக கணக்காய்வின் பெறுபேறுகளை பரிசீலனை செய்யும் பொறுப்பு பாராளுமன்றத்திடமே கையளிக்கப்பட்டுள்ளது. அப்பணியை ஈடேற்றுவதற்காக பாராளுமன்றத்திற்கு ஒத்துழைப்பு வழங்கும் நோக்கத்துடன் அரசாங்க கணக்குகள் பற்றிய குழு நியமிக்கப்பட்டுள்ளதோடு அரசியலமைப்பின் 148 வது உறுப்புரையின் பிரகாரம் பாராளுமன்றத்திடம் கையளிக்கப்பட்டுள்ள பகிரங்க நிதிகளின் கட்டுப்பாட்டு அதிகாரத்தை மேற்பார்வைக் குழுவொன்று மூலமாக அமுலாக்குகின்ற முக்கியமான கட்டமைப்பாக அமைவது இக்குழுவாகும்.

ஏதேனும் அரச நிறுவனமொன்றின் நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றுகை, வினைத்திறன் மற்றும் பயனுறுதி தொடர்பாக கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் பாராளுமன்றத்திடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அறிக்கைகளில் உள்ளடங்கிய கணக்காய்வுப்

பரிசோதனைகள் அதன் பிரதம கணக்கீட்டு அலுவலரை குழுவின்முன் அழைப்பித்து புலனாய்வு செய்யப்படும்.

நிதிசார் முகாமைத்துவம் மற்றும் நிருவாக அலுவல்களை சமநிலையாக பேணிவந்து அரச கொள்கைகளை வினைத்திறனுடன் ஈடேற்றுதல் ஒவ்வொரு நிறுவனத்தினதும் தலைவரின் பொறுப்பாக அமையுமென்பதை குழு திடமாக வலியுறுத்துவதோடு கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையிலிருந்து வெளிப்படுகின்ற விடயங்களுக்கு மேலதிகமாக நிறுவனங்களின் நிகழ்கால செயலாற்றுகை பற்றியும் தனது கவனத்தைச் செலுத்த குழு நடவடிக்கை எடுத்துள்ளது.

அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவின் விடயப்பரப்பிற்குள் 842 அரச நிறுவனங்களும் அத்துடன் இணைந்த நிறுவனங்களும் அடங்குகின்றன. அமைச்சுக்கள், திணைக்களங்கள், மாகாண சபைகள், உள்ளூராட்சி நிறுவனங்கள், மாவட்டச் செயலகங்கள், பிரதேச செயலகங்கள், சனாதிபதி அலுவலகத்தின் கீழ் உள்ள ஒரு சில நிறுவனங்கள், எந்தவோர் அமைச்சின் கீழும் கொள்ளப்படாத சுயாதீனமான நிறுவனங்கள், ஆணைக்குழுக்கள், நிதியங்களைப் போன்றே வெளிநாட்டு நிதியேற்பாடுகளின் கீழ் அமுலாக்கப்படுகின்ற கருத்திட்டங்களும் இதில் அடங்குகின்றன.

புலனாய்வு செய்யப்படுகின்ற நிறுவனங்களின் முகாமைத்துவ மற்றும் நிதிசார் பலவீனங்கள், முறைகேடுகள் மற்றும் வினைத்திறமையீனங்களை இனங்கண்டு அவற்றைத் தடுத்து தீர்த்துவைப்பதற்காக குழுவினால் வழங்கப்படுகின்ற விதப்புரைகளை மேற்படி நிறுவனங்கள் ஊடாக அமுலாக்கச் செய்விப்பதன் மூலமாக பாராளுமன்றத்தில் வரவு செலவுத் திட்டம் மூலமாக ஆண்டுதோறும் ஒவ்வொரு செலவுத் தலைப்புக்களின் கீழும் ஒதுக்கப்படுகின்ற நிதியேற்பாடுகளின் வரையறைகளுக்குள்ளே மேற்படி நிதியேற்பாடுகள் வழங்கப்படுகின்ற குறிக்கோள்களை அடைவதையும் அதனூடாக உச்சஅளவிலான நன்மைகளைப் பெற்றுக் கொள்வதையும் குழு எந்நேரமும் எதிர்பார்க்கின்றது.

## அறிக்கையின் உள்ளடக்கம்

எட்டாவது பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தொடருக்காக அரசாங்க கணக்குகள் பற்றிய குழு தனது முதலாவது அறிக்கையை இன்றைய தினம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கின்றது.

இலங்கைப் பாராளுமன்றத்தின் நிலையியற் கட்டளை 125 இன் பிரகாரம் தெரிவுக்குழுவினால் பெயர் குறிக்கப்படுகின்ற 12 பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட எட்டாவது பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தொடருக்காக அரசாங்க கணக்குகள் பற்றிய குழு கௌரவ சாபாநாயகரால் 2015 ஒற்றோபர் மாதம் 23 ஆந் திகதி பாராளுமன்றத்தில் அறிவிக்கப்பட்டதோடு பின்னர் மூன்று சந்தர்ப்பங்களில் தெரிவுக்குழுவினால் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களின் பிரகாரம் நிகழ்கால பாராளுமன்றத்தின் அரசாங்க கணக்குகள் பற்றிய குழு 26 உறுப்பினர்களைக் கொண்டதாக அமைந்துள்ளது.

2015 நவெம்பர் 26 ஆந் திகதி குழுக் கூட்டம் முதற்றடவையாக நடைபெற்றதோடு கௌரவ லசந்த அலகியவன்ன அவர்கள் போட்டியின்றி தவிசாளர் பதவிக்கு நியமிக்கப்பட்டார். அன்றுதொட்டு பாராளுமன்றத்தின் நிலையியற் கட்டளைகளுக்கிணங்க குழு அரச நிறுவனங்களின் கணக்கு அலுவல்களையும் செயலாற்றுகையையும் புலனாய்வு செய்வதற்காக கிரமமாக கூட்டங்களை நடத்தியது.

2016 சனவரி மாதம் 09 ஆந் திகதி தொடக்கம் 2016 ஏப்றில் மாதம் 07 ஆந் திகதி வரையான மூன்று மாத காலப்பகுதியில் 2005 – 2013 ஆண்டுகள் சம்பந்தமாக கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் வெளியிடப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கைகளை அடிப்படையாகக்கொண்டு குழுவின்முன் வரவழைக்கப்பட்ட 38 அரச நிறுவனங்களுடன் தொடர்புடைய 41 புலனாய்வுகள் மூலமாக குழுவினால் வெளிக்கொணரப்பட்ட விடயங்கள் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

குழுவினால் சமர்ப்பிக்கப்படுகின்ற பரிந்துரைகள், வரையறுக்கப்பட்ட காலச்சட்டகத்திற்குள் 842 ஆக அமைந்த அரச நிறுவனங்கள் அனைத்தையும் புலனாய்வு செய்வதன் சவாலை வெற்றிகொள்ளக்கூடிய வழிவகைகள் மற்றும் புதிய வேலைத்திட்டமொன்றின் ஊடாக மிகவும் வினைத்திறனுடனும் பயனுறுதியுடனும் தனது அலுவல்களை ஈடேற்றத் தீர்மானித்த குழு அந்நோக்கங்களை அடைவதற்காக மேற்கொண்ட புதிய வழிமுறைகள் இவ்வறிக்கையில் அடங்கி உள்ளன.

## அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவின் விடயப்பரப்பிற்கு ஏற்புடைத்தாகின்ற நிறுவனங்களும் துணை நிறுவனங்களும்

| நிறுவனங்கள் | எண்ணிக்கை |
|---|---|
| **பிரதான நிறுவனங்கள்** | |
| தனித்துவமான செலவுக் கூறுகள் | 19 |
| அமைச்சுக்கள் | 51 |
| திணைக்களங்கள் | 89 |
| மாவட்டச் செயலகங்கள் | 25 |
| உள்ளூராட்சி நிறுவனங்கள் | 335 |
| கூட்டுத் தொகை | **519** |
| **துணை நிறுவனங்கள்** | |
| மாகாண சபைகள் | 09 |
| பிரதேச செயலகங்கள் | 314 |
| கூட்டுத்தொகை | **323** |
| **மொத்த நிறுவனங்களின் எண்ணிக்கை** | **842** |

# அரசாங்க கணக்குகள் குழுவின் செயற்பாடு




01. பாராளுமன்றத்தினால் அரசாங்கக் கணக்குகள் பற்றியகுழு நியமிக்கப்படுவதுடன் பாராளுமன்றத்துக்குரிய மேற்பார்வைப் பணிகளில் ஓர் பகுதியை நடைமுறைப்படுத்துவதற்கு அது வலுவூட்டப்பட்டுள்ளது.
02. நிதியை சேகரிப்பதற்கும், திரண்ட நிதியத்திலிருந்து மற்றும் அரசுக்குரிய வேறு நிதியங்களிலிருந்து பணத்தை செலவிட பாராளுமன்றத்தினால் அனுமதிக்கப்படும் வருடாந்த ஒதுக்கீட்டுச் சட்டத்தினால் மற்றும் வேறு விசேட சட்டங்களினால் நிதி அமைச்சு அல்லது பொது திறைசேரிக்கு அதிகாரம் கிடைக்கின்றது.
03. சகல அரச நிறுவனங்களினதும் கணக்காய்வு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும், கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயத்துக்கமைய பாராளுமன்றத்துக்கு அறிவிக்க வேண்டுமென கருதப்படும் அரச நிறுவனங்களினால் மேற்கொள்ளப்படும் நிதி மோசடிகள்,

ஒவ்வாமை, முறைகேடுகள் அல்லது பணிகளை சரியாக மேற்கொள்ளாமை தொடர்பாக மீண்டும் பாராளுமன்றத்துக்கு அறிவிக்கும் அதிகாரம் அரசியலமைப்பின்படி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு உண்டு.

04. பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்படும் அடிப்படைச் சட்டங்களின் மூலம் வரி உட்பட ஏனைய அறவீடுகளை சேகரிப்பதற்கு உள்ளூராட்சி மன்றங்களுக்கு அதிகாரம் உண்டு.

05. பாராளுமன்றத்தினால் வருடாந்த நிதி ஒதுக்கீடுகளாக சகல அமைச்சுக்கள், திணைக்களங்கள், மாவட்ட செயலகங்கள் மற்றும் விசேட செலவு அலகுகளுக்கு வருடாந்த செலவு மதிப்பீடுகளும், மாகாண சபைகளின் செலவுகளில் ஒரு பகுதியும் அனுமதிக்கப்படும். வருமானக் கணக்கு உத்தியோகத்தர்களுக்காக வருமான மதிப்பீடுகளை செய்வதற்கும், அரச அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களின் முற்பணக் கணக்குகளுக்காக செலவுகள் மற்றும் கிடைப்பனவுகளுடன் தீர்மானித்தலையும் பாராளுமன்றம் மேற்கொள்ளும்.

06. நிதி அமைச்சு/பொது திறைசேரியினால் சகல வருமான மற்றும் செலவு தலைப்புகளுக்கும் கணக்கீட்டு அலுவலர்கள் மற்றும் பிரதம கணக்கீட்டு அலுவலர்கள் நியமிக்கப்படுகின்றனர். அதேபோன்று செலவு அலகுகளுக்காக கட்டுநிதி எல்லைகள் (பணம் பெற்றுக்கொள்ளும் எல்லைகள்) குறித்துரைக்ககப்படுவதுடன், வரவு செலவுத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக தேவையாவை குறித்து ஆலோசனைகளை வழங்குவதும் தேவைக்கேற்ப நிதி வழங்குதலும் மேற்கொள்ளப்படும். அதேபோன்று நிதி முகாமைத்துவம் தொடர்பான நடவடிக்கைகளை மேற்பார்வை செய்வதும் அரசுக்குரிய பணத்தின் பொறுப்பாளர் மற்றும் நிதிப் பிரமாணங்களின் பொறுப்பாளராக அவற்றை நிர்வகித்தலும் இடம் பெறுகின்றது.

07. கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் தொடர்ந்து கணயக்காய்வு நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்தல் உட்பட ஒதுக்கீட்டுக் கணக்குகள், இறுதிக் கணக்குகள் மற்றும் ஏனைய கணக்குகளை பரிசீலித்தல்/கணக்காய்வு செய்தல் உட்பட அமைச்சுக்கள், திணைக்களங்கள், மாவட்ட செயலகங்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களின் செயற்பாடுகள் தொடர்பாக கணக்காய்வு பரிசீலனைகள் மேற்கொள்ளப்படும். தகவல்களைக் கோருதல், விசாரணை, கணக்காய்வு விசாரணைகளை ஆரம்பித்தல் உட்பட பதில்களை மதிப்பீடு செய்வதற்கும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அதிகாரம் உள்ளது. அந்த பதில்களினால் திருப்தியடையாவிடின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் அந்த விடயங்களை பாராளுமன்றத்துக்கு அறிவிக்க வேண்டுமா அல்லது வேண்டாமா என்பது தொடர்பாக இறுதித் தீர்மானம் எடுக்கும் பொருட்டு குறிப்பிட்ட பந்திகள் கணக்கீட்டு அலுவலகத்திற்கும், தலைமை கணக்கீட்டு அலுவலர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டு கருத்துக்கள் பெறப்படும்.

08. பொதுத் திறைசேரி, அரச அமைச்சுக்கள், திணைக்களங்கள், விசேட செலவு அலகுகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்கள் அவற்றின் வருடாந்தக் கணக்குகளைக் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிப்பதோடு, வேண்டப்படும் தகவல்களைப் பெற்றுக்கொடுப்பதையும், கணக்காய்வு ஐயா வினாக்களுக்கு விடையளிப்பதையும், உத்தேச கணக்காய்வுப் பந்திகள் தொடர்பில் தமது அபிப்பிராயங்களைத் தெரிவிப்பதையும் மேற்கொள்கின்றன.

09. அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்கள் தமது துணை அலுவலகங்களுக்காக தமது பணிகளை நிறைவேற்றுவதற்கான அதிகாரங்களைப் பகிர்ந்தளித்தலையும், வரவு செலவுத்திட்ட நிதி ஏற்பாடுகள் மற்றும் நிதி ஒதுக்குதலையும், மேற்பார்வையையும் மேற்கொள்கின்றன.

10. முகவராண்மைகளும், உப அலுவலகங்களும் சம்பந்தப்பட்ட தலைமை அலுவலகங்களுக்கு மீண்டும் அறிக்கையிடும்.

11. கணக்காய்வாளர் தலைமையதிபதி தமது ஆண்டறிக்கைகள், விசேட அறிக்கைகளைப் பாராளுமன்றத்திற்கும் அரசாங்கக் கணக்குக் குழுவுக்கும் ஆற்றுப்படுத்துவார்.

12. கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கைகள் மீளாய்வு செய்யப்பட்ட பின்னர் முன்னுரிமை ஒழுங்கின்படி எந்த நிறுவனத்தை குழுவின் முன்னிலையில் அழைக்க வேண்டுமென்பதை அரசாங்கக் கணக்குக்குழு தீர்மானிப்பதுடன், அதன்போது சம்பந்தப்பட்ட அலுவலர்களுடன் நிறுவனத்தின் கணக்கீட்டு அலுவலரும்/பிரதம கணக்கீட்டு அலுவலரும் அழைக்கப்படுவர். மேலும் நிறுவனத்தின் செயல் நிறைவேற்றத்துடன் தொடர்புடைய தகவல்களும் கணக்காய்வாளர் தலைமையதிபதியினால் எழுப்பப்பட்ட விடயங்களின் நாளது வரைபடுத்தப்பட்ட நிலைமையும் ஆராயப்படும்.
13. அமைச்சுக்கள், திணைக்களங்கள், உள்ளூராட்சி நிறுவனங்கள் மற்றும் அவற்றின் கீழான ஏனைய முகவராண்மைகளும் கட்டளைகளுக்கு இணங்கியொழுகி கோரியுள்ள மேலதிகத் தகவல்களுடன் குழு முன்னிலையில் தோன்றும்.
14. அரசாங்கக் கணக்குக் குழுவின் முன்னிலையில் அலுவலர்களும், அவர்களினால் சமர்ப்பிக்கப்படும் எழுத்துமூல விளக்கங்களும் குழுவினால் பரீட்சிக்கப்படுவதோடு, சம்பந்தப்பட்ட அலுவலர்களின் தெளிவுப்படுத்தல்களினால் திருப்தியடையாதவிடத்து அடுத்தகட்ட நடவடிக்கைகள் குறித்தும் தீர்மானிக்கப்படும். அதன்படி, குழுவினால் விசேட கட்டளை பிறப்பிக்கப்படுவதுடன் குழுவின் சிபாரிசுகளுடன் தமது அறிக்கையை பாராளுமன்றத்திற்கு ஆற்றுப்படுத்துவர்.
15. குழுவினுடைய சிபாரிசுகளின் அடிப்படையில் பொதுத் திறைசேரி அதன் குறிப்புக்களைத் தயாரிக்கும். மேலும் நடைமுறையிலுள்ள நிதிப் பிரமாணங்களுக்குத் தேவையான திருத்தங்களுடன் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண அவசியமான திறைசேரி சுற்றறிக்கைகள் அரசாங்கத்தின் ஒவ்வொரு நிறுவனத்திற்கும் அனுப்பி வைக்கப்படும்.

**அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவின் செயற்பொறுப்பும் புதிய நோக்கும்**

**01. நிதி அறிக்கைகளை முன்வைத்தல் மற்றும் செயலாற்றுகைக்கு அமைய அரச நிறுவனங்களைத் தரப்படுத்துதலும் அதற்கமைவாக நிறுவனங்களை மதிப்பீடு செய்தலும், வகைப்படுத்தலும்.**

அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவின் விடயப்பரப்பில் கொள்ளப்படுகின்ற 845 அரச நிறுவனங்கள் அனைத்தையும் குழுவின் முன் வரவழைத்து புலனாய்வு செய்தல் நடைமுறையில் சிக்கலானதாக அமைவதால் அதற்கான புதிய வழிமுறையொன்றை நிகழ்கால அரசாங்க கணக்குகள் பற்றிய குழு ஆரம்பித்துள்ளது.

அதற்கிணங்க அனைத்து அரச நிறுவனங்களையும் ஏற்றுக்கொள்ளக்கூடிய திட்டவட்டமான வழிமுறையினுடாக தரப்படுத்தவும் அதனூடாக பெறப்பட்ட மதிப்பீடுப் பெறுபேறுகளின் அடிப்படையில் சம்பந்தப்பட்ட நிறுவனங்களை குழுவின் முன் வரவழைக்கவும் தீர்மானிக்கப்பட்டது. கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம், இலங்கை பரீட்சைகள் திணைக்களம் மற்றும் உற்பத்தித்திறன் செயலகத்தின் அலுவலர்களின் நிபுணத்துவ அறிவினைப் பெற்றுக்கொண்டு தயாரிக்கப்பட்ட இரண்டு வினாக்கொத்துகள்* (பின்னிணைப்பு இலக்கம் 01 மற்றும் 02) (அமைச்சுக்கள்/ திணைக்களங்கள்/மாவட்ட செயலகங்கள்/மாகாண சபைகளுக்காக ஒரு வினாக்கொத்தும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்காக ஒரு வினாக்கொத்தும்) மற்றும் புள்ளி வழங்கல் வழிமுறையொன்றைத் தயாரிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

அரச நிறுவனங்களில் மனித, நிதிசார் மற்றும் பௌதீக வளங்கள் முகாமைத்துவம் பற்றிய செயலாற்றுகையை மதிப்பீடு செய்யக்கூடிய வகையில் இவ்வினாக்கொத்து தயாரிக்கப்பட்டுள்ளது.

நிறுவனங்களைத் தரப்படுத்துவதற்கான முன்னோடிக் கருத்திட்டமாக தற்போது இது இயங்கிவருவதோடு மேற்படி வினாக்கொத்துகள் அரச நிறுவனங்களுக்கு அனுப்பிவைப்பட்டதோடு பதில்கள் ஏற்கெனவே அரசாங்க கணக்குகள் பற்றிய குழுச் செயலகத்திற்கு கிடைத்துள்ளன. இன்றளவில் அனைத்து அமைச்சுக்களும் மதிப்பீடு செய்யப்பட்டு அனைத்துமே தரப்படுத்தப்பட்டுள்ளதோடு குழுவின் அடுத்த அறிக்கையில் மேற்படி தரப்படுத்தல் உள்ளடக்கப்படும். சம்பந்தப்பட்ட தரப்படுத்தலின் பின் குறிப்பிட்ட வினாக்கொத்துகள் தொடர்பில் வழங்கப்பட்ட பதில்களின் நிலையை உறுதிப்படுத்திக்கொள்வதற்காக கணக்காய்வளர் நாயகத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்படும். அமைச்சுக்களின் தரவரிசை பற்றி சம்பந்தப்பட்ட அமைச்சர் விழிப்புணர்வூட்டப்படுவதோடு அமைச்சு செயலாளர்கள் அனைவரையும் குழுவின்முன் வரவழைத்து கணிப்பீடு பற்றிய மதிப்பீட்டினைச் செய்ய குழு கருதுகின்றது.

இந்த மதிப்பீட்டினை அடிப்படையாகக்கொண்டு அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவின்முன் அமைச்சுக்களையும் திணைக்களங்களையும் வரவழைத்தல் தொடர்பிலான முன்னுரிமையை தீர்மானிப்பதற்கு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

**02. உள்ளூராட்சி நிறுவனங்களை பாராளுமன்றத்தின் அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவின்முன் வரவழைத்தல் சம்பந்தமாக விழிப்பூணர்வூட்டுவதற்கான நிகழ்ச்சித் திட்டமொன்றை நடத்துதல்**

2016 மார்ச் மாதம் 31 ஆந் திகதி கௌரவ சபாநாயகரின் தலைமையில் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களின் முக்கியத்துவம் மற்றும் அதன் நிதி தொடர்பாக உள்ள பொறுப்பு மற்றும் அந்நிறுவனங்களில் நிலவுகின்ற சிக்கல்களும் பலவீனங்களும் பற்றிய கருத்துக்களைப் பெற்றுக்கொள்ளல் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களை பாராளுமன்றத்தின் அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவின்முன் வரவழைத்தல் சம்பந்தமாக விழிப்புணர்வூட்டுவதற்காக அனைத்து மாகாண ஆளுனர் செயலாளர்கள், மாகாண சபை பிரதம செயலாளர்கள், மாகாண சபை பிரதிச்

செயலாளர்கள் (நிதி), மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர்கள், மாகாண சபைகளின் செயலாளர்கள், உள்ளூராட்சி செயலாளர்கள், மாநகரசபை ஆணையாளர்கள், நகரசபை செயலாளர்களை பாராளுமன்றத்திற்கு வரவழைத்து விழிப்புணர்வூட்டுவதற்கான நிகழ்ச்சியொன்று நடத்தப்பட்டது.

எதிர்காலத்தில் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களை வரவழைக்கையில் அந்நிறுவனங்களின் நிதி நிலைமை பற்றி கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயமும்* ஒரு சுட்டியாக அடிப்டையாகக் கொள்ளப்பட உள்ளது. (பின்னிணைப்பு இலக்கம் 05)

**03. அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவும் மக்கள் தொடர்புகளும்.**

குழு பற்றிய தகவல்களை பொதுமக்கள் அறிந்துகொள்ளும் வகையிலும் மக்களின் கருத்துக்களையும் முன்மொழிவுகளையும் குழுவுக்கு நேரடியாக பெற்றுக் கொள்ளக் கூடிய வகையிலும் பாராளுமன்றத்தின் கணனித் தகவல் தரவு முறைமைப் பிரிவினை தொடர்புபடுத்திக்கொண்டு புதிய கணனி நிகழ்ச்சித்திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் குழுவின் விசாரணை விடயங்களை பயனுள்ள விதத்தில் செயற்படுத்த முடியும் என்பதுடன் எதிர்காலத்தில் குழு கடதாசிப் பாவனையற்ற சுற்றுச்சூழலில் இயங்குவதே இதன் இறுதி நோக்கமாகும்.

**04. அரச அமைச்சுக்கள் மற்றும் அவற்றின் கீழ் இயங்குகின்ற திணைக்களங்களை ஒரேதடவையில் அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவின்முன் தோற்றுமாறு அழைப்புவிடுத்தல்.**

இதனூடாக ஒரே துறையில் ஒன்றுடனொன்று தொடர்புபட்ட சிக்கல்கள், பிரச்சினைகள் பற்றி கலந்துரையாடித் தீர்த்துக்கொள்வதை மிகவும் பயனுறுதியுடன் ஈடேற்றிக்கொள்ளக்கூடியதாக அமைந்ததோடு குழுவுக்கு மிகவும் பயனுறுதிமிக்க விதப்புரைகளை சமர்ப்பிப்பதற்கான ஆற்றலும் உரித்தானது.

**05. அரச நிறுவனங்களில் கணனி பிரயோகப் பாவனையை முன்னேற்றுதல்**

2016 மார்ச் மாதம் 24 ஆந் திகதி அரசாங்கத்தின் வருமானம் பெறுகின்ற பிரதான நிறுவனங்கள் மற்றும் கணனி பிரயோகப் பாவனை சம்பந்தமாக உள்ள சிக்கல்களைத் தீர்த்தல், முன்னேற்றுதல் மற்றும் நிறுவனங்களுக்கிடையில் கணனி வலையமைப்பு சம்பந்தமான நடைமுறையொன்றைத் தயாரித்தல் ஊடாக இடம்பெறக்கூடிய தவறுகள், முறைகேடுகளைக் குறைப்பதற்காகவும் அரசாங்கத்திற்கு கிடைக்கவேண்டிய வருமானத்தை அதிகரிப்பதற்கான இயலுமையை பரிசீலனை செய்வதற்காகவும் கலந்துரையாடலொன்று நடத்தப்பட்டது.

அரச வருமானத்திற்கு அதிக பங்களிப்பினை செய்கின்ற பிரதான நிறுவனங்களுக்கிடையில் (பிற்சேர்க்கை இலக்கம் 04) இன்றளவில் ஒருங்கிணைந்த கணனி தகவல் தொழில்நுட்ப நிகழ்ச்சித்திட்டமொன்று அமுலில் இல்லாமையால் இந்நிறுவனங்கள் மீது கவனஞ் செலுத்தவேண்டியது முக்கியமானதென குழு விதந்துரைக்கின்றது.

இதன் பொருட்டு கணனி பிரயோகப் பாவனை சம்பந்தமாக முன்னணியில் திகழ்கின்ற இலங்கை வங்கி, மக்கள் வங்கி மற்றும் தேசிய சேமிப்பு வங்கியையும் இப்பிரிவைச்சேர்ந்த தேர்ச்சிபெற்றவர்களான லங்கா கிளியர் தனியார் நிறுவனம் மற்றும் ICTA ஆகிய நிறுவனங்களையும் வரவழைத்து அவர்களின் பங்களிப்பினைப் பெற்றுக்கொள்ள குழு நடவடிக்கை மேற்கொண்டது.

**06. தகவல் தொடர்பாடல் தொழில்நுடபம் பற்றிய உபகுழுவொன்றை நியமித்தல்**

2016 மார்ச் மாதம் 23 ஆந் திகதி அரசாங்க கணக்குகள் குழுவினால் அரச நிறுவனங்களின் தகவல் தொழில்நுட்ப பாவனை சம்பந்தமாக ஆராய்ந்து மேற்படி 05 இல் குறிப்பிடப்படுள்ள விடயங்களை அடைவதற்காக கௌரவ இரான் விக்கிரமரத்ன அவர்களின் தலைமையில் நான்கு பாரளுமன்ற உறுப்பினர்களை அங்கத்தவர்களாகக்கொண்ட உப குழுவொன்று நியமிக்கப்பட்டது.

**உப குழு**

அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவினால் அரச வருமானம் தொடர்பில் அதிக பங்களிப்பினை வகிக்கின்ற மூன்று நிறுவனங்களின் கணனித் தகவல் தொழில்நுட்பம் சம்பந்தமான அலுவல்களை மேம்படுத்துதல் மற்றும் அதன் மூலமாக பெற்றுக்கொள்ளக்கூடிய முன்னேற்றம் பற்றிய விதப்புரைகளை சமர்ப்பிப்பதற்காக நியமிக்கப்பட்ட உப குழுவின் உள்ளடக்கம்

கௌரவ இரான் விக்கிரமரத்ன (தவிசாளர்)

கௌரவ பந்துல குணவர்தன

கௌரவ செயிட் அலி சாஹிர் மௌலானா

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ

கௌரவ (டாக்டர்) காவிந்த ஹேஷான் ஜயவர்தன

**07. தொடர் நடவடிக்கைப் பணிகளைப் பலப்படுத்துதல்**

அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவின்முன் வருடத்திற்கு ஒருதடவையேனும் ஒவ்வொரு நிறுவனத்தையும் வரவழைக்கவேண்டுமென்ற அடிப்படையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் ஒருசில நிறுவனங்களை அழைப்பித்து விசாரிக்கின்ற வேளையில் அந்நிறுவனங்களில் பாரியளவிலான முறைகேடுகள் நிலவுகின்றமையும், அந்நிறுவனங்களை மீண்டும் மீண்டும் அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவின்முன் அழைப்பித்து விடுத்த பணிப்புரைகளை அமுலாக்கும் பணிகளிலான முன்னேற்றம் பற்றியும் ஆய்வுசெய்ய வேண்டியதன் அவசியப்பாடு இனங்காணப்பட்டது. எனவே அந்நிறுவனங்களை மூன்று மாதங்களுக்கு ஒருதடவை குழுவின்முன் அழைப்பித்து விசாரிக்கும் தீர்மானத்தில் குழு நிலைகொண்டுள்ளது. இவ்வடிப்படையில் சுங்கத் திணைக்களமும் மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களமும் கல்வி அமைச்சும் இன்றளவில் இரண்டு தடவைகள் குழுவின்முன் அழைப்பிக்கப்பட்டுள்ளன.

**08. வெளிக்கள பரிசோதனைகளை மேற்கொள்ளல்**

அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவின் கீழ் நிலவுகின்ற நிறுவனங்களின் துணை நிறுவனங்களை பரிசீலனை செய்யவேண்டுமென உணர்ந்தால் அந்த பிரதான நிறுவனத்தையும் துணை நிறுவனங்கள் அனைத்தையும் ஒரே நாளில் அழைப்பித்து வெளிக்களப் பரிசீலனையொன்றை மேற்கொள்ள குழு கருதியுள்ளது.

## புலனாய்வு செய்யப்பட்ட நிறுவனங்கள்

| இல. | நிறுவனத்தின் பெயர் | நிரல் அமைச்சு | புலனாய்வு செய்யப்பட்ட திகதி | பக்க இலக்கம் |
|---|---|---|---|---|
| **1** | இலங்கை சுங்கத் திணைக்களம் | நிதி அமைச்சு | 09.01.2016 | 47 |
| **2** | மோட்டார் வாகன திணைக்களம் | போக்குவரத்து, சிவில் விமான சேவைகள் அமைச்சு | 09.01.2016 | 48 |
| **3** | உள்நாட்டு அரசிறைத் திணைக்களம் | நிதி அமைச்சு | 26.01.2016 | 50 |
| **4** | மதுவரித் திணைக்களம் | நிதி அமைச்சு | 26.01.2016 | 52 |
| **5** | திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழில் பயிற்சி அமைச்சு | - | 26.01.2016 | 54 |
| **6** | கல்வி அமைச்சு | - | 27.01.2016 | 58 |
| **7** | காணி அமைச்சு | - | 27.01.2016 | 63 |
| **8** | குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம் | உள்ளக விவகாரங்கள், வடமேல் மாகாண அபிவிருத்தி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு | 28.01.2016 | 64 |
| **9** | பரீட்சைகள் திணைக்களம் | கல்வி அமைச்சு | 28.01.2016 | 67 |
| **10** | விலைமதிப்பீட்டுத் திணைக்களம் | நிதி அமைச்சு | 09.02.2016 | 69 |
| **11** | இறக்குமதி, ஏற்றுமதித் திணைக்களம் | அபிவிருத்தி உபாயத்திட்டங்கள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சு | 10.02.2016 | 71 |
| **12** | வாழ்வின் எழுச்சித் திணைக்களம் | சமூக ஊக்குவிப்பு மற்றும் நலனோம்புகை அமைச்சு | 11.02.2016 | 75 |
| **13** | கல்வி அமைச்சு | - | 12.02.2016 | 83 |
| **14** | குருணாகல் மாவட்ட செயலகம் | உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு | 12.02.2016 | 86 |
| **15** | கண்டி மாவட்டச் செயலகம் | உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு | 23.02.2016 | 89 |
| **16** | சிறைச்சாலைகள் திணைக்களம் | சிறைச்சாலைகள் சீர்திருத்தங்கள், புனர்வாழ்வு, மீள்குடியேற்ற, மற்றும் இந்து சமய அலுவல்கள் அமைச்சு | 24.02.2016 | 94 |
| **17** | புகையிரத திணைக்களம் | போக்குவரத்து, சிவில் விமான சேவைகள் அமைச்சு அமைச்சு | 25.02.2016 | 98 |

| | | | | |
|---|---|---|---|---|
| **18** | ஊழியர் சேமலாப நிதியம் | தொழிலாளர் தொழிற்சங்கங்கள் தொழில் உறவுகள்/ தேசிய கொள்கைகள், பொருளாதார விவகாரங்கள் அமைச்சு | 26.02.2016 | 102 |
| **19** | வலுவாதார அபிவிருத்தி மற்றும் வனசீவராசிகள் அமைச்சு | - | 08.03.2016 | 105 |
| **20** | வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம் | நிலையான அபிவிருத்தி மற்றும் வன விலங்குகள் பற்றிய அமைச்சு | 08.03.2016 | 106 |
| **21** | தேசிய விலங்கினக் காட்சிசாலை திணைக்களம் | நிலையான அபிவிருத்தி மற்றும் வன விலங்குகள் பற்றிய அமைச்சு | 08.03.2016 | 109 |
| **22** | தேசிய தாவரவியல் பூங்காத் திணைக்களம் | நிலையான அபிவிருத்தி மற்றும் வன விலங்குகள் பற்றிய அமைச்சு | 08.03.2016 | 114 |
| **23** | கல்வி வெளியீடுகள் திணைக்களம் | கல்வி அமைச்சு | 10.03.2016 | 117 |
| **24** | தேசிய சுவடிக்கூடத் திணைக்களம் | கல்வி அமைச்சு | 10.03.2016 | 122 |
| **25** | காணி நிர்ணயத் திணைக்களம் | காணிகள் அமைச்சு | 10.03.2016 | 120 |
| **26** | நில அளவையாளர் திணைக்களம் | காணிகள் அமைச்சு | 10.03.2016 | 121 |
| **27** | தேசிய நல்லிணக்க, டயலொக் மற்றும் அரச கரும மொழிகள் பற்றிய அமைச்சு | - | 10.03.2016 | 124 |
| **28** | தேசிய மொழிகள் திணைக்களம் | தேசிய நல்லிணக்க, டயலொக் மற்றும் அரச கரும மொழிகள் பற்றிய அமைச்சு | 10.03.2016 | 126 |
| **29** | கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சு | - | 11.03.2016 | 128 |
| **30** | வாணிபத் திணைக்களம் | கைத்தொழில் மற்றும் வானிப அலுவல்கள் அமைச்சு | 11.032016 | 130 |
| **31** | கம்பனிகள் பதிவாளர் திணைக்களம் | கைத்தொழில் மற்றும் வானிப அலுவல்கள் அமைச்சு | 11.032016 | 132 |
| **32** | அளவுக் கூறுகள் கட்டளைகள் மற்றும் சேவைகள் திணைக்களம் | கைத்தொழில் மற்றும் வானிப அலுவல்கள் அமைச்சு | 11.032016 | 134 |
| **33** | விவசாய ஏற்றுமதித் திணைக்களம் | ஆரம்பக் கைத்தொழில் அமைச்சு | 11.032016 | 134 |
| **34** | சுங்கத் திணைக்களம் | நிதி அமைச்சு | 23.03.2016 | 136 |
| **35** | மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களம் | போக்குவரத்து.᾿.சிவில் விமான சேவைகள் அமைச்சு | 24.03.2016 | 138 |

| | | | | |
|---|---|---|---|---|
| **36** | *தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சு* | - | 07.04.2016 | 141 |
| **37** | தொழில் திணைக்களம் | தொழிலாளர் தொழிற்சங்கங்கள் தொழில் உறவுகள் | 07.04.2016 | 142 |
| **38** | மனிதவலு மற்றும் தொழில்துறைத் திணைக்களம் | தொழிலாளர் தொழிற்சங்கங்கள் தொழில் உறவுகள் | 07.04.2016 | 143 |
| **39** | கமத்தொழில் அமைச்சு | - | 07.04.2016 | 145 |
| **40** | கமத்தொழில் திணைக்களம் | கமத்தொழில் அமைச்சு | 07.04.2016 | 147 |
| **41** | கமநல சேவை அபிவிருத்தித் திணைக்களம் | கமத்தொழில் அமைச்சு | 07.04.2016 | 148 |

**பொது அவதானிப்புகள், தீர்மானங்கள் மற்றும் விதப்புரைகள்**

**01. துணை நிறுவனங்களின் கணக்காய்வு போதியதாகவின்மை**

கணக்காய்வாளர் அமைச்சுக்களையும் திணைக்களங்களையும் கணக்காய்வு செய்கையில் அவற்றின் கீழுள்ள துணைக் கம்பனிகள் அனைத்தையும் ஆழமான கணக்காய்வுக்கு உட்படுத்துவதில் நடைமுறைச் சிரமங்கள் இருக்கின்றன எனக் குழு அவதானித்து.

இதற்கு உதாரணமாக, சுகாதார அமைச்சு கணக்காய்வு செய்யப்படுகையில் அதன் கீழுள்ள வைத்தியசாலைகள் அனைத்தும் வேறாக ஆழமாக கணக்காய்வு செய்யப்படாமை மற்றும் இவை தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள் கணக்காய்வு அறிக்கைகளில் பிரதிபலிக்கப்படாமை போன்ற விடயங்கள் பற்றியும் குழுவின் கவனம் செலுத்தப்பட்டது.

இதன்படி அனைத்துத் துணை நிறுவனங்களையும் ஆழமாகவும் விரிவாகவும் கணக்காய்வு செய்வதற்கு கணக்காய்வாளர் நாயகத்துக்குச் சொந்தமான வளங்கள் போதியதாக இல்லை என வெளியாகியுள்ளதுடன், இத்திணைக்களத்தை பௌதிக மற்றும் மனித வளங்களைக்கொண்டு வலுவூட்ட வேண்டும் என்பது குழுவின் விதப்புரையாகும்.

உள்ளகக் கணக்காய்வுப் பிரிவுகளை வலுவூட்டிச் செயற்றிறன் கொண்டதாக மாற்றுவதனூடாக இந்தத் துணை அலுவலகங்களைக் கணக்காய்வுக்கு உட்படுத்தல் மேலே குறிப்பிட்ட பிரச்சினைக்கு ஒரளவு தீர்வாக அமையுமென குழு விதப்புரை செய்கின்றது.

**02. அரச நிறுவனங்களில் கணினித் தகவல் தொழில்நுட்ப உபயோகம் பலவீனமான மட்டத்திலுள்ளமை**

அரச நிறுவனங்களில் கணினித் தகவல் தொழில்நுட்ப வேலைத் திட்டங்களுக்கு பெருமளவில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட போதிலும் இவ்வேலைத் திட்டங்கள் முடிவுறாத நிலைமைகள் பெருமளவில் காணப்படுகின்றன எனவும் அரச நிறுவனங்களினால் தகவல் தொழில்நுட்பம் பயன்படுத்தப்படுகின்ற முறைபற்றித் திருப்தியடைய முடியாது எனவும் வெளியாகியது.

கணனி மென்பாகத் தரவுத் தளம் ஒன்று நிறுவனத்திற்கு இல்லாத காரணத்தினால் அத்தகைய தகவல்கள் பேணப்படுவது கோவைகளின் மூலமாகும். கோவைகள் காணப்போதல், ஒழுங்கற்ற விதத்தில் கோவைகள் பேணிச்செல்லப்படுதல் முதலியன நிறுவனங்களில் சுமுகமாக காணக்கூடிய விடயங்களாகும். கணனி மென்பாகத் தரவுத் தளம் ஒன்று இருக்குமாயின் இந்தக் குறைபாடுளை நிவரத்திசெய்ய முடியும்.

எதிர்வரும் 02 வருடங்களில் அல்லது அதற்கு மேல்பட்ட ஒரு கலாப் பகுதியினுள் பயனுள்ளதாகவும் மற்றும் வினைத்திறன் வாய்ந்ததாகவும் அரசாங்கத் திணைக்களங்களில் தகவல் தொழில்நுட்ப பாவனையைக் கட்டாயப்படுத்தும் பொருட்டு கொள்கை ரீதியான தீர்மானங்கள் எடுக்கப்பட வேணடியுள்ளது.

நிறுவனங்களில் தகவல் தொழில்நுட்பம் தொடர்பில் நடவடிக்கை மேற்கொள்வதற்கு இந்நிறுவனங்களில் இதுதொடர்பான தொழில்வாண்மை அறிவுள்ளவர்கள் காணப்படாததும் இந்நிலைமைக்குக் காரணமாகியிருப்பதனால் எல்லா நிறுவனங்களுக்கும் தகவல் தொழில்நுட்பம் தொடர்பான அறிவுள்ள நபர்களைச் சேர்த்துக்கொள்வதும் முக்கியமானது.

**03. நிறுவனத்தின் /பணியாட்டொகுதியின் செயல்திறன் மதிப்பீடு போதிய மட்டத்திலில்லாமை**

சில அரச நிறுவனங்களில் நிறுவன சார்/பணியாட்டொகுதி செயல்திறன் மதிப்பீடு உரிய முறையில் மேற்கொள்ளப்படுவதில்லை என்பதைக் குழு அவதானித்தது.

எல்லா நிறுவனங்களும் தனது நிறுவனத்தினதும் பணியாட்டொகுதியினதும் செயல் நிறைவேற்ற மதிப்பீட்டை வருடாந்தம் மேற்கொள்வதனூடாக ஊழியர்கள் ஊக்குவிக்கப்படுவதனூடாக மிகப் பயனுள்ள சேவையைப் பெற்றுக்கொள்ளலாம்.

நிறுவனத்தின் செயல்தின் மதிப்பீடு ஒன்றை வருடாந்த அடிப்படையில் மேற்கொள்வதன் மூலம் நிறுவனத்தில் காணப்படுகின்ற பலவீனங்களையும் மற்றும் ஆற்றல்களையும் இனங்கண்டு நிறுவனத்தின் இலக்கை இலகுவில் அடைய முடியும்.

**04. குழுவின் விதப்புரைகளை அமுல்படுத்துவதில் பலவீனமான நிலை காணப்பட்டமை**

குழுவினால் வழங்கப்படும் விதப்புரைகள் நிறுவனத்தை மீண்டும் குழுவின் முன்னே அழைக்கும்வரை செயற்படுத்தப்படாத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. அவ்வாறான சந்தர்ப்பங்களில் சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் குறிப்பிட்டதொரு காலப்பகுதிக்குள் மீண்டும் மீண்டும் குழுவிற்கு அழைக்கப்பட்டு புலனாய்வு செய்யப்படுவதுடன் அதனூடாக தீர்வுகள் கிடைக்காதவிடத்து அது பற்றிய தகவல்களை அரசாங்க கணக்குகள் குழு அறிக்கையில் சேர்க்கப்பட்டு பாராளுமன்றத்திலும் முன்வைக்கப்படும். குழுவினால் வழங்கப்படும் விதப்புரைகள் தொடர்பில் பி.க.அ/க.அ. கூடிய கவனம் செலுத்தி அவ்விதப்புரைகளை செயற்படுத்த வேண்டுமென்பதுடன், அவை பற்றி பின்னாய்வு செய்வதனூடாக நிறுவனங்களில் வினைத்திறனை அதிகரிக்கச் செய்யலாம்.

### 05. சட்டங்கள் காலத்திகு ஏற்ற வகையில் திருத்தப்படாமையும் அத்தகைய சட்டங்கள் பின்பற்றப்படாமையும்

சில நிறுவனங்களில், தாபிக்கப்பட்ட நோக்கங்களுக்கும் எதிர்பார்க்கப்படும் பணிகள் மற்றும் இந்நிறுவனங்களினால் மேற்கொள்ளப்படும் ஒருசில நடவடிக்கைகளுக்குமிடையில் பொருத்தமற்ற தன்மைகள் இருப்பதாக அறியக்கூடியதாக இருந்தது.

உதாரணமாக, சுங்கத் திணைக்களத்தினூடாக 1989ஆம் ஆண்டின் 13ஆம் இலக்க உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தை முழுமையாக செயற்படுத்துவதற்கான ஏற்பாடுகள் முழுமையாகச் செய்யப்பட்டிருக்கவில்லை என்பதுடன், இதன்மூலம் நாடு இழக்கும் வரி வருமானம் பெருந்தொகையானதாகும். அவ்வாறே மதுவரித் திணைக்களத்தினால் புகையிலை வரிச் சட்டத்தின் ஒருசில அதிகாரங்கள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

நடைமுறையிலுள்ள சட்ட விதிகளுக்கமைய நடந்துகொள்வது அத்தியாவசியமான விடயமென்பதுடன், ஏதேனும் சட்டத் திருத்தம் தேவைப்படின் அதுதொடர்பில் துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவும் வேண்டும்.

### 06. கடமைப் பொறுப்புகள் மற்றும் ஆவணக் கோப்புகளை ஒப்படைக்கும்போது உரிய முறையில் ஒப்படைக்கப்படாமை

அரச அலுவலர்களுக்கு இடமாற்றம் வழங்குகையில் ஒரு நிறுவனத்துக்கு இணைக்கப்படுகின்ற புது அலுவலர்களுக்குரிய கடமைப் பொறுப்புகள் மற்றும் ஆவணக் கோப்புகள் உரிய முறையில் ஒப்படைக்கப்படாததால் குழுவின் முன்னே அழைக்கப்படும்போது உரிய கணக்காய்வு வினாக்களுக்குப் பதில் வழங்க முடியாமை மற்றும் நிறுவத்தின் செயற்பாடு தொடர்பான போதிய அறிவு இன்மை அவதானிக்கப்பட்டதுடன், இதன் காரணத்தினால் நிறுவனத்தில் நடைபெறும் ஏதேனும் முறைகேடுகளைத் திருத்திக்கொள்வதற்கு புரிந்துணர்வுடன் செயற்படுவதில் அசௌகரியங்கள் காணப்படுகின்றன எனவும் அவதானிக்கப்பட்டது.

ஆவணங்களும் மற்றும் பொறுப்புக்களும் ஒப்படைக்கப்படும் போது சிரேஸ்ட அதிகாரி ஒருவரின் மேற்பார்வையின் கீழ் எழுத்தில் இந்த விடயம் மேற்கொள்ளப்படுதல் வேண்டும் என்பதுடன் நிறுவனத்தின் செயற்பாடுகள் பற்றி புதிய அலுவலருக்கு சரியான முறையில் கற்றுக்கொடுத்தலும் வேண்டும்.

### 07. உள்ளக ஆய்வுகளை மேற்கொள்ளும் செயற்பாடுகள் பலவீனமடைதல்

நிறுவனங்களுள் நடைபெறும் ஊழல்கள், முறைகேடுகள், அரச நிதி தவறான பயன்பாடு, பலவீனமான முகாமைத்துவம் மற்றும் நிருவாக அலுவல்கள் பற்றி வெளிநிறுவனங்களால் (உதாரணம்: பொலிஸ் ஊடாக) புலனாய்வுகள் மேற்கொள்ளப்படும் சந்தர்ப்பங்கள் இருந்தபோதிலும் நிறுவன உள்ளக புலனாய்வுகள் மேற்கொள்ளப்படாத அல்லது அவை முறையாக முன்னெடுக்கப்படாத சந்தர்ப்பங்கள் குழுவினால் அவதானிக்கப்பட்டன. அதனால், நிறுவன ரீதியில் நடைபெறும் தவறுகள் மற்றும் பலவீனங்கள் தொடர்பில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ள கட்டமைப்பு ரீதியான மற்றும் நிறுவன ரீதியான பலவீனங்களை அடையாளம்கண்டு அவற்றைத் திருத்திக்கொள்வதற்கான சந்தர்ப்பங்கள் கிடைக்காதுபோது, அதற்குத் தீர்வாக நிரல் அமைச்சின் செயலாளாரின் நேரடி பங்களிப்பின் ஊடாக சரியான மற்றும் முறையான உள்ளக ஆராய்வுகளை துரிதமாக மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டுமென குழு தீர்மானித்தது.

### 08. அரச உத்தியோகத்தர்களின் தொழில் பாதுகாப்பு

அரச உத்தியோகத்தர்கள் எதிர்நோக்கிவரும் அரசியல் மற்றும் வேறு தாக்கங்களால் அரச நிதி தவறான முறையில் பயன்படுத்தப்பட்ட சந்தர்ப்பங்களில் அரச உத்தியோகத்தர்களால்

பணிகளை சரியான முறையில் நிறைவேற்றத் தவறுதல் தொடுர்பில் குழு அவதானித்தது. அதேபோல், தங்கள் பொறுப்புகளை நிறைவேற்றும்போது அரச உத்தியோகத்தர்களுக்கு கிடைக்கவேண்டிய சட்டரீதியான மற்றும் நிர்வாகரீதியான பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்காக தகுந்து பொறிமுறையொன்றை அமைத்தல் முக்கிய தேவையாகுமென குழு கருதுகின்றது.

**09. பதவியிலிருந்து விலகும்போது நிதி / உபகரணங்கள் / சொத்துக்கள் போன்றவற்றை மீளறவிடுவதில் பலவீனம்**

அரச அலுவலர்கள் சேவையிலிருந்து ஓய்வுபெறுதல், பணிநீக்கம் செய்யப்படல், மரணித்தல் மற்றும் பதவி விட்டு நீங்கும்போது அரசுக்கு அறிவிடப்பட வேண்டிய நிதி / உபகரங்கள் / சொத்துக்கள் போன்றவற்றை அறவிடுவது உரிய முறையில் நடைபெறுவதில்லையென அவதானிக்கப்பட்டது.

இதுதொடர்பான பொது வேலைத்திட்டமொன்றையும் சட்டத் தொகுதியொன்றையும் அமைப்பது முக்கியமானதாகும்.

**10. நிதி அமைச்சினால் (பொதுத் திறைசேரி) மேற்கொள்ளப்படும் பின்னாய்வு**

சில சந்தர்ப்பங்களில் ஒரு குறிப்பிட்ட பணிக்கென நிறுவனமொன்றுக்கு ஒதுக்கப்படும் நிதி ஏற்பாடுகள் வேறு பணிகளுக்காக ஈடுபடுத்தப்படும் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

அரச நிறுவனமொன்றுக்கு திறைசேரியினால் நிதி ஒதுக்கீடுகள் செய்யப்பட்டதன் பின்னர் இதுதொடர்பாக பின்னாய்வு செய்வது அத்தியாவசிய விடயம் என்பதை அரசாங்கக் கணக்குக் குழு வலியுறுத்துகின்றது. இதன்மூலம் நிதி முறைகேடாக உபயோகிக்கப்படுவதைத் தவிர்க்கவும் உரிய முறையில் தேவையான பணிகளைக் குறிப்பிட்ட கால எல்லைக்குள் நிறைவு செய்துகொள்வதற்கும் முடியுமாகின்றது.

**11. ஊழியர் வெற்றிடங்ளை நிரப்புவதில் தாமதம்**

நிறுவனங்களில் நீண்ட காலமாக வெற்றிடங்கள் நிலவுவது அவற்றின் பணிகளை வெற்றிகரமாக நிறைவேற்றிக்கொள்வதற்குத் தடையாகின்றது எனவும் சில சந்தர்ப்பங்களில் ஒப்பந்த அடிப்படையில் ஊழியர்களைச் சேர்த்து நீண்ட காலமாக நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டி வருகின்றதெனவும் குழு அவதானித்தது.

வெற்றிடங்களை நிரப்புகையில் அரச சேவை ஆணைக்குழு, முகாமைத்துவ சேவைத் திணைக்களம் மற்றும் பொது நிருவாக அமைச்சு உரிய நிறுவனங்களுடன் இணைந்து துரிதமானதும் முறையானதுமான வேலைத் திட்டமொன்றை ஆரம்பிப்பது முக்கியமாகும். அவ்வாறே வருடாந்த செயற்பாட்டுத் திட்டத்தைத் தயாரிக்கையில் நிறுவனத்தின் எதிர்பார்க்கப்படும் இலக்குகள் மற்றும் நோக்கங்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்படுவதைப் போன்றே மனித வளங்கள் தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட வேண்டும்.

**12. ஏற்பாடுகள் / வளங்களின் குறை பயன்பாடு**

அநேகமான நிறுவனங்களில் வருடாந்த நிதி ஏற்பாடுகளில் / வளங்களில் குறை பயன்பாடு ஏற்படுகின்றமை அவதானிக்கப்பட்டுள்ளதோடு இதனால் நாட்டின் அபிவிருத்திக் கொள்கைச் செயற்பாட்டில் எதிர்மறையான தாக்கங்கள் ஏற்படுகின்றமை அவதானிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலைமையைத் தவிர்த்துக்கொள்ளும் பொருட்டு நிறுவனத்தின் நோக்கம் மற்றும் இலக்குகள் என்பவற்றை அடிப்படையாக கொண்டு, விசேட அறிவைப் பயன்படுத்தி, குறுங்கால மற்றும் நீண்ட கால செயல்திட்டங்கள் தயாரிக்கப்படுதல் வேண்டும்.

எதிர்பார்க்கப்படாத சம்பவங்களால் நிதி ஏற்பாடுகளின் குறைபயன்பாடு ஏற்படுமாயின், அதுபற்றி திறைசேரிக்கு அறிவித்து தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும் என்பதுடன், வருடாந்த மதிப்பீடுகளை தயாரிக்கும் போது தொடர்புடைய அரச நிதிச் சுற்றறிக்கைகளைத் தழுவியதாக செயற்பாட்டுத் திட்டங்கள் தொடர்பிலும் கவனம் செலுத்துதல் முக்கியமானதாகும்.

**13. தடுத்து வைத்திருக்கும் பணத்தொகையை செலுத்தித் தீர்ப்பதிலுள்ள (Retention Balance) பிரச்சினைகள்**

ஒப்பந்த அடிப்படையில் பணிகளை நிறைவேற்றிக்ொகாள்கின்றபோது நிறுவனங்களால் தடுத்து வைத்திருக்கும் பணத்தொகைகளை செலுத்தித் தீர்க்கின்றபோது ஒப்பந்த வேலைகளை இடையில் நிறுத்திவிட்டுச் செல்லல் மற்றும் குறிப்பிட்ட காலகட்டத்தினுள் நிறைவு செய்யாதிருத்தல் போன்ற காரணங்களால் பல சிக்கலான நிலைமைகள் ஏற்படுவதும் அவதானிக்கப்பட்டது.

ஒப்பந்தக்காரர்களை தெரிவு செய்யும் போது அவர்களது தொழில்சார் அனுபவத்தையும் நம்பகத்தன்மையையும் பற்றி கவனம் செலுத்த வேண்டும் என்பதோடு உடன்படிகை செய்துகொள்ளும் போது அதில் உள்ளடக்கப்டுகின்ற விடயங்களின் சட்டரீதியான தன்மையையும் அதில் அடங்குகின்ற நிபந்தனைகள் பற்றியும் கூடிய கவனம் செலுத்துதல் வேண்டும் என்பதோடு இது தொடர்பாக பொதுவான கோள்கைத் தீர்மானங்கள் எடுக்கப்பட வேண்டும்.

**14. கணக்காய்வு விசாரணைகளுக்கு பதில்களை அனுப்புவது தொடர்பில் அதிருப்தி**

கணக்காய்வு வினாக்களுக்கு பதிலளித்தல் உரிய காலகட்டத்திற்குள் பூர்த்தி செய்யப்படுவதில்லை என்பதும் சில கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதில் கிடைப்பதில்லையென்பதும், அநேகமான ஐயவினாக்கள் தொடர்பாக கணக்காய்வாளர் தலைமையதிபதி திருப்தியடையக்கூடிய விதத்தில் பதில் கிடைப்பதில்லையென்பதும் அவதானிக்கப்பட்டுள்ளது.

உரிய காலகட்டத்தினுள் ஏற்புடைய கணக்காய்வு ஐயவினாக்கள் பற்றி சரியாக ஆராய்ந்து பார்த்து சரியான பதில்களை கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு அனுப்புவதற்கு நிறுவனத் தலைவர்கள் ஆவனசெய்தல் வேண்டும் என்பதுடன், நிறுவனங்களில் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்று இருக்கவேண்டும் என்பதும் முக்கியமானது.

**15. கணக்காய்வுக் குழுக் கூட்டங்கள் போதியளவில் இடம்பெறமை**

DMA / 2009 (1) ஆம் இலக்க மற்றும் 09 / 06/ 2006 ஆம் திகதிய முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கையின் பிரகாரம் 4 வருடாந்த கூட்டங்கள் கட்டாயமாக நடைபெறவேண்டுமென்ற போதிலும் பல நிறுவனங்களில் அவ்வாறு நடைபெறுவதில்லையென அவதானிக்கப்பட்டுள்ளது.

முகாமைத்துவ கணக்காய்வுக் குழு அறிக்கைகள் பிரதம கணக்கீட்டு அலுவலருக்கு சமர்ப்பிக்கப்படுதல் கட்டாயமானதென்பதால் அதனூடாக நிறுவனங்களின் குறைபாடுகள், பலவீனங்களைப் பற்றி அறிந்துகொண்டு அவை தொடர்பாக துரிதமாக நடவடிக்கை எடுக்க பிரதம கணக்கீட்டு அலுவலருக்கு முடியுமென்பதால் வருடாந்தம் குறைந்தபட்சம் 4 கூட்டங்களாவது நடத்தப்படுதல் முக்கியமானதாகும்.

**16. பாராளுமன்ற அரச கணக்குக் குழுவிற்கான அதிகாரங்கள் போதிய நிலையில் இல்லாமை.**

நிலையியற் கட்டளை 125இன்படி குழுவினால் கடுமையான கட்டளைகளைப் பிறப்பிப்பதற்கு பாராளுமன்ற நிலையியற் கட்டளைகளின் பிரகாரம் சாத்தியமில்லை என்பதால் அரசாங்கக் கணக்குக் குழுவினால் வழங்கப்படும் விதப்புரைகள் அவ்வளவு பயனுறுதியுள்ளதாகச் செயற்படுவதில்லையென அவதானிக்கப்பட்டுள்ளது. குழுவின் அதிகாரங்களை அதிகரிப்பதற்கு நிலையியற் கட்டளைகளைத் திருத்துவது அவசியமாகும்.

விசேட அவதானிப்புகள்

**ஊழியர் சேமலாப நிதியம்**

சில சந்தர்ப்பங்களில் தொழில் திணைக்களத்திற்கும் மத்திய வங்கிக்குமிடையிலுள்ள தொடர்ப்பும் விழிப்புணர்வூட்டப்படலும் மற்றும் ஒத்துழைப்பும் போதுமானதல்ல என்பது அவதானிக்கப்பட்டுள்ளது.

தொழில் திணைக்களமும் மத்திய வங்கியும் ஒருங்கணைந்ததொரு குழுவின் ஊடாக இடைத் தொடர்புகளை மேம்படுத்திக்கொள்ளல் முக்கியமானதாகும்.

தொழில் திணைக்களத்தினால் ஏற்புடைய நிறுவனங்களிலிருந்து தகவல்களை பெற்றுக்கொள்ளும் முறையியலாகிய தொழில் உத்தியோகத்தகளைக் கொண்டு வெளிக்கள விசாரணைகளின் மூலமாக தகவல்களை பெற்றுக்கொள்வதற்கு மேலதிகமாக நிறுவனங்கள் மற்றும் திணைக்களங்களின் மாவட்ட அலுவலகங்களுக்கு இடையே ஒன்றிணைக்கப்பட்ட கணனி வலையமைப்பொன்றின் மூலமாக தகவல்களை திரட்டுதல் முக்கியமானதாகும்.

ஊழியர் சேமலாப நிதியம் அதிக பயனுறுதியான விதத்தில் முதலீடு செய்யக்கூடிய வகையிலான வேலைத்திட்டமொன்றை தயாரித்தல் முக்கியமாகும்.

**தொழில் ஆணையாளர் திணைக்களம்**

சேவை பெறுநர்களுக்கு விபத்து ஏற்படும் போது இழப்பீடு செலுத்துதல் பற்றிய தெளிவான முறையியலொன்று ஏற்புடைய சட்டத்தில் குறிப்பிடப்படவில்லை என்பதும், விபத்து ஏற்பட்ட சந்தர்ப்பத்திற்கு ஏற்ப இழப்பீடு வழங்கல் / வழங்காமை நடைபெறுவதாக தெரியவந்துள்ளது.

சேவை பெறுநருக்கு இதை விடவும் நன்மை கிடைக்கும் விதத்தில் தொடர்புடைய சட்டங்கள் தேவையான விதத்தில் திருத்தப்பட வேண்டும்.

சேவை பெறுநருக்கு எதேனும் விபத்து ஏற்பட்ட போது அவரது தங்கிவாழுநர்களுக்கு இழப்பீடு பெற்றுக் கொள்ள முடியுமென்பது தொடர்பான விழிப்புணர்வு போதுமானதல்லவென்பது வெளியாகியுள்ளதோடு அரச நிறுவனங்களில் செயற்படுத்தப்படுகின்ற இத்தகைய வேலைத்திட்டங்கள் பற்றி ஆலோசனைத் துண்டுப் பிரசுரங்கள் மூலமாகவோ அல்லது மாற்று வழிமுறைகள் மூலமாகவோ மக்கள் அறிவூட்டப்படுதல் வேண்டும்.

**சுங்கத் திணைக்களம்**

உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டம் போன்ற தற்போதுள்ள சட்டங்களும் ஒழுங்குவிதிளும் காலத்திற்கேற்ப மாற்றப்படாத காரணத்தினால் அரசாங்கத்திற்கு சேரவேண்டிய வருமானம் இழக்கப்படும் சந்தர்ப்பங்கள் பற்றி அவதானிக்கப்பட்டது. ஆகையால் நிலவுகின்ற குறைப்பாடுகளை நிவர்த்தி செய்வதற்காக தொடர்புடைய சட்டங்கள் திருத்தப்பட வேண்டும் என்பதோடு சுங்கத் திணைக்களமும் மற்றும் அதனுடன் தொடர்புடைய ஏனைய நிறுவனங்களும் ஒன்றிணைக்கப்படும் வகையில் கணனி தகவல் தரவு முறைமை வலையமைப்பொன்றை உருவாக்குவதன் மூலமாக நிலவுகின்ற குறைப்பாடுகளை குறைத்துக்கொள்ளவும் அதன் மூலமாக அரசிறையை அதிகரித்துக்கொள்ளவும் வாய்ப்புக் கிடைக்கும்.

**அரச கருமமொழிகள் திணைக்களம்**

மொழிபெயர்ப்புச் சேவை தற்போதுள்ள நிலைமையைவிடவும் பாராட்டப்பட வேண்டியதொரு துறையாகும் என்பதை இணங்கண்டுள்ள குழு அது தொடர்பாக அதிக கவனம்செலுத்துவது முக்கியமானதென்பதையும் தேசிய மொழி பெயர்ப்புச் சேவையொன்றை தாபித்தல் காலத்தின் தேவையாகும் என்பதையும் விதந்துரைக்கின்றது.

**அரசாங்க சுவடிகூடத் திணைக்களம்**

2010 முதல் 2016 மார்ச் வரை உதவிப் பணிப்பாளர் பதவி நிரப்பப்படவில்லை என்பதும் நீண்ட காலமாக நிலவி வருகின்ற (சுமார் 53%) பணியாட்டொகுதி வெற்றிடங்கள் காரணமாக நிறுவனத்தின் பணிகளுக்கு தடை ஏற்பட்டுள்ளமையும் அவதானிக்கப்பட்டுள்ளது.

இத்தகைய சந்தர்ப்பங்களில் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம், சம்பள ஆணைக்குழு உட்பட தொடர்புடைய அனைத்து பிரிவுகளும் ஒன்றிணைந்து துரித நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதோடு தொடர்புடைய அமைச்சரை விழிப்புணர்வூட்டலும் முக்கியமானதாகும்.

**எற்றுமதி விவசாய திணைக்களம்**

வெளிநாட்டுக் கேள்வி தொடர்பில் கவனம் செலுத்தி பாரம்பரிய ஏற்றுமதிகளுக்கு மேலதிகமாக எற்றுமதி விவசாய பல்வகைப்படுத்தலின் மூலமாக வெளிநாட்டுச் செலாவணியை அதிகரித்துக்கொள்ள இயலுமாவதால் அது சம்பந்தமாக அரசாங்கத்தின் கவனம் செலுத்தப்பட வேண்டும் என்பதோடு தற்போதுள்ள சட்டங்களுக்கு முரணாகாத விதத்தில் சட்டங்களை வகுத்து வல்லாபட்டா போன்ற பயிர்ச்செய்கை தொடர்பாகவும் கவனம் செலுத்துதல் முக்கியமானதாகும்.

**மோட்டார் வாகன போக்குவரத்து  திணைக்களம்**

கடிதக் கோப்புகளை பராமரித்தல், பேணிவருதல், களஞ்சியப்படுத்தல் மிகவும் முறைசாரா விதத்திலும் பொறுப்பற்ற விதத்தில் கொண்டுநடாத்தப்படுவதும் கணக்காய்வாளர் தலைமையதிபதியின் கணக்காய்வுப் பணிகளுக்குத் தேவையான கடிதக் கோப்புகளை சமர்ப்பிக்காமையும், கடிதக் கோப்புகள் காணாமற் போயுள்ளமையும் அவதானிக்கப்பட்டதோடு, அது தொடர்பாக குழுவின் பலத்த அதிருப்தி தெரிவிக்கப்பட்டது. இதனால் கணக்காய்வுச் செயற்பாட்டுக்கு தடைகள் ஏற்படுமென்பதையும் இலஞ்சம் மற்றும் ஊழல்கள் ஏற்படுவதற்கான வாய்ப்பு உருவாகுமென்பதையும் குழு வலியுறுத்துகின்றது. குழுவின் மேற்பார்வைப் பணிகளுக்காக கணக்காய்வு தலைமையதிபதியினால் கோரப்பட்ட கடிதக் கோப்புகளின் எண்ணிக்கை 597 கோரப்பட்டபோதிலும் 33 கோவைகள் மட்டுமே முன்வைக்கப்பட்டன. (இணைப்பு 03)

தற்போது அதிக செலவுடன் ஆரம்பிக்கப்பட்டுள்ள ஈ-மோட்டரின் கருத்திட்டத்தை துரிதப்படுத்தாமையின் காரணமாக இலங்கைச் சுங்கத் திணைக்களம் போன்ற நிறுவனங்களின் கணனிமயப்படுத்தப்பட்டுள்ள ஆவணங்களை உடனடியாக பெறமுடியாமையினால் பதிவுசெய்யும் போது போலி ஆவணங்களை பயன்படுத்தி பாரிய அளவில் மோசடிச் செயல்கள் மேற்கொள்ளப்பட்டிருப்பது குழுவுக்கு அறியவந்துள்ளது.

**பரீட்சைகள் திணைக்களம்**

இத் திணைக்களத்தின் ஒட்டுமொத்த செயலாற்றுகைச் செயற்பாடு திருப்திகரமான மட்டத்தில் இருக்கின்றது. கணனித் தரவுகள் நிகழ்ச்சித்திட்டம், எதிர்கால பரீட்சைத் திட்டங்கள், புதிய தொழில்நுட்ப முறைகளை பயன்படுத்திக்கொள்ளல் மற்றும் நம்பத்தன்மையைக் கொண்ட விதத்தில் பரீட்சைகள் நடத்தப்படல் போன்ற விடயங்கள்

சாதகமான வளர்ச்சியை காட்டுகின்றது. இது தொடர்பாக அத் திணைக்களத்திற்கு குழுவின் பாராட்டு உரித்தாகின்றது.

**விலை மதிப்பீட்டுத் திணைக்களம்**

விலைமதிப்பீட்டுத் திணைக்களத்தில் 87 பதவி வெற்றிடங்கள் இருந்துவருவதுடன், அவற்று 34 சிரேஷ்ட உத்தியோகத்தர்களுக்கான பதவி வெற்றிடங்களாக இருப்பதால், திணைக்களத்தின் மதிப்பீட்டு அறிக்கைகள் காலதாமதம் அடைவதற்கும் நட்டஈடுகளை வழங்குவதில் காலதாமதம் ஏற்படுவதற்கும் அது காரணமாக அமைந்துள்ளது. அதனால், தேசிய அபிவிருத்திக்கு ஏற்படும் தாக்கங்கள் பற்றி குழு கவனம் செலுத்தியது. பதவியணியில் வெற்றிடங்கள் நிலவிவருகின்றபோதிலும் மொத்த செயலாற்றுகையை சாதகமான நிலையில் செயற்படுத்துவதற்கு திணைக்களத்துக்கு இயலுமை கிடைத்துள்ளது.

# 2016 ஆம் ஆண்டில் அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுக் கூட்டங்களில் புலனாய்வு செய்யப்பட்ட பிரதானமான பிரச்சினைகளும் அவதானிப்புகளும்

| | **கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்** | **பிரதம கணக்கீட்டு அலுவலரின்/ கணக்கீட்டு அலுவலரின் விடயங்கள் பற்றிய தெளிவுபடுத்தல் மற்றும் குழுவின் கருத்துகள்/கட்டளைகள்** |
|---|---|---|
| | **சுங்கத் திணைக்களம்**<br>**2016 சனவரி 09** | |
| 1 | 2015 யூலை 30 ஆம் திகதிக்கு அரச நிறுவனங்களிலிருந்து கிடைக்க வேண்டிய ரூபா18,865,901,197/= நிலுவை வரி வருமானத்தை அறவிடுவதற்கு மேற்கொண்டுள்ள நடவடிக்கை | மேற்படி நிலுவைப் பணத்தை அறவிடுவதற்குத் தேவையான நடவடிக்கைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் புதிய வரவு செலவுத்திட்ட பிரேரணைகளை செயற்படுத்துபோது அத்தகைய சிக்கல்கள் ஏற்படாதெனவும் பி.க.அ. குறிப்பிட்டார். |
| 2 | மோட்டார் வாகன உதிரிப்பாகங்களை ஒன்றுகூட்டி பொருத்தும் கம்பனியிலிருந்து 2003 – 2006 காலகட்டத்திற்காக அறவிட வேண்டிய ரூபா 4,362,899/= மொத்த வரிப் பணத்தில் ரூபா 2,181,449/= மாத்திரம் செலுத்தப்பட்டுள்ள போதிலும் குறிப்பிட்ட கம்பனிக்கு மொத்த பணத்திற்கும் வரிச் சலுகை வழங்கியுள்ளமை | அறவிட வேண்டிய மொத்தப் பணத்தொகை தற்போது அறவிடப்பட்டுள்ளதாக கணக்கீட்டு அலுவலர் குறிப்பிட்டுள்ளதோடு மேற்படி அறவிடுதல் தொடர்பாக விபரமான அறிக்கையொன்றை குழுவுக்கு சமர்ப்பிக்கும்படி கணக்கீட்டு அலுவலருக்கு கட்டளை இடப்பட்டது. |
| 3 | வங்கிப் பிணை மூலமாக 269 வாகன அடிச்சட்டங்களை இறக்குமதி செய்துள்ள கம்பனியிடமிருந்து உற்பத்தி வரியாக செலுத்த வேண்டிய ரூபா 9.2 மில்லியன் அறவிடப்படாமை | வாகன விற்பனையின் போது மேற்படி வரித்தொகையை சுங்கத் திணைக்களம் பண அனுப்பல் வகையில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்திருப்பதோடு மேற்படி வாகனங்களை பதிவுசெய்தல் தெடர்பாக தற்போது உயர் நீதிமன்றத்தில் வழக்கு நடவடிக்கை நடைபெறுவதாக க.அ. மேலும் தெரிவித்தார். |
| 4 | 210 பதவிநிலை உத்தியோகத்தர்கள் உரிய திகதிக்குள் சொத்துக்கள், பொறுப்புக்கள் பற்றிய கூற்றினை சமர்ப்பிக்கவில்லை. | மேற்படி உத்தியோகத்தர்களின் பெயர் பட்டியலொன்றை குழுவிற்கும் இலஞ்சம் அல்லது ஊழல்கள் பற்றிய சார்த்துரைகளை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவுக்கும் பெற்றுக் கொடுக்கும்படி கணக்கீட்டு அலுவலருக்கு கட்டளையிடப்பட்டது. |
| | **மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களம்**<br>**2016 சனவரி 09** | |
| 1. | 2013 பெப்ருவரி மற்றும் 2015 ஒக்டோபர் காலகட்டத்தினுள் கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதிலளிப்பதில் ஏற்பட்டுள்ள தாமதம் பற்றி | போதுமான களஞ்சிய வசதியின்மை காரணமாக கடிதக் கோப்புகளை களஞ்சியப்படுத்தலும் பராமரித்தலும் நடைபெறவில்லை என்பதால் தேவையான தகவல்களை பெற்றுக்கொள்வதிலுள்ள நடைமுறைசார்ந்த பிரச்சினைகள் காரணமாக மேற்படி நிலைமை ஏற்பட்டிருப்பதாக பி.க.அ தெரிவித்தார்.<br>மேற்படி பதில் சம்பந்தமாக குழுவின் பலத்த அதிருப்தி தெரிவிக்கப்பட்டது. |

| | **கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்** | **பிரதம கணக்கீட்டு அலுவலரின்/ கணக்கீட்டு அலுவலரின் விடயங்கள் பற்றிய தெளிவுபடுத்தல் மற்றும் குழுவின் கருத்துகள்/கட்டளைகள்** |
|---|---|---|
| 2. | 597 வாகனங்களின் தகவல்கள் அடங்கிய கடிதக் கோப்புகள் காணாமற் போனமை | இது தொடர்பாக பொறுப்புக்கூறவேண்டிய உத்தியோகத்தர்களுக்கெதிராக விசாரணை நடத்தப்பட வேண்டுமெனவும் அது பற்றிய அறிக்கையொன்றை 2016 சனவரி 31 க்கு முன் குழுவிடம் சமர்ப்பிக்கும் படியும் மேற்படி வாகனங்கள் பற்றிய தகவல்களை உடனடியாக கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கும் படியும் குழு கட்டளையிட்டது. |
| 3. | ஈ – மோட்டரின் வேலைத் திட்டத்தின் தற்போதைய நிலைமையும் அதை ஆரம்பித்தல் தாமதமடைதலும் | தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கையின் தாமதமும் பெறுகைகள் குழுவின் சில விடயங்கள் காரணமாகவும் மேற்படி வேலைத்திட்டத்தை செயற்படுத்துதல் தாமதமடைந்ததெனவும் 2009 – 2015 காலகட்டத்தில் அதற்காக ரூபா 740 மில்லியன் ஒதுக்கப்பட்ட போதிலும் செலவு விடயத்தை மாற்றி அப்பணம் திணைக்களத்தின் வேறு பணிகளுக்காக பயன்படுத்தப்பட்டதாக பி.க.அ. தெரிவித்தார்.<br><br>திணைக்களத்தின் திறமையின்மை பற்றி குழுவின் அதிருப்தி தெரிவிக்கப்பட்டதோடு கால கட்டங்களோடு மேற்படி வேலைத்திட்டத்தை செயற்படுத்தும் விதம் பற்றிய விபரமான அறிக்கையொன்றை 2016.சனவரி 31 ஆம் திகதிக்கு முன்னர் பெற்றுத்தரும்படி பி.க.அலுவலருக்கு கட்டளையிடப்பட்டது. |
| 4. | 5494 வாகனங்கள் பதிவுசெய்யப்படும் போது நடந்துள்ள பல்வேறு முறைகேடுகள், ஊழல்கள், மோசடிகள் மற்றும் அவற்றுக்கு பொறுப்புக்கூறவேண்டிய உத்தியோகத்தருக்கு எதிராக எடுத்துள்ள நடவடிக்கைகள் | இதற்கு பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர்கள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதோடு அவர்களுக்கெதிராக விசாரணை நடைபெற்று வருவதாக பி.க.அ/க.அ தெரிவித்தனர்.<br><br>மேற்படி 5494 வாகனங்களை பதிவுசெய்யும் செயற்பாடு தொடர்பாக விபரமான அறிக்கையொன்றை 2016.சனவரி 31 ஆம் திகதிக்கு முன்னர் குழுவுக்கு பெற்றுத்தரும்படி பி.க.அ./க.அ. க்கு கட்டளையிடப்பட்டது. |
| 5. | ஸ்மாற் காட் புதிய சாரதி அனுமதிப்பத்திர வழங்குனருக்கு கூடுதலாக செலுத்தப்பட்டுள்ள ரூபா 37,303,979/= தொகையை மீள அறவிட திணைக்களம் எடுத்துள்ள நடவடிக்கை | தொடர்புடைய விடயத்திற்காக சட்ட மாஅதிபரின் ஆலோசனையை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுத்திருப்பதாக பி.க.அ. தெரிவித்தார். அது தொடர்பாக மீண்டும் விசாரணை நடத்தி குழுவுக்கு அறிவிக்கும்படி கணக்காய்வாளர்தலைமையதிபதிக்கு கட்டளையிடப்பட்டது. |
| 6. | சுங்க வரியை குறைவாக செலுத்தி பதிவு செய்துள்ள 5 பிராடோ ரக மோட்டார் வண்டிகள் தொடர்பாக எடுத்துள்ள நடவடிக்கை | மோட்டார் வாகன திணைக்களத்தினால் தொடர்புடைய கடிதக் கோப்பு குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்படாமையின் காரணமாக விசாரணையை இடைநிறுத்த நேர்ந்திருப்பதாக 2016.01.02 ஆம் திகதிய கடிதத்தின் மூலமாக தெரிவித்திருப்பதாக கணக்காய்வாளர் தலைமையதிபதியினால் குழுவுக்கு கூறப்பட்டது.<br><br>தொடர்புடைய வாகனங்களை கரைநிரல் பட்டியலிட நடவடிக்கை எடுத்திருப்பதோடு மேற்படி வாகனங்களை ஒப்படைக்கும் செயற்பாடு இடைநிறுத்தபட்டிருப்பதாக பி.க.அ / க.அ. தெரிவித்தார். |

| | **கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்** | **பிரதம கணக்கீட்டு அலுவலரின்/ கணக்கீட்டு அலுவலரின் விடயங்கள் பற்றிய தெளிவுபடுத்தல் மற்றும் குழுவின் கருத்துகள்/கட்டளைகள்** |
|---|---|---|
| 7. | பொறுப்புக்கூறவேண்டிய உத்தியோகத்தரின் கவனயீனம் அல்லது திறமையின்மை காரணமாக திணைக்களத்தின் பணிகள் கவலைக்குரிய நிலைமையில் இருப்பதாக குழுவினால் அவதானிக்கப்பட்டுள்ளது. | புதிய தொழில்நுட்பக் கருவிகள் குறைவாக பயன்படுத்தப்படுகின்றமை, மனிதவளப் பற்றாக்குறை மற்றும் திறமையின்மை போன்ற விடயங்கள் தொடர்பில் அதிகளவு கவனம் செலுத்த வேண்டுமென குழு வலியுறுத்தியுள்ளது.<br>கணக்காய்வாளர் தலைமையதிபதியுடன் சிறந்த இணைப்பாக்கத்தினை பேணிவந்து திணைக்களத்தின் பணிகளை முறையாக பேணி வருவதற்கு விசேட கவனம் செலுத்தும்படி பி.க.அ./க.அ. க்கு கட்ளையிடப்பட்டது. |
| 8. | 1. மோட்டார் வாகனங்களின் வகைப்படுத்தலின்போது பயன்படுத்தப்படுகின்ற அளவுகோல்<br>2. 2010 – 2015 காலகட்டத்தில் மேற்படி வகைப்படுத்தலின் பேரில் பதிவுசெய்யப்பட்ட வாகனங்களின் எண்ணிக்கை<br>3. 2010 – 2015 காலகட்டத்தில் விநியோகிக்கப்பட்ட சாரதி அனுமதிப் பத்திரங்களின் எண்ணிக்கை<br>4. 2010 – 2015 காலகட்டத்தில் திணைக்களத்தின் வருமானமும் செலவும் | இது பற்றிய முழுமையான அறிக்கையொன்றை குழுவுக்கு சமர்ப்பிக்கும்படி பி.க.அ. வுக்கு கட்டளையிடப்பட்டது. |
| **உள்நாட்டு அரசிறைத் திணைக்களம்**<br>**2016 சனவரி 26** | | |
| 1. | 2010 – 2014 காலகட்டத்தினுள் மதிப்பீட்டுக்கும் உண்மை வருமானத்திற்கும் இடையிலான வேறுபாடு 5 ஆண்டுகளினுள் வழக்கத்துக்கு மாற்றமாக அதிகரித்திருப்பது அவதானிக்கப்பட்டது. | இது தொடர்பாக பி.க.அ./க.அ. முன்வைத்த விடயங்கள் பற்றி திருப்தியடையாத குழு மேற்படி வேறுபாடு ஏற்பட்டுள்ள விதத்தை பற்றி விபரமாக குழுவிற்கு அறிவிக்கும்படி பி.க.அ./க.அ.க்கு கடடளையிடப்பட்டது. |
| 2. | திணைக்களத்துடன் எனைய நிறுவனங்களை இணைக்கின்ற ஒன்றிணைந்த கணனி வலையமைப்பு | கணனி வலையமைப்பினுள் உள்ளடக்குவதற்காக 23 திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்கள் இனங்காணப்பட்டுள்ளதாகவும் தற்போது மேற்படி பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் சில நிறுவனங்கள் இதற்கு போதுமான அளவு ஒத்துழைப்பு வழங்குவதில்லை எனவும் பி.க.அ./க.அ குறிப்பிட்டார்.<br>ஏனைய நிறுவனங்கள் இதற்கு நல்கின்ற ஒத்துழைப்பும் அக்கருத்திட்டத்தின் தற்போதைய முன்னேற்றமும் பற்றிய அறிக்கையொன்றை குழுவுக்கு சமர்ப்பிக்கும்படி பி.க.அ./க.அ.க்கு கட்டளையிடப்பட்டது. |
| 3. | வருடாந்தம் நிலுவை வரி அதிகரிக்கும் போக்கை காண்பிக்கின்ற வகையில் 2014 இல் அது ரூபா 210 பில்லியன் வரை அதிகரித்துள்ளமை மற்றும் மேற்படி வரியை அறவிடுவதற்கு எடுத்துள்ள நடவடிக்கைகள் | மேற்படி வரி வருமானத்தை அறவிடுவதற்கு, பதிவழிப்பதற்கு அல்லது தற்போதைய சட்ட வரையறைக்குள் அவற்றை தீர்ப்பதற்கு குழுவொன்றை நியமித்து, உரிய ஆய்வின் பின்னர் தகுந்த நடவடிக்கை எடுக்கும்படி பி.க.அ./க.அ.க்கு கடடளையிடப்பட்டது. |

| | **கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்** | **பிரதம கணக்கீட்டு அலுவலரின்/ கணக்கீட்டு அலுவலரின் விடயங்கள் பற்றிய தெளிவுபடுத்தல் மற்றும் குழுவின் கருத்துகள்/கட்டளைகள்** |
|---|---|---|
| 4. | திணைக்களத்தின் கணனி முறைமையை போலியான விதத்தில் மாற்றி 8 வரிக் கோப்புகள் மூலம் ரூபா 203,908,352/= நிதி மோசடி செய்ததாக குற்றம்சாட்டப்பட்டு வேலை இடைநிறுத்தப்பட்ட உத்தியோகத்தரொருவரை மீண்டும் சேவையில் அமர்த்துதல் | மேற்படி உத்தியோகத்தர் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் விதப்புரையின் பேரில் மீண்டும் சேவையில் அமர்த்தப்பட்டுள்ளதாக க.அ. தெரிவித்துள்ளதோடு அதனுடன் தொடர்புடைய கணனி அறிக்கையை பெற்றுக்கொள்ள கொழும்பு பல்கலைக்கழகத்திற்கு முற்பணம் செலுத்தியுள்ள போதிலும் உரிய திகதியில் மேற்படி அறிக்கை கிடைக்கப்பெறவில்லை.<br><br>இது தொடர்பாக காலகட்டங்களுடன் முழுமையான அறிக்கையொன்றை பெப்ருவரி 15 ஆம் திகதிக்கு முன்னர் பெற்றுத்தரும்படி கட்டளையிடப்பட்டது. |
| 5. | 2009.12.31ஆம் திகதிக்கு முன்னர் வரி செலுத்துனர் ஒருவரிடமிருந்து பெறுமதி சேர் வரி நிலுவையாகிய ரூபா 741,604,539/= தொகையை 2015.12.04 ஆம் திகதி வரை அறவிடாமை, நிறுவனமொன்று நிலுவை வரியாக ரூபா 99,990,865/- செலுத்த வேண்டிய போதிலும் அவற்றை ஈடுசெய்யாமலே 2014/2015 ஆண்டுகளில் ரூபா 125,449,380/- பெறுமதி சேர் வரி மீளச் செலுத்தப்பட்டுள்ளது. | மேற்படி கொடுக்கல் வாங்கல் தொடர்பான கணக்காய்வு ஐயவினா கிடைக்கவில்லையெனவும் இது தொடர்பாக இரண்டு அறிக்கைகளை குழுவுக்கு அனுப்ப நடவடிக்கை எடுப்பதாகவும் பி.க.அ/க.அ. தெரிவித்தார். |
| | **மதுவரித் திணைக்களம்**<br>**2016 சனவரி 26** | |
| 1. | 2015 செயற்பாட்டுத் திட்டத்தில் குறிப்பிடப்பட்ட இலக்கிடப்பட்ட சுற்றிவளைப்புகளை அடைவதற்கு திணைக்களத்திற்கு இயலாதிருந்தது. | 2016 மார்ச் முடிவடையும் போது ஊழியர்களின் எண்ணிக்கை நிறைவு செய்யப்பட்ட பின்னர் மேற்படி இலக்கை அடைய முடியுமென க.அ. குறிப்பிட்டார். |
| 2. | அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கையில் 416 பேர் அதாவது 28% வெற்றிடமாக இருத்தல் | நிலவுகின்ற வெற்றிடங்களை உடனடியாக பூர்த்திசெய்து குழுவுக்கு அறிவிக்கும் படி பி.க.அ./க.அ.க்கு கட்டளையிடப்பட்டது. |
| 3. | 2012, 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் செறிவான மதுபான உற்பத்தியும் மதுவரி வருமானமும் குறைவடைதல் | குறிப்பிட்ட வருடங்களில் மதுபானங்களின் உற்பத்தி மற்றும் திணைக்களத்தின் வருமானம் பற்றிய பகுப்பாய்வு ரீதியான அறிக்கையொன்றை ஒரு மாத காலத்திற்குள் குழுவுக்கு பெற்றுத்தரும்படி பி.க.அ./க.அ.க்கு கட்டளையிடப்பட்டது. |
| 4. | 2015 ஜுன் மாதம் 30 திகதி ஆகும்போது நிலுவையாகவிருந்த ரூபா. 1,451,468,886/- தொகையை 3% மதுவரி தாமதக் கட்டணத்துடன் அறிவிடும் செயற்பாட்டின் முன்னேற்றம். | குறித்த 03 கம்பனிகளுக்கு எதிராக நீதிமன்றத்தில் ஒரு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும் மற்றும் ஒரு கம்பனியிடமிருந்து அறவிடப்பட்டுவருவதாகவும் மற்றைய கம்பனிகள் இரண்டும் சமாதான தீர்வுக்கு வருவதற்கு இணக்கம் தெரிவித்துள்ளதாகவும் க.உ.குறிப்பிட்டார். |
| 5. | வாகன விபத்துகளால் ஏற்பட்டுள்ள நட்டம் | சம்பந்தப்பட்ட தரப்பினரால் ஏற்பட்டுள்ள நட்டங்களை அறவிடுவதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் பற்றிய அறிக்கையொன்றை குழுவிற்கு முன்வைக்குமாறு பி.க.உ/க.உ. கட்டளையிடப்பட்டது. |
| 6. | திணைக்களம், புகையிலை வரி சட்டத்தின் சில அதிகாரங்களைச் செயற்படுத்துவதற்குத் தவறுதல். | சம்பந்தப்பட்ட சட்டத்தின் அதிகாரங்களை புலனாய்வு செய்து அது பற்றிய அறிக்கையொன்றை ஒரு மாதத்திற்குள் முன்வைக்குமாறு பி.க.உ/க.உ. கட்டளையிடப்பட்டது. |

| | **கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்** | **பிரதம கணக்கீட்டு அலுவலரின்/ கணக்கீட்டு அலுவலரின் விடயங்கள் பற்றிய தெளிவுபடுத்தல் மற்றும் குழுவின் கருத்துகள்/கட்டளைகள்** |
|---|---|---|
| 7. | - திணைக்களத்தின் வருடாந்த செயற்பாட்டுத் திட்டத்தை ஆராயும்போது பின்வரும் விடயங்கள் செயற்படுத்தப்பட்டில்லையென அவதானிக்கப்பட்டன.<br>- மதுவரி நிலையங்கள் மற்றும் திணைக்களங்களின் புள்ளிவிபரவியல் பிரிவுடன் தன்னியக்க தொடர்புகளை ஏற்படுத்தல்.<br>- தன்னியக்க அனுமதிப்பத்திரங்களை விநியோகிக்கும் செயற் திட்டமொன்றைச் செயற்படுத்தல்.<br>- தன்னியக்க மதுவரி வருமானத்தை சேகரிக்கும் செயற் திட்டமொன்றைச் செயற்படுத்தல்.<br>- அனுமதிப்பத்திர பிரிவு மற்றும் மதுவரி நிலையத்திலிருந்து இற்றைப்படுத்தப்பட்ட தகவல்களைப் பெற்றுக்கொள்ளும் முறைமையொன்றை அமைத்தல் | சம்பந்தப்பட்ட விடயங்களை ஆராயும்போது குழுவொன்று நியமிக்கப்படுள்ளதாக க.உ.குறிப்பிட்டார். |
| 8. | சுற்றுலாத்துறை ஊக்குவிப்பு பணியகத்தின் அங்கீகரிக்கப்பட்ட ஹோட்டல் பரிசோதனைகள் பலவீனமான மட்டத்தில் இருத்தல் | பதவியணி மட்டத்திலுள்ள அதிகாரிகள் போதியளவு இல்லாமை காரணமாக இவ்விடயத்தை உரிய முறையில் மேற்கொள்ள இயலாமல் போனதாக பி.க.அ/க.அ தெரிவித்தார் |
| 9. | திணைக்களம் தமது பணிகளை உரிய முறையில் ஈடேற்றுவதற்கு கணினித் தரவுத் தளத்தை நவீனமயப்படுத்துவதற்கும் இலங்கை சுங்கம், உள்நாட்டு இறைவரி திணைக்களம் ஆகியவற்றிற்கிடையில் இடைத்தொடர்பு காணப்படுதலின் முக்கியத்துவம் பற்றியும் குழு கவனம் செலுத்தியது. | கணினி தரவுத் தளம் நவீனமயப்படுத்தப்பட வேண்டுமெனவும் அத்தளம் உள்நாட்டு இறைவரி திணைக்களம் மற்றும் சுங்கத் திணைக்களம் ஆகியவற்றின் தரவுத் தளத்துடன் தொடர்புபடுத்தப்பட வேண்டுமெனவும் குழு சுட்டிக் காட்டியது<br>தரவுத் தளத்தை முன்னேற்றும் வேலைத்திட்டம் கால வரம்புகளுடன் கூடியதாக அறிக்கையொன்றை தயாரித்து ஒரு மாத காலத்திற்குள் குழுவுக்கு சமர்ப்பிக்குமாறு குழு பி.க.அ./க.அ பணிப்புரை வழங்கியது. |
| **திறன் அபிவிருத்தி மற்றும் தொழில் பயிற்சி அமைச்சு**<br>**2016 சனவரி 26** | | |
| 1. | 37 இளைஞர் படையணி நிலையத்திற்கு உணவுப் பொருட்களை வழங்குதல் மற்றும் சம்பந்தப்பட்ட தொழில்நுட்ப மதிப்பீட்டு குழுவிற்கு வழங்கல் வழிகாட்டல் கோவையின் 2.9.1 பிரிவிற்கு முரணாக ரூ.510,000/- அதிகமாக செலுத்தப்பட்டிருத்தல் | இது சம்பந்தமான அறிக்கையொன்றை 2016 பெப்ரவரி மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் குழுவுக்கு சமர்ப்பிக்குமாறு பணிப்புரை வழங்கப்பட்டது. |

| | **கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்** | **பிரதம கணக்கீட்டு அலுவலரின்/ கணக்கீட்டு அலுவலரின் விடயங்கள் பற்றிய தெளிவுபடுத்தல் மற்றும் குழுவின் கருத்துகள்/கட்டளைகள்** |
|---|---|---|
| 2. | இளைஞர் பொதுநிர்வாக சுற்றுநிருபத்துக்கு முரணான வகையில் படையணிக்கு[1] ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட 05 ஓய்வுபெற்ற அரச ஊழயர்களிடமிருந்து வாழ்கைச் செலவு கொடுப்பனவாக அறவிடப்பட வேண்டிய ரூ.516,500/- பணத்தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. | இது சம்பந்தமாக அறிக்கையொன்றை சமர்ப்பிக்குமாறு குழு பி.க.அ/க.அ இற்கு பணிப்புரை வழங்கியது. |
| 3. | 2010 நவம்பர் மாதம் 22 ஆம் திகதிய 1681/03 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் வாயிலாக இளைஞர் தொழில் வலையமைப்பினை* புறம்பானதொரு நிறுவனமாக தாபிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை என்பதுடன், 2010-2013 காலத்திற்காக அதனை நடைமுறைப்படுத்துவதற்கு ரூ.3,550,000/- ஒதுக்கீடு செய்யபட்டுள்ளது | இது சம்பந்தமாக அறிக்கையொன்றை விரைவாக குழுவுக்கு சமர்ப்பிக்குமாறு பி.க.அ. இற்கு பணிப்புரை வழங்கப்பட்டது |
| 4. | 2014 மே மாதம் நடைபெற்ற சர்வதேச இளைஞர் மாநாட்டிற்கு அமைச்சினால் மொத்தம் ரூ.647,197,048/- மற்றும் தேசிய இளைஞர் சேவை மன்றத்தின்* 2015 ஆம் ஆண்டின் ஒதுக்கீடு வழியாக ரூ.2,484,303/- செலவிடப்பட்டுள்ளதுடன் அதன் பிரதான பணியாக வெளியிடப்பட்ட இளைஞர்கள் பற்றிய கொழும்பு பிரகடனத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள அடிப்படை நோக்கங்கள் அமைச்சின் இளைஞர் அபிவிருத்தி துறையின் அல்லது இணைந்த நிறுவனங்களின் செயல் திட்டங்களில் உள்ளடக்கப்படாமை மற்றும் நோக்கம் நிறைவேற்றப்பட்டதென்பதைப் பற்றி கண்டறிவதற்கு பின்னாய்வு வேலைத்திட்டமொன்று இல்லாமை | இது சம்பந்தமாக விபரமானதொரு அறிக்கையொன்றை ஒரு மாத காலத்திற்குள் குழுவிற்கு சமர்ப்பிக்குமாறு பி.க.அ. இற்கு பணிப்புரை வழங்கப்பட்டதுடன் கொழும்பு பிரகடனத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள அடிப்படை நோக்கங்கள் மற்றும் தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் நோக்கங்கள் ஆகியவற்றை ஒருங்கிணைக்கும் முறை பற்றிய அறிக்கையொன்றை குழுவிற்கு சமர்ப்பிக்குமாறு இளைஞர் சேவைகள் சபையின் தலைவருக்கு பணிப்புரை வழங்கப்பட்டது |

* *தற்போது தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அமைச்சின் கீழ் இருத்தல்.*

| | **கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்** | **பிரதம கணக்கீட்டு அலுவலரின்/ கணக்கீட்டு அலுவலரின் விடயங்கள் பற்றிய தெளிவுபடுத்தல் மற்றும் குழுவின் கருத்துகள்/கட்டளைகள்** |
|---|---|---|
| 5 | 1994 பொதுமக்கள் பாதுகாப்பு சட்டத்தினால் இளைஞர் நலனோம்புகை நிதியம்* இல்லாதொழிக்கப்பட்டு தற்போது செயலிழந்த நிலையில் உள்ளதுடன் இந்நிறுவனத்தில் பின்வரும் முறைகேடுகள் அவதானிக்கப்பட்டுள்ளன.<br>1997 – 2012 காலத்திற்கான கணக்குகள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை.<br>ரூ.8,715,000/- பெறுமதியுடைய காணி இளைஞர் சேவைகள் சபைக்கு கையகப்படுத்தப்படவில்லை<br>1996ஆம் ஆண்டாகும்போது மத்திய வங்கியின் பொறுப்பில் இருந்த ரூ. 27,502,301/- பெறுமதியுடைய மதிப்பீடு செய்யப்பட்ட அல்லது மதிப்பீடு செய்யப்படாத 877 தங்க நகை உருப்படிகள் பரிசோதிக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் பௌதீக ரீதியாக இல்லாதிருந்தல் | இவ்விடயம் சம்பந்தமாக விவரமான அறிக்கையொன்றை சமர்ப்பிக்குமாறு பி.க.அ.இற்கு பணிப்புரை வழங்கப்பட்டது. |
| 6. | தேசிய வீடமைப்பு அதிகாரசபைக்கு சொந்தமான எம்பிலிபிட்டியில் அமைந்துள்ள தலைமைத்துவ விருத்தி பற்றிய தேசிய நிருவகம் அமைந்துள்ள இடம்* மற்றும் கட்டிடத்தை கையகப்பட்டுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளாமை பற்றிய விடயங்கள் வினவப்பட்டன. | அது சம்பந்தமாக அறிக்கையொன்றை கோருவதற்கு குழு தீர்மானித்தது |
| 7. | அரச பாடாசலைகளில் உயர் தரத்திற்கு அறிமுகப்படுத்தப்பட்ட தொழில்நுட்பப் பிரிவு பாடநெறி இற்றைவரை ஈட்டிக்கொண்டுள்ள முன்னேற்றம் பற்றி வினவப்பட்டத் | அதற்கு பங்களிப்பு வழங்கக்கூடிய நிறுவனங்கள், தகைமையுடைய ஆசிரியர்களை பெற்றுக்கொள்ளுதல் போன்ற விடயங்கள் உள்ளடங்கிய அறிக்கையொன்றை குழுவிற்கு சமர்ப்பிக்குமாறு பி.க.அ. இற்கு பணிப்புரை வழங்கப்பட்டது. |
| 8. | திறன் துறைசார்ந்த அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நிருமாணிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்த பல்கலைக்கழக கல்லூரிக்கான உபகரணங்களை கொள்வனவு செய்வற்கு ரூபாய் 1,579 மில்லியனுக்கான ஒப்பந்தமொன்று வழங்கப்பட்டிருந்தாலும் ரூ. 98.57 மில்லியன் பெறுமதியுடைய பொருட்கள் மாத்திரம் கிடைத்திருந்ததுடன் அமைச்சு அதற்கு சர்வதேச போட்டிப் பெறுகைகள் முறைக்கு பதிலாக தேசிய போட்டி விலைகளில் விலை மனு கோரும் முறையொன்றை பின்பற்றியமை | உத்தேச பல்கலைக்கழக கல்லூரியின் செயல்திட்டத்தை சமர்ப்பிக்குமாறு பி.க.அ. இற்கு பணிப்புரை வழங்கப்பட்டது. |

| | **கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்** | **பிரதம கணக்கீட்டு அலுவலரின்/ கணக்கீட்டு அலுவலரின் விடயங்கள் பற்றிய தெளிவுபடுத்தல் மற்றும் குழுவின் கருத்துகள்/கட்டளைகள்** |
|---|---|---|
| | **கல்வி அமைச்சு**<br>**2016 சனவரி 27** | |
| 1. | விசேடக் கல்விக்கான ஆசிரியர்களின் இடமாற்றம் | விசேட கல்விப் பிரிவுகளுக்கு ஆரம்பக் கல்வி ஆசிரியர்களை ஆட்சேர்ப்புச் செய்துள்ளதால் 2016 இறுதியாகின்றபோது இப்பிரச்சினைகள் தீர்க்கப்படுமென பி.க.அ. அறிவித்தார்.<br>இதன்படி குழு பின்வரும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பணிப்புரை வழங்கியது.<br>I. தொண்டர் ஆசிரியர்களை நிரந்தரமாக்குவதற்கான சாத்தியப்பாடுகளை ஆராய்தல்<br>II. தமிழ் மொழி மூல ஆசிரியர் பற்றாக்குறையை தீர்த்தல்<br>III. மேற்கு மாகாணத்தின் ஆசிரிய பற்றாக்குறையை தீர்த்தல்<br>IV. பாடசாலைகளில் ஆசிரியர் தேவைப்பாடுகளை கருத்திற்கொண்டு இடமாற்றங்களை மேற்கொள்ளுதல்<br>V. பாடங்களுக்கு ஏற்ப ஆசிரியர் தேவைகள் பற்றிய விவரமான அறிக்கையொன்று |
| 2. | அமைச்சின் பணிகளுக்கு கணினி மென்பொருட்களை ஈடுபடுத்துவதின் நடப்பு நிலவரம் | அதன் இரண்டாம் கட்டத்தின் அபிவிருத்திப் பணிகள் மொரட்டுவ பல்கலைக்கழகத்திற்கு கையளிக்கப்பட்டுள்ளதுடன் 2016 இறுதியாகின்ற போது இப்பணிகளை நிறைவுசெய்வதற்கு எதிர்பார்க்கப்படுவதாக பி.க.அ. தெரிவித்தார்.<br>கணினித் தொகுதியை இற்றைப்படுத்தி மாகாண அலுவலகங்களின் தரவுத் தொகுதியுடன் தொடர்புபடுத்துமாறும் தரவுத் தொகுதியை முன்னேற்றும் நிகழ்ச்சித்திட்டம் பற்றி முழுமையான அறிக்கையொன்றை 2016 பெப்ரவரி 12 ஆம் திகதிக்கு முன்னர் குழுவிற்கு சமர்ப்பிக்குமாறும் பி.க.அ இற்கு பணிப்புரை வழங்கப்பட்டது. |
| 3. | கொழும்பு ஆனந்த, மாத்தறை ராகுல மற்றும் பன்னிபிட்டிய தர்மபால ஆகிய கல்லூரிகளின் அதிபர்கள் சம்பந்தமாகவும் ஏனைய ஆட்களினால் மேற்கொள்ளப்பட்ட மோசடிமிக்க நடவடிக்கைகள் சம்பந்தமாகவும் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் பற்றி குழுவின் அதிருப்தி வெளியிடப்பட்டது. | இது சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கை போதுமானதாக இல்லாமை பற்றி குழு அதிருப்தியை தெரிவித்தது.<br>சில சம்பவங்கள் பற்றி குற்றப்பத்திரிகை தாக்கல் செய்து ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அரச சேவைகள் ஆணைக்குழு நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாக பி.க.அ./க.அ. குறிப்பிட்டதுடன் இந்த மோசடிமிக்க கொடுக்கல் வாங்கல் சம்பந்தமாக கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகள் மற்றும் அதன் நடப்பு நிலைமைகள் சம்பந்தமாக கணக்காய்வாளர் தலைமை அதிபதியிடம் விபரமான அறிக்கையொன்றை கோருமாறு பணிப்புரை வழங்கப்பட்டது. |
| 4 | பாடசலைகளில் உயர் தர பாடத் துறையில் தொழில்நுட்பப் பாடத் துறையை அறிமுகப்படுத்துதல் மற்றும் அப்பாடத்துறையை இடையறாமல் பேணிவருதல் பற்றி குழு கவனம் செலுத்தியது. | இது பற்றி அபிவிருத்தி மற்றும் தொழில் |

| | கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள் | பிரதம கணக்கீட்டு அலுவலரின்/ கணக்கீட்டு அலுவலரின் விடயங்கள் பற்றிய தெளிவுபடுத்தல் மற்றும் குழுவின் கருத்துகள்/கட்டளைகள் |
|---|---|---|
| | i. 2005 ஆம் ஆண்டு முதல் இற்றைவரை மோசடிமிக்க கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபட்ட அதிபர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டுள்ள ஒழுக்காற்று மற்று சட்ட நடவடிக்கைகள். | இவ்விடயங்கள் சம்பந்தமாக ஒரு மாத காலத்திற்குள் குழுவிற்கு விபரமான அறிக்கையொன்றை சமர்ப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டது. |
| | ii. 1000 மஹிந்தோதய பாடசாலைகளை அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித்திட்டத்திற்கு அங்கீகாரம் வழங்கப்பட்ட அமைச்சரவை பத்திரம், தொழில்நுட்ப மதிப்பீட்டு குழு அறிக்கை மற்றும் அதன் அங்கத்தவர்கள் மற்றும் தேதிகள் உள்ளிட்ட செலவுசெய்த தொகை | |
| | ii. விஞ்ஞானக்கூடத்திற்காக கொள்வனவு செய்யப்பட்ட கணினிகளின் விலைகள், பெறுகைகள் குழுவின் பரிந்துரை மற்றும் சம்பந்தப்பட்ட ஒப்பந்தங்கள் மற்றும் ஆவவணங்கள். | |
| 5 | iv. தொழில்நுட்பப் பாடத்துறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ள பாடசாலைகள், தொழில்நுட்பக் கூடங்கள் மற்றும் கற்கும் மாணவர்களின் எண்ணிக்கை, அதனை ஊக்குவிப்பதற்கு அமைச்சு மேற்கொண்டுள்ள திட்டங்கள் | |
| | v. கொரிய அரசினால் வழங்கப்பட்டுள்ள பாடசாலைக் கட்டிடங்கள், புலமைப்பரிசில்கள் மற்றும் பியானோ இசைக்கருவிகள் மற்றும் ஏனைய உபகரணங்களின் எண்ணிக்கை | |
| | vi. அமைச்சரவை அங்கீகாரத்துடன் கொய்கா நிதியனத்தினால் ஹோமாகமயில் தாபிக்கப்பட்ட தொழில்நுட்ப கற்கை நிறுவகத்தின் தற்போதைய நிலைமை | |
| 6. | பாடசாலை கணினிக் கூடங்களுக்காக E-Wis கம்பனியிலிருந்து கணினிகளைக் கொள்வனவு செய்தல் | மொரட்டுவ பல்கலைக்கழகத்தின் விதப்புரையின் கீழ் மதிப்பீட்டு குழுவினால் சம்பந்தப்பட்ட நிறுவனம் தெரிவு செய்யப்பட்டதாகவும் அமைச்சின் பெறுகைகள் குழுவின் அங்கீகாரத்தின் கீழ் திறைசேரியினால் சம்பந்தப்பட்ட கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் பி.க.அ. தெரிவித்தார்.<br><br>உள்நாட்டு உற்பத்திகளை ஊக்குவிப்பதற்காக சர்வதேச தரச் சின்னங்களைக் கொண்ட கணினிகளை உள்நாட்டு உற்பத்தியாளர்களிடமிருந்து கொள்வனவு செய்யுமாறு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. |

| | **கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்** | **பிரதம கணக்கீட்டு அலுவலரின்/ கணக்கீட்டு அலுவலரின் விடயங்கள் பற்றிய தெளிவுபடுத்தல் மற்றும் குழுவின் கருத்துகள்/கட்டளைகள்** |
|---|---|---|
| 7. | பஸ்யால சிரிசங்கபோ விசேடக் கல்விக் கல்லூரியை பதிவுசெய்யும் நடவடிக்கை தாமதமடைதல் மற்றும் ஓர் உத்தியோகத்தர் இதற்கு ரூ.15 இலட்சம் இலஞ்சம் கோரியதாக தெரியவந்துள்ளமை | சம்பந்தப்பட்ட பாடசாலையை பதிவு செய்வதற்கான நடவடிக்கை ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பி.க.அ. தெரிவித்தார்.<br>அதன் நடப்பு நிலவரம் பற்றிய அறிக்கையொன்றை குழுவிற்கு சமர்ப்பிக்குமாறு குழு பணிப்புரை வழங்கியது. |
| 8. | 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் உதவித்தொகையாக ரூ.57,482,500/- பணத்தொகை செலுத்தப்படாமை | பாடசாலைகளிலிருந்து சரியான தகவல்கள் கிடைக்காமை இவ்வாறு செலுத்தல்கள் உரியவாறு மேற்கொள்ளப்படாமைக்கு காரணமாக அமைந்துள்ளதென பி.க.அ. தெரிவித்தார்.<br>இந்த கொடுப்பனவுகளை தாமதமின்றி பெற்றோருக்கு இலகுவான முறையில் செலுத்துவதற்கு வேலைத்திட்டமொன்றை தயாரிக்குமாறு பி.க.அ.க்கு ஆலோசனை வழங்கப்பட்டது |
| 9. | தேசிய பாடசாலைகளில் ஆங்கில மொழி மூல ஆசிரியர்களின் பற்றாக்குறை | எதிர்வரும் இரண்டு மாதங்களுக்குள் தேவையான ஆட்சேர்ப்புகளை மேற்கொள்ளுமாறு பி.க.அ.க்கு அறிவிக்கப்பட்டது |
| | **காணி அமைச்சு**<br>**2016 பெப்ரவரி 27** | |
| 1. | அரசிற்குச் சொந்தமான மொத்த காணிகள் பற்றிய தரவுகள் | அரச காணிகளை முகாமைத்துவம் செய்வதற்காக தரவுத் தளமொன்று உருவாக்கப்பட்டிருப்பதுடன் அரசிற்கு சொந்தமான மொத்த காணிகளின் அளவு 12 மில்லியன் காணித்துண்டுகள் எனவும் 2016 – 2020 நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 6 மில்லியன் காணித்ததுண்டுகளின் தரவுகளை உள்நுழைத்தல் இலக்கு எனவும் பி.க.அ. தெரிவித்தார்.<br>அரசிற்கு சொந்தமான அனைத்து காணிகள் பற்றிய விவரங்களும் உள்ளடங்கும் அறிக்கையொன்றை மார்ச்சு மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் குழுவிற்கு சமர்ப்பிக்குமாறு பி.க.அ/க.அ. இற்கு பணிப்புரை விடுக்கப்பட்டது. |
| 2. | பணியாட்டொகுதியில் வெற்றிடங்கள் | இது சம்பந்தமாக அரசாங்க நிருவாக அமைச்சிற்கு அறியத்தரப்பட்டுள்ளதாக பி.க.அ/க.அ. குறிப்பிட்டார் |
| 3. | காணிகளை கையகப்படுத்தல் | இது சம்பந்தமாக புள்ளிவிபரவியல் ரீதியிலான விளக்கமொன்றை செய்வது கடினமானதெனவும் அதற்குள்ள சட்டங்களில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படவேண்டியதன் முக்கியதத்துவம் பற்றிய பிரேரணையை முன்வைத்துள்ளதாகவும் பி.க.அ/க.அ. தெரிவித்தார். |
| 4. | காணியற்றவர்களுக்கு காணிகளை பகிர்ந்தளிப்பதற்காக அமைச்சரவை நிருபமொன்று சமர்ப்பிக்கப்பட்டமையின் முன்னேற்றம் | இது சம்பந்தமாக அரசாங்கம் இறுதி இணக்கமொன்றுக்கு வரவில்லையென பி.க.அ/க.அ தெரிவித்தார் |
| 5. | 2008 -2012 வரை பிம்சவிய திட்டத்திற்கு ஒதுக்கீடாக ரூ. 3,350 மில்லியன் கிடைத்திருந்தும் ரூபா 1,980 மில்லியன் மாத்திரமே செலவிடப்பட்டுள்ளது. இலக்கு வைக்கப்பட்ட உரித்துடைமை சான்றிதழ்கள் 650,000 இருப்பினும் 73,328 மாத்திரமே விநியோகிக்கப்பட்டுள்ளது | இப்பணியை ஈடேற்றும் விடயம் பல நிறுவனங்களின் கூட்டுப்பணியாக அமைகின்றதெனவும் சில தரப்புகளிடமிருந்து எழுந்த எதிர்ப்பு காரணமாக இலக்குகளை அடைந்துகொள்ள இயலாமல் போனதாகவும் பி.க.அ/க.அ தெரிவிததார் |

| | கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள் | பிரதம கணக்கீட்டு அலுவலரின்/ கணக்கீட்டு அலுவலரின் விடயங்கள் பற்றிய தெளிவுபடுத்தல் மற்றும் குழுவின் கருத்துகள்/கட்டளைகள் |
|---|---|---|
| 6. | கம்பஹா ரத்னாவலி மகளிர் கல்லூரிக்கு காணியொன்றை கையகப்படுத்துவதற்காக 2014 ஆம் ஆண்டு மதிப்பீடு செய்யப்பட்ட தொகை ரூ.3,250,000.00 ஆயினும் ரூ.9,130,742/- தொகை மேலதிகமாக செலவிடப்பட்டுள்ளமை | இது சம்பந்தமாக விலை மதிப்பீட்டு திணைக்களத்தை வினவி குழுவுக்கு அறிவிக்குமாறு பி.க.அ/க.அ குறிப்பிட்டார் |
| **குடிவரவு, குடியகல்வு திணைக்களம்**<br>**2016 சனவரி 28** | | |
| 1. | திணைக்களத்தில் நிலவும் பணியாட்டொகுதி வெற்றிடங்கள் | பொது நிருவாக அமைச்சினால் போதியளவு ஊழியர்கள் வழங்கப்படாததால் முகாமைத்துவ உதவியாளர் பதவியில் ஏற்கனவே வெற்றிடங்கள் நிலவுதாக பி.க.அ/க.அ தெரிவித்தார் |
| 2. | திணைக்களத்தினால் ஒதுக்கப்பட்டுள்ள மூலதன ஒதுக்கீடுகளின் குறை பயன்பாடு | இப்பணத்தை பணியாளர்களுக்கான பொதுக்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதற்காக முழுமையாக பயன்படுத்தியுள்ளதாக பி.க.அ. தெரிவித்தார் |
| 3. | இரட்டை வீசா கட்டணங்களை செலுத்துதல் | உரிய காலத்தில் வீசா விண்ணப்பங்கள் ETA வாயிலாக சமர்ப்பிக்கப்படாமை மற்றும் போலியான இணையத்தளங்கள் ஊடாக விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளமை காரணமாக இது நிகழ்ந்துள்ளதென க.அ. தெரிவித்தார். |
| 4. | இலத்திரனியில் போக்குவரத்து அனுமதி முறையின் (ETA) இணையத்தள செயற்பாட்டினை வடிவமைத்தவர் உடன்படிக்கைக்கு முரணான வகையில் அவர்களின் உத்தியோகபூர்வ இலச்சிணையை இணைய பக்கத்தில் விளம்பரம் செய்தமை மற்றும் உடன்படிக்கை செய்துகொள்ளப்பட்ட செலுத்தல் ரூ.100,000/- போதியதாக இல்லாதிருந்த போதிலும் அதனை அறவிட்டுக்கொள்ளாமை | சம்பந்தப்பட்ட உடன்படிக்கையை மீண்டும் மீளாய்வு செய்தவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் 2016 மார்ச் மாதம் 01 ஆம் திகதிக்கு முன்னர் அதன் நடப்பு நிலவரம் தொடர்பாக குழுவுக்கு அறிக்கையொன்றை சமரப்பிக்குமாறும் பணிப்பரை வழங்கப்பட்டது |
| 5. | வீசா இல்லாத வெளிநாட்டவர்கள் நாட்டினுள் தங்கியிருப்பதை தடுத்தல் | இரட்டை கடவுச் சீட்டுகளுடையவர்கள் உள்வருவதற்கும் வெளிச்செல்வதற்கும் ஒரே கடவுச்சீட்டினை பயன்படுத்தாமை இதற்கு காரணமாக இருக்கின்றதெனவும் புதிய சோதனையிடல் முறைமை மற்றும் இலங்கை சுற்றுலா அதிகாரசபையினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள நிகழ்ச்சித்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட பின்னர் இந்நிலையை தடுத்துக்கொள்வதற்கு வாய்ப்பு உள்ளதாகவும் க.அ. தெரிவித்தார்<br>இந்த நிகழச்சித்திட்டத்தின் முன்னேற்றம் பற்றிய அறிக்கையொன்றை 2016.03.01 ஆம் திகதிக்கு முன்னர் குழுவுக்கு சமர்ப்பிக்குமாறு பி.க.அ/க.அ.க்கு பணிப்புரை வழங்கப்பட்டது |

| | **கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்** | **பிரதம கணக்கீட்டு அலுவலரின்/ கணக்கீட்டு அலுவலரின் விடயங்கள் பற்றிய தெளிவுபடுத்தல் மற்றும் குழுவின் கருத்துகள்/கட்டளைகள்** |
|---|---|---|
| 6. | 2011 சனவரி முதல் நடைமுறைக்குவருமாறு இரட்டை குடியுரிமை வீசாவை வழங்குவதை இடைநிறுத்துவதற்கு அரசாங்கம் கொள்கைத் தீர்மானமொன்றை மேற்கொண்டிருந்தபோதும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரின் அனுமதியின் கீழ் 2014 ஆம் ஆண்டில் 2,053 இரட்டை குடியுரிமை வீசா வழங்கப்பட்டுள்ளமை | 2015 மார்ச் மாதம் முதல் இரட்டை குடியுரிமை வீசா வழங்குவதற்கு அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்துள்ளதாக பி.க.அ/க.அ. குறிப்பிட்டார் |
| 7. | மினுவாங்கொடை, கலகெதர பிரதேசத்தில் தடுப்பு நிலையமொன்றை அமைப்பதற்கு ரூ.3,927,479/- செலவுசெய்து காணியொன்றை கையகப்படுத்திகொண்டிருந்தும் அதன் நிருமாணப் பணிகள் கைவிடப்பட்ட நிலையில் உள்ளமை | பொதுமக்களின் எதிர்ப்பு காரணமாக இதன் நிருமாண நடவடிக்கைகள் கைவிடப்பட்டுள்ளதாகவும் அதற்கு பொருத்தமான காணியொன்று கட்டான பிரதேசத்தில் அடையாளங்காணப்பட்டுள்ளதாகவும் க.உ.தெரிவித்தார் |
| 8. | சாதாரண கடவுச்சீட்டுகளை விநியோகிக்கும் செயன்முறையை துரிதப்படுத்துதல் | இதற்கு முறைமையொன்றை ஏற்பாடுசெய்யுமாறும் ஒரு மாத காலததிற்குள் அது சம்பந்தமான அறிக்கையொன்றை குழுவுக்கு சமர்ப்பிக்குமாறும் அறிவிக்கப்பட்டது. |
| 9. | ரூ.15,456,000/- செலவுசெய்து வீசா விநியோகிக்கும் பிரிவுக்காக அரச அச்சகத்தில் தயாரிக்கப்பட்ட 1.2 மில்லியன் ஸ்டிக்கர்கள் அச்சு இயந்திமொன்று இல்லாமையினால் சுமார் ஒரு வருட காலம் பயன்படுத்தப்படாமல் இருத்தல் | ஸ்டிக்கர்களைஅச்சடிக்கும் நடவடிக்கைகளை ஆரம்ப்பிக்க இயலுமென பி.க.அ. தெரிவித்தார் |
| | **பரீட்சைகள் திணைக்களம்**<br>**2016 சனவரி 28** | |
| 1. | ஆசிரியர்களுக்கு செலுத்தப்படும் மதிப்பீட்டுக்கான கொடுப்பனவுகளை நேரடியாக வங்கிக் கணக்குகளில் வைப்பு செய்தல் சம்பந்தமாக கடந்த குழுக் கூட்டத்தின்போது கவனம் செலுத்தப்பட்டதுள்ளதால் அவ்வேலைத் திட்டத்தின் நடப்பு முன்னேற்றம்.<br>2014 ஆம்ஆண்டின் ஆண்டறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்பிக்கப்படாமை பற்றி குழுவின் கவனம் செலுத்தப்பட்டது. | அந்நிகழ்ச்சித்திட்டத்தில் சிற்சில குறைபாடுகள் காணப்பட்டதால் எதிர்வரும் காலத்தில் அதனை உரிய முறைக்குட்படுத்தி ஆரம்பிப்பதாக க.அ. தெரிவித்தார்.<br>2014 ஆம் ஆண்டின் ஆண்டறிக்கையை ஒரு மாத காலத்திற்குள் சமர்ப்பிக்குமாறு பி.க.அ/க.அ.க்கு அறிவிக்கப்பட்டது. |
| 2. | OMR (Optical Mark Reader) இயந்திரத்தை பயன்படுத்தி விடைத்தாள்களை மதிப்பீடு செய்தல் குறைபாடுள்ள முறையென குழு வலியுறுத்தியது | தற்போது பழுதடைந்த நிலையிலுள்ள இவ்வியந்திரங்களை 2011 ஆம் ஆண்டு முதல் பயன்படுத்துவதில்லை எனவும் 03 வருட உத்தரவாத காலமும் முடிவடைந்த நிலையிலுள்ள இவ்வியந்திரங்களை எதிர்வரும் காலத்தில் ஏல விற்பனை செய்து அகற்றிவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்வதாக க.அ. அறிவித்தார் |

| | **கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்** | **பிரதம கணக்கீட்டு அலுவலரின்/ கணக்கீட்டு அலுவலரின் விடயங்கள் பற்றிய தெளிவுபடுத்தல் மற்றும் குழுவின் கருத்துகள்/கட்டளைகள்** |
|---|---|---|
| 3. | போலவலான பயிற்சி நிலையத்தின் பராமரிப்பிற்காக பணத்தை செலவுசெய்திருந்தும் அதனை எவ்வித பணிக்காகவும் பயன்படுத்திக்கொள்ளாமை | இந்த கட்டிடத்தை பயிற்சி நடவடிக்கைகளுக்காக பயன்படுத்திக்கொண்டதாகவும், அது பழுதடைந்த நிலையில் உள்ளதாகவும் கல்வி அமைச்சிற்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக க.அ. குறிப்பிட்டார். இதனை ஆசிரியர் பயிற்சி நிலையமாக எதிர்வரும் காலத்தில் பயன்படுத்துவதற்குள்ள சாத்தியத்தைப் பற்றி கவனம் செலுத்தப்பட்டுள்ளதாகவும் இங்கு பி.க.அ குறிப்பிட்டார் |
| 4. | உயர்தர தகவல் தொழில்நுட்ட பரீட்சையை புறம்பாக நடாத்துவதன் விளைவாக மேலதிக செலவினை உறப்படவேண்டியுள்ளமை | க.பொ.த.(உயர்தரம்) பரீட்சகைக்கு சமாந்தரமாக இந்த தகவல் தொழில்நுட்ப பரீட்சையும் நடாத்தப்படுதல் பல்வேறு தொழில்நுட்ப மற்றும் நிருவாக காரணங்களின் நிமித்தமாக அசௌகரியமாக உள்ளதனால் அதனை வேறொரு தினத்தில் நடாத்துவதன் மூலம் அனைத்து தரப்புகளுக்கு இலகுவாக அமைந்துள்ளதாக க.அ சுட்டிக்காட்டினார். |
| 5. | 2014 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதி 03 வங்கிக் கணக்குகளுக்கு ஏதுவாக விநியோகிக்கப்ட்ட 06 மாதம் கடந்த காசோலைகள் பெருமளவு இருப்பதும் அது சம்பந்தமாக நிதி ஒழுங்குவிதிகளின் கீழ் நடவடிக்கை மேற்கொள்ளப்படாமையும் | தற்போது இப்பிரச்சினை பெருமளவு தீர்க்கப்பட்டுள்ளதாகவும் ஒரு கணக்கில் மாத்திரம் தற்போது பிரச்சினை இருப்பதாகவும் தெரிவித்த க.அ எதிர்வரும் காலத்தில் நிதி செலுத்தல்களை சம்பந்தப்பட்ட வங்கி கணக்குகளுக்கு வரவு வைப்பதற்கும் பிரச்சினைகள் ஏற்படாதவாறு செயற்படுவதற்கும் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதாக தெரிவிததார். |
| 6. | பரீட்சைகள் திணைக்களத்தினால் எதிர்வரும் வருடங்களுக்கான பரீட்சை கால அட்டவணைகளை தயாரிக்கும் முறைமை | பாடசாலை பரீட்சைகளுக்காக சுமார் எதிர்வரும் ஐந்து வருடங்களுக்கு கால அட்டவணைகள் தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் ஏனைய பரீட்சைகளை நடாத்துவதற்கான கால அட்டவணை குறிப்புக்களின் தயாரிப்பானது சம்பந்தப்பட்ட நிறுவனங்களினால் வழங்கப்படும் தகவல்கள் மீது அடிப்படையாக அமைவதாக க.அ. தெரிவித்தார். |
| 7. | பரீட்சைத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற பாடசாலைகளுக்கான பரீட்சை பெறுபேறு பகுப்பாய்வினை கல்வி அமைச்சானது தமது கல்விச் செயன்முறை, பாடங்களுக்கான மேம்பாடு மற்றும் செயலாற்றுகை என்பவற்றுக்காகப் பயன்படுத்துதல். | பரீட்சைப் பெறுபேறுகளை அடிப்படையாகக் கொண்டு மாகாண, கோட்ட மற்றும் பாடசாலை மட்டத்தில் மதிப்பீடுகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக பி.க.அ. தெரிவித்தார்.<br><br>குறித்த செயன்முறையினை விடயப் பணிப்பாளர்கள் மற்றும் ஆசிரிய ஆலோசகர்கள் என்போர் மூலம் மேற்கொள்வதற்கு நடவடிக்கையெடுக்குமாறும் அதன் பிரகாரம் பல்வேறுபட்ட மட்டங்களில் செயலாற்றுகை அறிக்கைகளைப் பெற்றுக்கொள்ளுமாறும் குழுவினால் பி.க.அ.க்கு ஆலோசனை வழங்கப்பட்டது. |

| | கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள் | பிரதம கணக்கீட்டு அலுவலரின்/ கணக்கீட்டு அலுவலரின் விடயங்கள் பற்றிய தெளிவுபடுத்தல் மற்றும் குழுவின் கருத்துகள்/கட்டளைகள் |
|---|---|---|
| **விலைமதிப்பீட்டுத் திணைக்களம்**<br>**2016 பெப்ருவரி 09** | | |
| 1. | 87 பதவியணி வெற்றிடங்களுக்கு மத்தியில் 34 சிரேஷ்ட மட்டப் பதவிகள் காணப்படுதல். | ஆட்சேர்ப்புக்கள் அரச சேவைகள் ஆணைக்குழுவின் அங்கீகாரத்திற்காக ஆற்றுப்படுத்தப்பட்டிருப்பதாக க.அ.தெரிவித்தார்.<br>திணைக்களத்தின் பணிகளை வினைத்திறன் மிக்கதாக ஆக்கும் பொருட்டு தேவையான பதவியணியை துரிதமாகப் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கையெடுக்குமாறு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டது. |
| 2. | மதிப்பீடு செய்யப்பட்ட மற்றும் உண்மையான வருமானங்கள் என்பவற்றுக்கிடையிலான வித்தியாசம். | வருமானங்களை ஒன்றுதிரட்டும்போது திணைக்களத்திற்கு முகங்கொடுக்க நேடுகின்ற சிக்கல்கள் மற்றும் நடைமுறை நிலைமைகள் என்பவற்றைக் கருத்திற்கொண்டு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளபோதிலும் அண்மைக்கால வருடங்களில் வருமானங்களைச் சேகரிக்கும்போது பின்பற்றப்பட்டுள்ள புதிய முறைகளின் காரணமாக மெய் வருமானமானது முன்கூட்டியே தீர்மானிக்கப்படாத வகையிலான வளர்ச்சியினை அடையப்பெற்றிருப்பதாக க.அலுவலர் தெரிவித்தார். |
| 3. | 2010, 2011 மற்றும் 2012 ஆகிய ஆண்டுகளில் உரிய நிலுவை வருமானங்களை அறவிடுவதற்கான வினைத்திறன்மிக்க வேலைத்திட்டமொன்று இன்மை | பிரதானமாக விமான நிலையம் மற்றும் விமான சேவைகள், ஸ்ரீலங்கன் கம்பனி மற்றும் நகர அபிவிருத்தி அதிகார சபை என்பவற்றை உள்ளிட்ட சில அரச நிறுவனங்களிலிருந்து நிலுவை வருமானங்கள் அறவிடப்பட வேண்டியுள்ளதாக க.அலுவலர் தெரிவித்தார்.<br>குறித்த வருமானங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு குழுவானது பி.க.அலுவலருக்கு / க.அலுவலருக்கு அறிவித்ததோடு அதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு திறைசேரியின் பிரதிநிதிகளுக்கும் தெரிவிக்கப்பட்டது. |
| 4. | நிறுவனத்தின் கணனித் தரவு முறைமை | நிறுவனத்திற்காக அமைக்கப்படவுள்ள கணனித் தரவு நிகழ்ச்சித்திட்டத்தின் பொருட்டு ரூபா 60 மில்லியன் மதிப்பீடொன்று தயாரிக்கப்பட்டிருப்பதாக க.அலுவலர் தெரிவித்தார்.<br>நிறுவனத்தின் தரவுகளை கணனிமயப்படுத்துவதற்கான நோக்கங்கள், மதிப்பீடு செய்யப்பட்ட செலவு, அதன்மூலம் எதிர்பார்க்கப்படும் வினைத்திறன் மற்றும் வருமான பிறப்பாக்கத்தின் பொருட்டு அதன் மூலம் எதிர்பார்க்கப்படும் பங்களிப்பு என்பவற்றைத் தெளிவுபடுத்தி 2016 மார்ச் 08 ஆம் திகதிக்கு முன்னர் குழுவிற்கு அறிக்கையொன்றைச் சமர்ப்பிக்குமாறு பி.க.அலுவலருக்கு/ க. அலுவலருக்கு அறிவிக்கப்பட்டது. |

| | கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள் | பிரதம கணக்கீட்டு அலுவலரின்/ கணக்கீட்டு அலுவலரின் விடயங்கள் பற்றிய தெளிவுபடுத்தல் மற்றும் குழுவின் கருத்துகள்/கட்டளைகள் |
|---|---|---|
| **இறக்குமதி ஏற்றுமதி கட்டுப்பாட்டுத் திணைக்களம்<br>2016 பெப்ருவரி 10** | | |
| 1. | இறக்குமதி ஏற்றுமதி கட்டுப்பாட்டாளர் பதவி பதிற்கடமை புரியும் பதவியாக காணப்படுதல். | நிரந்தரப் பதவிக்கு நியமனம் மேற்கொள்வதன் பொருட்டு அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்திருப்பதனால் இவ்வருடம் பெப்ருவரி மாதம் 15 ஆம் திகதி தொடக்கம் புதிய கட்டுப்பாட்டாளர் தலைமையதிபதியொருவர் நியமிக்கப்படுவாரென பி.க. அலுவலர்/ க. அலுவலர் குழுவிற்குத் தெரிவித்தார். |
| 2. | 2015 ஆம் ஆண்டு மதிப்பீடு செய்யப்பட்ட வருமானமானது சுமார் 155% னால் அதிகரித்திருத்தல் மற்றும், மூலதனச் செலவின் நிலுவையானது நிதி ஏற்பாடுகளில் 46% ஆகக் காணப்படுதல். | வருடத்தின் நடுப்பகுதியில் திருத்தப்பட்ட மதிப்பீடுகளை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதன் மூலம் இத்தகைய நிலைமைகளைத் தவிர்த்துக்கொள்ள முடியுமென்பது குழுவின் கருத்தாக அமைந்தது. |
| 3. | வாகனங்கள் பாகங்களாக இறக்குமதி செய்யப்படுவது தொடர்பாக அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படுதலின் தற்போதைய நிலைமை.<br>விதப்புரை செய்யப்பட்ட காலப் பகுதி கடந்துள்ள வாகனங்கள், பகுதிகளாக்கப்பட்டு இறக்குமதி செய்யப்படுகின்ற வாகனங்கள் மற்றும் மதுபான உற்பத்திக்கான வடி நீர்மம் போன்றவற்றுக்காக அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படுவதன் கொள்கையும் முறையியலும். | முதலீட்டுச் சபையினால் அங்கீகாரமளிக்கப்பட்ட UNIMO மற்றும் MICRO ஆகிய வாகனங்களை ஒன்றுகூட்டிப் பொருத்தும் இரண்டு நிறுவனங்களுக்கு மட்டும் அனுமதிப்பத்திரங்கள் விநியோகிக்கப்படுவதாக பி.க. அலுவலர்/க. அலுவலர் தெரிவித்தார்.<br>மதுபான உற்பத்திப் பொருட்களுக்காக மதுவரித் திணைக்களத்தின் விதப்புரைகளுக்கு அமைவாக அனுமதிப்பத்திரங்கள் விநியோகிக்கப்படுவதாகவும், வாகனங்கள் தொடர்பாக விதப்புரைகளைப் பெற்றுத்தரும் ஒரு நிறுவனம் இல்லாதமையினால் முன்வைக்கப்படுகின்ற விசேட விடயங்களை ஆராய்ந்து பார்த்ததன் பின்னர் அனுமதிப்பத்திரங்கள் விநியோகிக்கப்படுவதாகவும், இதன்போது பி.க. அலுவலர்/க. அலுவலர் தெரிவித்தார். இருப்பினும் வாகனங்கள் மற்றும் அவற்றின் பாகங்கள் என்பவற்றுக்காக அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படுவதை முற்றிலும் தற்போது இடைநிறுத்தி அது சம்பந்தமாக உரிய முறையொன்றைத் தயாரிப்பதற்கான நடவடிக்கைகள் இடம்பெற்று வருவதாகவும் மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களத்தினது இணைப்பாக்கத்துடன் குறித்த நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்வதாகவும் பி.க. அலுவலர்/க. அலுவலர் மேலதிகமாகவும் தெரிவித்தார். |

| | கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள் | பிரதம கணக்கீட்டு அலுவலரின்/ கணக்கீட்டு அலுவலரின் விடயங்கள் பற்றிய தெளிவுபடுத்தல் மற்றும் குழுவின் கருத்துகள்/கட்டளைகள் |
|---|---|---|
| 4. | திணைக்களத்திற்கான கணனி முறைமையின் வினைத்திறன். | புதிய கணனி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் வினைத்திறன்மிக்க வகையில் உரிமங்களை விநியோகிப்பதற்கான இயலுமை உள்ளதெனவும், அதேவேளை, சுங்கத் திணைக்களத்துடன் நேரடியாக இணைந்துகொள்ள முடியுமெனவும், பி.க. அலுவலர்/ க. அலுவலர் தெரிவித்ததோடு எதிர்காலத்தில் மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களம், தொலைத் தொடர்புகள் ஒழுங்கமைப்பு ஆணைக்குழு மற்றும் மதுவரித் திணைக்களம் என்பவை உள்ளடங்கிய அடிப்படையாக முக்கியமாக அமைகின்ற ஐந்து நிறுவனங்களோடு இந்த கணனி முறைமையை இணைத்து தகவல்களைப் பரிமாறிக் கொள்ள எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார். |
| 5. | மருந்துகள் மற்றும் நறுமணத் திரவியங்களுக்காக அனுமதிப்பத்திரம் விநியோகிக்கப்படும் முறையியல். | அதிகார சபையினால் வழங்கப்படுகின்ற விதப்புரைகளின் அடிப்படையில் மருந்துகளுக்காக அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படுவதாகவும் புதிய சட்டத்தின் பிரகாரம் நறுமணத் திரவியங்களுக்காக விதப்புரை பெற்றுக்கொள்ளும் நிறுவனங்கள் தொடர்பாக சிக்கல் காணப்படுவதாகவும் இங்கே பி.க. அலுவலர்/ க. அலுவலர் தெரிவித்தார். |
| 6. | இறக்குமதி செய்யப்படும் பழவகைகளின் தரம், தரநியமம் மற்றும் சுகாதார பாதுகாப்புத் தன்மை தொடர்பாக பாரிய சிக்கல்கள் காணப்படுதல். | இது தொடர்பாக சம்பந்தப்பட்ட சகல நிறுவனங்களுடனும் கலந்துரையாடி தெளிவான வேலைத்திட்டமொன்றைத் தயாரிக்குமாறும் அதன்போது பழவகை இறக்குமதியைப் போலவே கன்றுகள் மற்றும் விதை வகைகள், நீர் போத்தல்கள் போன்ற பொருட்களின் இறக்குமதியின்போது அனுமதிப் பத்திரங்கள் விநியோகிக்கப்படுதல் தொடர்பாகவும் மீண்டும் ஆராய்ந்து பார்க்குமாறு குழுவானது பி.க. அலுவலருக்கு/ க. அலுவலருக்கு கட்டளை வழங்கியதோடு ஒருமாத காலப்பகுதியில் அது பற்றிய அறிக்கையொன்றை குழுவிற்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் தெரிவிக்கப்பட்டது. |
| 7. | வெளிநாட்டு மதுபானங்களை விற்பனை செய்யும்போது அரசாங்கத்திற்குக் கிடைக்கின்ற வரி வருமானம் | வெளிநாட்டு மதுபானங்களைக் கட்டுப்படுத்துவதற்காக துல்லியமானதொரு முறை நடைமுறையில் இல்லாவிட்டாலும்கூட அதன்மீது விதிக்கப்படும் வரியின் அடிப்படையில் அதனை ஓரளவு கட்டுப்படுத்த முடியுமென பி.க. அலுவலர்/ க. அலுவலர் தெரிவித்தார். அதன்பொருட்டு எதிர் காலத்தில் மதுவரித் திணைக்களத்தின் ஊடாக ஸ்டிக்கர் முறையொன்றின் கீழ் புதிய வேலைத்திட்டமொன்றை வகுப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளதாகவும் பி.க. அலுவலர்/க. அலுவலர் மேலதிகமாகவும் தெரிவித்தார். |

| | **கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்** | **பிரதம கணக்கீட்டு அலுவலரின்/ கணக்கீட்டு அலுவலரின் விடயங்கள் பற்றிய தெளிவுபடுத்தல் மற்றும் குழுவின் கருத்துகள்/கட்டளைகள்** |
|---|---|---|
| 8. | இலங்கையிலிருந்து இந்தியாவுக்கு ஏற்றுமதி செய்யப்படும்போது வரி செலுத்த வேண்டியேற்படுவதில்லை என்பதால் இந்தோனீசியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படுகின்ற கொட்டைப் பாக்குகளை இலங்கையின் ஊடாக இந்தியாவுக்கு ஏற்றுமதி செய்தல். | அதற்காக அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படவில்லை என பி.க. அலுவலர்/க. அலுவலர் இங்கே தெரிவித்தார். ஏற்றுமதி இறக்குமதி கட்டுப்பாட்டுத் திணைக்களத்தின் நோக்கங்களுடன் இந்த விடயங்கள் இசைவாக்கமடைவதனால் சகல ஏற்றுமதிகள் இறக்குமதிகள் தொடர்பாகவும் ஒழுங்குபடுத்துமாறும் இது தொடர்பாக பொருத்தமான வேலைத்திட்டமொன்றை வகுக்குமாறும் குழுவானது பி.க. அலுவலருக்கு/ க. அலுவலருக்கு தெவித்தது. |
| 9. | பரிசுத் திட்டத்தின் கீழ் இறக்குமதி செய்யப்படுகின்ற வாகனங்களை பல்வேறுபட்ட தரப்புகளுக்கு பின்னர் சாட்டுதல். | இந்த வாகனங்களுக்கு இறக்குமதியின்போது வரி விலக்களிக்கப்படுவதில்லை என்பதால், சம்பந்தப்பட்ட தரப்புக்களால் மேற்கொள்ளப்பட்ட கோரிக்கைகளை ஆராய்ந்து பார்த்து வங்கிக்கு அடகு வைப்பதற்கு மட்டும் அனுமதியளிக்கப்பட்டிருப்பதாக பி.க. அலுவலர்/க. அலுவலர் தெரிவித்தார். அத்தகைய செயன்முறைகளின் போது அனுமதிப்பத்திரங்கள் விநியோகிக்கப்பட்டதன் பின்னர் மீளாய்வுக்கு உட்படுத்தப்பட வேண்டுமென குழுவானது முன்மொழிந்தது.<br><br>அதேவேளை, இச்செயன்முறையுடன் சம்பந்தப்பட்ட சகல நிறுவனங்களையும் ஒன்றிணைத்து பொருத்தமான கொள்கையொன்றையும் ஒழுங்கமைத்தல் முறையியலொன்றையும் உருவாக்குவதற்கு நடவடிக்கையெடுக்குமாறும் குழுவானது பி.க. அலுவலருக்கு/ க. அலுவலருக்கு தெவித்தது. |
| | **வாழ்வின் எழுச்சித் திணைக்களம்**<br>**2016 பெப்ருவரி 11** | |
| 1. | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் வெற்றிடங்கள் காணப்படுதல். | சமுர்த்தி முகாமையாளர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கான செயன்முறையை எதிர்வரும் வாரத்தில் அங்கீகரித்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களை ஆட்சேர்த்தல் தற்போது அங்கீகரிக்கப்பட்டுள்ளதால் எதிர்வரும் மூன்று மாத காலப்பகுதியில் குறிப்பிட்ட நடவடிக்கைகளை முடிவுறுத்த முடியுமெனவும் பி.க. அலுவலர்/க. அலுவலர் தெரிவித்தார்.<br><br>அது தொடர்பாக காலப் பகுதிகளுடன்கூடியதொரு அறிக்கையை ஒரு மாத காலப்பகுதியில் குழுவிற்குச் சமர்ப்பிக்குமாறு பி.க. அலுவலருக்கு/ க. அலுவலருக்கு கட்டளையிடப்பட்டது. |
| 2. | 2004ஆம் ஆண்டு நடைமுறைப்படுத்தப்பட்ட ஹெட்டிபொல தும்புப் பூச்சாடி கருத்திட்டம் தோல்வியுறல் மற்றும் சொத்துக்கள் காணாமல் போதல். | இது பற்றிய விசாரணை நடவடிக்கைகள் குற்றவியல் புலனாய்வுத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், 2015.11.23 ஆம் திகதி நிலையப் பரிசோதனையொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் பி.க. அலுவலர்/க. அலுவலர் தெரிவித்தார். |

| | கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள் | பிரதம கணக்கீட்டு அலுவலரின்/ கணக்கீட்டு அலுவலரின் விடயங்கள் பற்றிய தெளிவுபடுத்தல் மற்றும் குழுவின் கருத்துகள்/கட்டளைகள் |
|---|---|---|
| 3. | சமுர்த்தி ஊழியர்களுக்கு குத்தகை வசதிகளைப் பெற்றுக்கொடுப்பதற்காக குத்தகைக் கம்பனியொன்றுக்குப் பெற்றுக்கொடுக்கப்பட்டிருந்த ரூபா 230 மில்லியன் பணத்தில் மீளளிப்புச் செய்துகொள்ள வேண்டிய ரூபா 24.3 மில்லியனை மாதாந்தத் தவணைகளில் அறவிட்டுக்கொள்ளல். | இது தொடர்பாக நீதிமன்ற நடவடிக்கையெடுப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் சட்ட மாஅதிபரின் ஆலோசனைகள் பெறப்படுமென்றும் பி.க. அலுவலர்/க. அலுவலர் தெரிவித்தார். |
| 4. | நுவரெலியாவைச் சேர்ந்த 19 சமுர்த்தி உத்தியோகத்தர்களால் மோசடி செய்யப்பட்ட ரூபா 4,005,000/= பணத்தில் மேற்கொண்டும் அறவிட்டுக்கொள்ள வேண்டியுள்ள ரூபா 2,809,567/= பணத்தை அறவிடடுக்கொள்வதற்காக குற்றவியல் நீதிமன்றத்திற்கு ஆற்றுப்படுத்தப்படுதல் தொடர்பாக குழு வினவியது. | சம்பந்தப்பட்ட மோசடியுடன் தொடர்புள்ள சகல உத்தியோகத்தர்களும் சேவையிலிருந்து நீக்கப்பட்டுள்ளதாகவும், குறிப்பிட்ட தொகையில் ஏற்கனவே ரூபா 69 இலட்சம் அறவிடப்பட்டிருப்பதாகவும், எஞ்சிய தொகையை அறவிட்டுக்கொள்வதற்காக நுவரெலியா நீதவான் நீதிமன்றத்தில் வழக்கொன்று தாக்கல் செய்யப்பட்டிருப்பதாகவும், பி.க. அலுவலர்/ க. அலுவலர் தெரிவித்தார் |
| 5. | பதியபெலல்ல வங்கிச் சங்கத்தைச் சேர்ந்த 23 உத்தியோகத்தர்களால் மோசடி செய்யப்பட்ட ரூபா 3,789,500/= தொடர்பாக நீதிமன்றத்தில் விசாரணையிலுள்ள வழக்குகளின் முன்னேற்றம். | இது தொடர்பாக கொழும்பு மேல் நீதிமன்றத்தில் வழக்கு தொடுக்கப்பட்டுள்ளதோடு உரிய பணத்தொகை அறவிடப்பட்டு வருவதாகவும், அதேவேளை இது சட்ட மாஅதிபர் திணைக்களத்திற்கு ஆற்றுப்படுத்தப்பட்டு உள்ளதாகவும் பி.க. அலுவலர்/க. அலுவலர் தெரிவித்தார்.<br><br>அது தொடர்பாக மீளாய்வொன்றை மேற்கொண்டு குழுவிற்கு அறிக்கையொன்றைச் சமர்ப்பிக்குமாறு பி.க. அலுவலருக்கு/க. அலுவலருக்கு கட்டளையிடப்பட்டது. |
| 6. | 2004 ஆம் ஆண்டு சீகிரி சமுர்த்தி ஸ்டீல்ஸ் தனியார் கம்பனியிலும் ADX சமுர்த்தி தனியார் கம்பனியிலும் முதலீடு செய்யப்பட்டுள்ள ரூபா 1,240,000/= விற்காக அனுகூலங்கள் கிடைக்காமை தொடர்பாக குழு ஆராய்ந்தது. | ADX நிறுவனம் இயங்கி வருகின்ற இடத்தினை உறுதிப்படுத்திக்கொள்வது கடினமாக அமைந்துள்ளதாக பி.க. அலுவலர்/க. அலுவலர் தெரிவித்தார்.<br><br>அக்கம்பனிகள் தொடர்பாக சட்ட நடவடிக்கை மேற்கொள்வதற்கு நடவடிக்யெடுக்குமாறு பி.க. அலுவலருக்கு/க. அலுவலருக்கு கட்டளையிடப்பட்டது. |
| 7. | ஹங்குரண்கெத்தவில் ஆடைத் தொழிற்சாலையொன்றை நிர்மாணிப்பதற்காக சமுர்த்தி நிதியத்திலிருந்து தனியார் நிறுவனமொன்றுக்குப் பெற்றுகொடுக்கப்பட்டுள்ள ரூபா 28 மில்லியன் கடனையும் ரூபா 2.5 மில்லியன் செலவினையும் அறவிட்டுக்கொள்வதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள சட்ட ரீதியான நடவடிக்கைகளின் முன்னேற்றம் தொடர்பாக குழு ஆராய்ந்தது. | சிவில் சட்டத்தின் கீழ் வழக்குத் தொடுக்கக்கூடிய இயலுமை இல்லையென சட்ட மாஅதிபர் திணைக்களம் தெரிவித்துள்ளதாக பி.க. அலுவலர்/க. அலுவலர் தெரிவித்தார்.<br><br>அது தொடர்பாக மீண்டும் சட்ட மாஅதிபரின் ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளுமாறும் உள்ளக விசாரணையொன்றை நடாத்தி குழுவிற்கு அறிவிக்குமாறும் பி.க. அலுவலருக்கு/க. அலுவலருக்கு கட்டளையிடப்பட்டது. |
| 8. | 2004 ஆம் ஆண்டு ரூபா 31,300,000/= வுக்கு குத்தகைக்கு எடுக்கப்பட்ட காணியை பயன்படுத்துவது தொடர்பாக குழு ஆராய்ந்தது. | இக்காணியில் வாழ்வின் எழுச்சி நிருவாகக் கட்டிடத் தொகுதியொன்றை நிர்மாணிப்பதற்கு நகர அபிவிருத்தி அதிகார சபையுடன் அடிப்படை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக பி.க. அலுவலர்/க. அலுவலர் தெரிவித்தார். |

| | **கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்** | **பிரதம கணக்கீட்டு அலுவலரின்/ கணக்கீட்டு அலுவலரின் விடயங்கள் பற்றிய தெளிவுபடுத்தல் மற்றும் குழுவின் கருத்துகள்/கட்டளைகள்** |
|---|---|---|
| 9. | வாழ்வின் எழுச்சி திணைக்களம் தாபிக்கப்படும்போது ஒருங்கிணைக்கப்பட்ட 4 நிறுவனங்களின் இறுதிக் கணக்குகள் கணக்காய்வுக்கு உட்படுத்தப்பட்டிருக்காமை தொடர்பாக குழு வினவியது. நிலையான சொத்துக்கள் சரியாக சாட்டிக்கொள்ளப்பட்டதாக உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | சமுர்த்தி அதிகார சபையைத் தவிர ஏனைய இரண்டு திணைக்களங்களும், இரண்டு அதிகார சபைகளும் உரிய முறையில் பராமரிக்கப்படாதமை காரணமாக இறுதிக் கணக்குகளில் காட்டப்பட்டுள்ள அட்டவணைகளின் பிரகாரம் வேறு சில ஆவணைங்களைப் பயன்படுத்தி சொத்துக்களை மீளாய்வு செய்து திணைக்களத்திற்கு சுவீகரித்துக்கொள்ளப்பட்டிருப்பதாக பி.க. அலுவலர் தெரிவித்தார். சொத்துக்கள் பற்றிய ஆவணங்களை கண்டறிந்து செயற்படுவதற்கு பிறிதொரு கணக்காளர் நியமிக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவித்தார்.<br><br>வாழ்வின் எழுச்சி திணைக்களத்திற்கு சுவீகரித்துக்கொள்ளப்பட்ட நிறுவனங்களின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் என்பவற்றை சுவீகரித்துக்கொள்ளும் முழுமையான செயன்முறை தொடர்பாக கணக்காய்வாளர் தலைமை அதிபதியுடன் கலந்துரையாடி செலுத்தித் தீர்ப்பதற்கான கணக்குளைத் தயாரித்து அவை தொடர்பாக முழுமையான ஒரு அறிக்கையை ஒரு மாத காலப்பகுதிக்குள் சமர்ப்பிக்குமாறு பி.க. அலுவலருக்கு/க. அலுவலருக்கு கட்டளையிடப்பட்டது. |
| 10. | திணைக்களத்தின் விடயப்பரப்பிற்குப் புறம்பானதொரு பணியின் நிமித்தம் ரூபா 36,509,127/= பெறுமதியான 32,976 கெல்வனைஸ் குழாய்கள் கொள்வனவு செய்யப்படுதல். | பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் மூலம் வாழ்வின் எழுச்சி அபிவிருத்தித் திணைக்களத்தின் செலவுகளுக்காக ஒதுக்கப்பட்டிருந்த மூலதன ஏற்பாடுகளிலிருந்து உரிய செலுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக பி.க. அலுவலர்/க. அலுவலர் தெரிவித்தார். |
| 11. | வாழ்வின் எழுச்சி அபிவிருத்தித் திணைக்களத்தினால் 6 சந்தர்ப்பங்களில் ரூபா 54.02 மில்லியன் அச்சு நடவடிக்கைகளின் போது நிதிப் பிரமாணங்களுக்குப் புறம்பாக செலவு செய்யப்பட்டிருத்தல். | இது தொடர்பாக உள்ளக விசாரணையொன்றை மேற்கொள்ளுமாறும் விசாரணை நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நிறுவனங்களுக்கு ஒத்துழைப்பு வழங்கி கணக்காய்வாளர் தலைமையதிபதியுடன் கலந்துரையாடி அமைச்சு மட்டத்தில் அவதானிப்பு அறிக்கையொன்றை குழுவிற்குச் சமர்ப்பிக்குமாறும் பி.க. அலுவலருக்கு/க. அலுவலருக்கு கட்டளையிடப்பட்டது. |
| 12. | பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கிராமியப் பாலங்கள் 1210 ஐ அபிவிருத்தி செய்யவதற்கான வேலைத்திட்டத்தின் கீழ் அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டிருந்த இரண்டு ரூபவாஹினி பிரச்சார நிகழ்ச்சிகளுக்காக ரூபா 5,040,000/= ஐ செயலாளரது ஆலோசனையின் பிரகாரம் சம்பந்தப்பட்ட ஊடக நிறுவனங்களுக்கு செலுத்துவதற்கு வாழ்வின் எழுச்சி அபிவிருத்தித் திணைக்களத்தினால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருத்தலானது குழுவின் ஆராய்தலுக்கு உள்ளானது. | பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கிராமியப் பாலங்களை நிர்மாணிப்பதற்கான வேலைத்திட்டத்தின் கீழ் குறிப்பிட்ட நடவடிக்கைகள் இடம்பெற்றிருப்பதாக பி.க. அலுவலர்/க. அலுவலர் தெரிவித்தார்.<br><br>அது தொடர்பாக விசாரணையொன்றை மேற்கொண்டு தெவிக்குமாறு பி.க. அலுவலருக்கு/க. அலுவலருக்கு கட்டளையிடப்பட்டது. |

| | கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள் | பிரதம கணக்கீட்டு அலுவலரின்/ கணக்கீட்டு அலுவலரின் விடயங்கள் பற்றிய தெளிவுபடுத்தல் மற்றும் குழுவின் கருத்துகள்/கட்டளைகள் |
|---|---|---|
| 13. | திணைக்களத்திற்கான பெறுகைகள் குழுவின் உரிய அனுமதியின்றி ரூபவாஹினீ குறும் விளம்பரங்கள் 03 காக தயாரிப்பு நிறுவனத்திற்கு ரூபா 707,625/= செலுத்தப்பட்டிருந்ததோடு குறிப்பிட்ட நிகழ்ச்சிகளை பிரச்சாரம் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்காமை தொடர்பாக குழு வினவியது. | பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் செயலாளரது ஆலோசனைகளின் மீது அவ்வமைச்சின் செலவுத் தலைப்பின் கீழ் செலுத்தல்களை மேற்கொள்வதற்காக சமர்ப்பிக்கப்பட்டிருப்பதாக மேலதிகமாகவும் தெரிவிக்கப்பட்டது.<br><br>அது தொடர்பாக அமைச்சு மட்டத்தில் உள்ளக விசாரணையொன்றை மேற்கொள்ளுமாறு குழுவானது பி.க. அலுவலருக்குக் கட்டளையிட்டது. |
| | பின்வரும் விடயங்கள் தொடர்பாக குழுவின் கவனஞ் செலுத்தப்பட்டது. | கணக்காய்வாளர் தலைமை அதிபதியுடன் கலந்துரையாடி ஒரு மாத காலப்பகுதிக்குள் அறிக்கையொன்றைச் சமர்ப்பிக்குமாறு பி.க. அலுவலருக்கு/க. அலுவலருக்கு கட்டளையிடப்பட்டது. |
| | 1. திறைசேரியின் அனுமதியின்றி ரூபா 106,873,148/= பெறுமதியான நீர் கொள்கலன்கள் விலை மனுக்கோரலின்றி கொள்வனவு செய்யப்படுதல்.<br><br>2. முச்சக்கர வண்டி சாரதிகளுக்காக ஆயுட் காப்புறுதித் திட்டமொன்றையும் ஓய்வூதியத் திட்டமொன்றையும் அறிமுகப்படுத்துவதன் பொருட்டு தகவல்களை ஒன்று திரட்டுவதற்காக ரூபா 2,402,400/= வைச் செலவிட்டு மாதிரிப் படிவங்களை அச்சிடுதல்.<br><br>3. சட்டத்தின் ஏற்பாடுகள் மீறப்படும் வகையில் வாழ்வின் எழுச்சி மாநாடு நடத்தப்படுதல் மற்றும் மாநாட்டுக்கான உட்கட்டமைப்பு வசதிகளுக்காக ரூபா 16,629,435/= வும் விளம்பர நடவடிக்கைகளுக்காக ரூபா1,954,300/= வும் செலவிடப்படுதல்.<br><br>4. 5,000,000 பஞ்சாங்கங்களை அச்சிடுவதற்காக ரூபா 29,400,000/= செலவிடப்படுதல் மற்றும் விநியோகிக்கப்படுதல் கணக்காய்வின்போது உறுதிப்படுத்தப்படாமை.<br><br>5. சேவையிலிருந்து விலகிய 826 உத்தியோகத்தர்களுக்காக நட்டஈடு மற்றும் பணிக்கொடை என்பவற்றுக்காக ரூபா 833,237,615/= வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படையிலான வங்கிகளுக்கு மீளளிப்புச் செய்யப்படாமை. | |

| | கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள் | பிரதம கணக்கீட்டு அலுவலரின்/ கணக்கீட்டு அலுவலரின் விடயங்கள் பற்றிய தெளிவுபடுத்தல் மற்றும் குழுவின் கருத்துகள்/கட்டளைகள் |
|---|---|---|
| | 6. பெறுகைகள் செயன்முறைக்குப் புறம்பாக குறைந்த வருமானம் பெறுவோருக்குப் பெற்றுக்கொடுப்பதற்காக ரூபா 9,76,734/= வை செலவிட்டு கூரை ஓடுகளைக் கொள்வனவு செய்தல்.<br>7. *இசுருமத் நிவஹனக்* எனும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படையிலான வங்கிக் கம்பனிகளுக்கான நிதியத்திலிருந்து ரூபா 2,992,777,500/= அனுமதியின்றி நிவாரணக் குடும்பங்களுக்குச் செலுத்துதல் மற்றும் பிரச்சாரத்திற்காக ரூபா 997,476/= செலுத்தப்படுதல்.<br>8. சமூகப் பாதுகாப்பு நிதியத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் கணக்காய்வுக்கு உட்படுகின்ற நியதிச்சட்ட நிதியமாக மாற்றியமைப்பதற்கு நடவடிக்கை எடுக்காமை. | |
| 14. | *9.* வாழ்வின் எழுச்சி சட்டத்தின் பிரகாரம் வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படையிலான வங்கிச் சங்கமொன்றை தாபிப்பதற்கு இதுவரை நடவடிக்கை எடுக்காமை.<br>10. திறைசேரிக்கு அல்லது சமுர்த்தி ஆணையாளர் நாயகத் திணைக்களத்தின் இணக்கப்பாடின்றி சமுர்த்தி பயனுகரிகளின் கட்டாயச் சேமிப்புகள் மற்றும் வங்கி நிதிப் பிரிவின் நிதிகள் மற்றும் ஒதுக்கங்கள் என்பவற்றைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்டுள்ள முதலீடுகள்.<br>11. உரிய கொள்வனவுச் செயன்முறைக்குப் புறம்பாக குறைந்த வருமானம் பெறுவோருக்குப் பெற்றுக்கொடுப்பதற்காக ரூபா 9,769,734/= வைப் பயன்படுத்தி கூரை ஓடுகளைக் கொள்வனவு செய்தல்.<br>12. வாழ்வின் எழுச்சி அபிவிருத்தித் திணைக்களத்தின் தலைமையகம் தாபிக்கப்படுதல் தொடர்பாக பெறுகைகள் செயன்முறைக்குப் புறம்பாக செலுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டிருத்தல்.<br>13. திணைக்களத்தின் உத்தியோகபூர்வ வங்கிக் கணக்குக்குரிய இணக்கக்கூற்றுக்கள் தயாரிக்கப்படாமை. | |

| | கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள் | பிரதம கணக்கீட்டு அலுவலரின்/ கணக்கீட்டு அலுவலரின் விடயங்கள் பற்றிய தெளிவுபடுத்தல் மற்றும் குழுவின் கருத்துகள்/கட்டளைகள் |
|---|---|---|
| 15. | சமூகப் பாதுகாப்பு நிதியமானது கணக்காய்வுக்கு உள்ளாகாமையும் அதனை கணக்காய்வுக்கு உட்படுத்துவதற்குத் தேவையான சட்ட ஏற்பாடுகள் இன்மையும் | இது தொடர்பாக சட்டத்தில் சிற்சில மாற்றங்களை மேற்கொள்ள வேண்டுமெனவும் குழுவினால் முன்மொழியப்பட்டது.<br>பொறுப்பாளர் சபை கூடியதன் பின்னர் கணக்காய்வாளர் தலைமையதிபதியிடம் ஆராய்ந்து கணக்காய்வுக் கம்பனியொன்றை இனங்கண்டு அதனூடாக கணக்காய்வினை மேற்கொள்வதற்கு தற்போது தீர்மானிக்கப்பட்டிருப்பதாக பி.க. அலுவலர் தெரிவித்தார். |
| **கல்வி அமைச்சு (மீள அழைக்கப்படுதல்)**<br>**2016 பெப்ருவரி 12** | | |
| 1. | தொழில்நுட்பப் பாடத்துறையை பாடசாலைகளில் அறிமுகஞ் செய்தல் பற்றிய முன்னேற்றம். | அமைச்சு மட்டத்தில் ஒருங்கிணைந்த வேலைத்திட்டமொன்றை வகுத்து நிதி ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தாலும் கல்வி மற்றும் தொழிற் பயிற்சி ஆகிய அமைச்சுகளுக்கு இடையில் சீரான இணைப்பாக்கம் இன்மையின் காரணமாக சிக்கல்கள் தோன்றியுள்ளனவென்பது குழுவின் கருத்தாக அமைந்தது. தற்போது உயிர் முறைமைகள் மற்றும் தொழில்நுட்பவியல் ஆகிய துறைகளுக்காக போதியளவு ஆசியரியர்கள் இருப்பதனால் பொறியியல் தொழில்நுட்பவியலுக்காக தொழிற் பயிற்சி அமைச்சுடன் கலந்துரையாடி முறையான திட்டமொன்றைத் தயாரித்துக்கொள்ளுமாறு பி.க. அலுவலருக்கு தெரிவிக்கப்பட்டது.<br>பல்கலைக்கழக அனுமதியை இழக்கும் உயர்தரம் சித்தியடைந்தவர்களுக்காக தொழில் பயிற்சி அமைச்சு எடுத்துள்ள நடவடிக்கைகள் எவையெனக் குழு வினாவியது. உயர்தரம் சித்தியடைந்தவர்களுக்கர்க NVQ 5 மட்டத்திலான பாடநெறிகளும் ஏனையவர்களுக்காக NVQ 4 மட்டத்திலான பாடநெறிகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பிரதம கணக்கீட்டு அலுவலர் தெரிவித்தார். அமைச்சுக்கள் இரண்டும் இணைந்து உரிய வேலைத்திட்டமொன்றை வகுத்துக்கொள்ள வேண்டுமென குழு அறிவித்தது. |
| 2. | கல்வி அமைச்சின் பணிகளை கணனிமயப்படுத்தல். | கணனிமயப்படுத்தும் இரண்டாம் கட்டம் தற்போது நிறைவடைந்துள்ளதாக பிரதம கணக்கீட்டு அலுவலர் அறிவித்ததுடன் அந்த நிகழ்ச்சித் திட்டத்திற்கு ஆசிரியர்களின் தரவுகளை உள்ளடக்குவது இதுவரை இடம் பெறவில்லை என்பது அறிய வந்துள்ளதுடன், காலத்தோடு ஒப்பிடுகையில் அதில் நிலவும் தாமதம் தொடர்பாக குழு தனது அதிர்ப்தியை தெரிவித்தது. ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களின் தகவல்கள் அடங்கிய கணனி முறைமையொன்றின் முக்கியத்துவத்தை விளக்கி அது தொடர்பாக நடைமுறை ரீதியிலான வேலைத்திட்டமொன்றை தயாரித்துக்கொள்வதானதும், தற்போதுள்ள கணனி முறைமையின் இயங்கும் தன்மை தொடர்பாக அறிக்கையொன்றை முன்வைக்குமாறு குழு கட்டளையிட்டது. |

| | **கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்** | **பிரதம கணக்கீட்டு அலுவலரின்/ கணக்கீட்டு அலுவலரின் விடயங்கள் பற்றிய தெளிவுபடுத்தல் மற்றும் குழுவின் கருத்துகள்/கட்டளைகள்** |
|---|---|---|
| 3. | கொழும்பு ஆனந்தா கல்லூரியின் ஏழு மாடிக்கட்டிடத்தை இடித்து அப்புறப்படுத்தல். | பேணிப்பாதுகாத்து தொடர்ந்தும் பாவிக்கக்கூடிய நிலையில் இருந்த கட்டிடத்தை இடித்து அப்புறப்படுத்துவதற்கு யார் சிபாரிசு செய்தார் என்பது தொடர்பாக குழு கேள்வி எழுப்பியது. இந்தக் கட்டிடத்தை இடித்து அப்புறப்படுத்துவதற்கு கட்டிட ஆராய்ச்சி நிறுவனம், மத்திய பொறியியலாளர் பணியகம் அல்லது வேறு ஏதேனும் நிறுவனமொன்றின் அனுமதி பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளதா என குழு மேலும் வினாவியது. அது இடிக்கப்பட்டதனால் மாணவர்கள் ஏதேனும் சிரமங்களை எதிர்நோக்குகின்றார்களா என்பது தொடர்பாகவும் அந்த இடிபாடுகள் விற்கப்பட்டுள்ளனவா என்பது தொடர்பான விபரமான அறிக்கையொன்றை குழுவுக்கு சமர்ப்பிப்பதற்கும் பாடசாலைக்கு மின்பிறப்பாக்கி இயந்திரமொன்றை கொள்வனவு செய்வதற்காக கடந்த இரண்டு வருடங்களாக சேகரிக்கப்பட்ட பணம் மாணவர் சங்கக் கணக்கில் வைப்பிலிடப்பட்டுள்ளதா என்றும் கேட்கப்பட்டதுடன் அது தொடர்பாகவும் அறிக்கையொன்றை சமர்ப்பிக்குமாறு பிரதம கணக்கீட்டு அலுவலருக்கு கட்டளையிடப்பட்டது. |
| **குருணாகல் மாவட்ட செயலகம்**<br>**2016.02.12** | | |
| 1. | பொது வைப்புக் கணக்கில் 02 வருடங்கள் கழிந்து ரூபா 32 மில்லியன் காணப்படுதல் மற்றும் அது தொடர்பாக நிதி ஒழுங்கு விதிகளுக்கமைய நடவடிக்கை எடுக்கப்படாமை. | வீதி அபிவிருத்தியின்போது மீதியாகவுள்ளவற்றை அபிவிருத்தி செய்யவேண்டி இருந்தமையினால் அந்த வைப்புக் கணக்கில் ரூபா 70 மில்லியன் இருப்பதாக பிரதம கணக்கீட்டு அலுவலர் அறிவித்தார். மாகாண வீதி அபிவிருத்தி சபையுடன் கலந்துரையாடி இந்த பணிகளை பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்குமாறு குழுவினால் பிரதம கணக்கீட்டு அலுவலருகக்கு மற்றும் கணக்கீட்டு அலுவலருக்கு அறிவிக்கப்பட்டது. இது தொடர்பாக இரண்டு கிழமைகளுக்குள் கால எல்லையையும் உள்ளடக்கி அறிக்கையொன்றை குழுவுக்கு சமர்ப்பிக்குமாறு பிரதம கணக்கீட்டு அலுவலருக்கு / கணக்கீட்டு அலுவலருக்கு கட்டளையிடப்பட்டுள்ளது. |
| 2. | அரச உத்தியோகத்தர்களுக்கான “பீ” கணக்கின் நிலுவை மீதியை அறவிட்டுக் கொள்வதற்காக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை தொடர்பாக குழுவில் கேட்கப்பட்டது. | அந்தக் கடன்தொகையை அறவிட்டுக் கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும், இந்த கடன்பட்டோர் உயிரிழத்தல், சேவையை விட்டு நீங்கிச் செல்லல், வேலை இடைநிறுத்தம் செய்யப்படல் போன்ற காரணங்களினால் இந்த நிலமை ஏற்பட்டுள்ளதாக பிரதம கணக்கீட்டு அலுவலர்/ கணக்கீட்டு அலுவலர் அறிவித்தார். எத்தகைய காரணங்கள் இருப்பினும் அறவிடப்படவேண்டிய பணம் இருப்பின் அவற்றை அறவிட்டுக் கொள்வதற்கு தாபன ரீதியிலான நடவடிக்கைகள் மற்றும் சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு குழு கட்டளையிட்டது. |

| | கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள் | பிரதம கணக்கீட்டு அலுவலரின்/ கணக்கீட்டு அலுவலரின் விடயங்கள் பற்றிய தெளிவுபடுத்தல் மற்றும் குழுவின் கருத்துகள்/கட்டளைகள் |
|---|---|---|
| 3. | “ஜாதிக சவிய” மற்றும் “கிராம எழுச்சி” கருத்திட்டத்தின் கீழ் ரூபா 17,383,481/- பெறுமதியான பணம், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள், முதலீட்டுச் சபையினால் கையளிக்கப்பட்டுள்ள ரூபா 55,618,000/- பெறுமதியான கட்டிடங்கள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள், காணி சீர்திருத்த ஆணைக்குழுவுக்கு ரூபா 37,621,110/- செலுத்தி கனேவத்த பிரதேச செயலகத்தினால் கொள்வனவு செய்யப்பட்ட 75 ஏக்கர் பரப்பளவுள்ள காணியும் 30 வருட குத்தகையில் வரையறுக்கப்பட்ட ஹரியால விவசாய அமைப்புக்கு 1999இல் வழங்கியமை. | தற்போது அந்த கருத்திட்டத்தில் விதைநெல் உற்பத்தி வேலைத்திட்டமொன்றும் இரண்டு நெல் ஆலைகளும் இயங்குவதாக பிரதம கணக்கீட்டு அலுவலர்/கணக்கீட்டு அலுவலர் அறிவித்தார். |
| 4. | மேற்கூறிய காணியிலிருந்த 93 தேக்கு மரங்களை வெட்டி ஏற்றிச் செல்வதற்காக பிரதேச செயலகத்தினால் மாவட்ட வீச்சிடை காட்டு உத்தியோகத்தரிடம் அனுமதி கேட்கப்பட்ட போதிலும் ரூபா 6,386,867/- பெறுமதியான 111 தேக்கு மரங்கள் வெட்டப்பட்டிருந்தமை தொடர்பாக குழு கேள்வி எழுப்பியது. | ரூபா 80 மில்லியன் செலவினை மேற்கொள்ளல் தொடர்பில் அரசின் மேற்பார்வை கட்டாயம் தேவைப்படுவதனால் இது தொடர்பாக அபிவிருத்தி மூலோபாயங்கள் மற்றும் சர்வதேச வர்த்தக நடவடிக்கைகள் மற்றும் நிதி அமைச்சு, உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு மற்றும் முதலீட்டுச் சபை என்பன இணைந்து அனைத்து தரப்பினரையும் அழைத்து இந்த நிறுவனத்திற்கு பணம் வழங்கியமை தொடர்பாகவும், இந்த கம்பனியின் தற்போதைய செயற்பாடு தொடர்பாகவும் இந்த கம்பனியின் நடவடிக்கைகள் தொடர்பாக அரசின் மேற்பார்வை இடம்பெறும் வகையிலான வேலைத்திட்டமொன்றைத் தயாரிக்குமாறு பிரதம கணக்கீட்டு அலுவலருக்கு/கணக்கீட்டு அலுவலருக்கு அறிவிக்கப்பட்டது. |
| 5. | பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் சுற்றுநிருபத்தின்படி 2014 ஆம் ஆண்டுக்கான அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்தும் போது 30 பிரதேச செயலகங்களுக்கு ஏற்புடைய 1416 கருத்திட்டங்கள் நிறுத்தப்பட்டமை தொடர்பாக குழு கேள்வி எழுப்பியது | குறிப்பிட்ட சுற்றுநிருபம் 2015 இல் திருத்தப்பட்டுள்ளதாக பிரதம கணக்கீட்டு அலுவலர்/கணக்கீட்டு அலுவலர் அறிவித்துள்ளார். |
| | **கண்டி மாவட்ட செயலகம்**<br>**2016 பெப்ரவரி 23** | |
| 1. | 2015 ஆம் ஆண்டு மாவட்ட செயலகத்துக்காக 43 அமைச்சுக்களினால் வழங்கப்பட்ட ரூபா 4.3 பில்லியன் நிதி ஏற்பாட்டில் ரூபா 2.1 பில்லியன் மாத்திரமே செலவிடப்பட்டுள்ளது. | 2015.12.31 ஆம் திகதிக்கான மீதி இதனையும்விட குறைந்த பெறுமதியுடையது என்றும் அமைச்சுக்களிடமிருந்து கிடைக்கும் பணம் தொடர்பாக குறிப்பிட்ட விடயப்பொறுப்பு உத்தியோகத்தருடன் மாதாந்தம் மீளாய்வு செய்வதுடன் டிசம்பர் இறுதியாகும்போது இரண்டு அமைச்சுகளிடமிருந்து மாத்திரம் பணம் கிடைக்கப்பெற்றிருந்ததுடன் அவற்றை செலவு செய்யமுடியாத நிலைமை தொடர்பாக குறிப்பிட்ட அமைச்சுக்களுக்கு அறிவிக்கப்பட்டிருந்ததாக பிரதம கணக்கீட்டு அலுவலர்/கணக்கீட்டு அலுவலர் தெரிவித்தார்.<br><br>அது தொடர்பான அறிக்யொன்றை குழுவுக்கு சமர்ப்பிக்குமாறு பிரதம கணக்கீட்டு அலுவலர்/கணக்கீட்டு அலுவலருக்கு அறிவிக்ககப்பட்டது. |

| | கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள் | பிரதம கணக்கீட்டு அலுவலரின்/ கணக்கீட்டு அலுவலரின் விடயங்கள் பற்றிய தெளிவுபடுத்தல் மற்றும் குழுவின் கருத்துகள்/கட்டளைகள் |
|---|---|---|
| 2. | நெல் கொள்வனவு செய்வதற்காக மினிப்பே கூட்டுறவு சங்கத்துக்கு செலுத்தப்பட்ட முற்பணத்தில் நிலுவையாக உள்ள ரூபா 3,971,687/- பணத்தை தவணை அடிப்படையில் அறவிட்டுக் கொள்வதன் முன்னேற்றம் தொடர்பாக குழு கேள்வி எழுப்பியது. | 2015 ஆம் வருடம் நிலுவைப் பணத்துடன் ரூபா ஒரு மில்லியன் தற்போது அறவிடப்பட்டுள்ளதுடன் மீதியான ரூபா 2.791 மில்லியனை ரூபா 30,000/- வீதம் தற்போது அறவிட்டு வருவதாகவும் பிரதம கணக்கீட்டு அலுவலர்/கணக்கீட்டு அலுவலர் அறிவித்தார். |
| 3. | 2008 இல் வாகன விபத்தினால் ஏற்பட்ட ரூபா 360,435/- இழப்பை அறவிட்டுக் கொள்ளாமை. | வாகன விபத்து தொடர்பாக வழங்கப்பட்டுள்ள தகவல்களை உறுதிப்படுத்திக் கொள்வதில் பிரச்சினை இருப்பதாகவும் ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்வதற்காக அதனை அரச நிதிப் பணிப்பாளருக்கு எழுத்து மூலம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும் பிரதம கணக்கீட்டு அலுவலர்/கணக்கீட்டு அலுவலர்அறிவித்துள்ளார். இது தொடர்பான அறிக்கையை ஒரு மாதத்துக்குள் சமர்ப்பிக்குமாறு தலைமை கணக்கு வழங்கும் உத்தியோகத்தர் / கணக்கு வழங்கும் உத்தியோகத்தருக்கு கட்டளையிடப்பட்டது. |
| 4. | கிராமிய மக்களின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக நடைமுறைப்படுத்த வேண்டிய கருத்திட்டங்களுக்குப் பதிலாக அம்புலுவாவ உயிரியல் பல்லினத் தன்மை அலகின் கட்டிடங்ள், புகுவழிகள், பாலங்களை நிர்மாணித்தல் போன்ற 24 கருத்திட்டங்களுக்கு ரூபா 15,652,320/- செலவிடப்பட்டிருந்தது. | இதற்காக பண்முகப்படுத்தப்பட்ட நிதி ஏற்பாட்டின் கீழ் நிதி அனுமதிக்கப்பட்டுள்ளது என்றும், குறிப்பிட்ட அனுமதிகள் ஒருங்கிணைப்பு கூட்டங்களின்போது பெற்றுக் கொள்ளப்பட்டது எனவும், குறிப்பிட்ட அனைத்துப் பணிகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது என்றும் பிரதம கணக்கீட்டு அலுவலர்/கணக்கீட்டு அலுவலர் அறிவித்தார்.<br><br>இது தொடர்பாக அறிக்கையொன்றை ஒரு மாதத்துக்குள் குழுவுக்கு சமர்ப்பிக்குமாறு பிரதம கணக்கீட்டு அலுவலருக்கு/கணக்கீட்டு அலுவலருக்கு கட்டளையிடப்பட்டது. |
| 5. | பாடசாலைப் பிள்ளைகளுக்கு புதிய பசும்பால் கிளாசொன்றை வழங்கும் நிகழ்ச்சித்திட்டத்துக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிதி ஏற்பாட்டில் 46% அதாவது ரூபா 1,270,651/- தொகை மீதியாக இருத்தல். | இந்த நிகழ்ச்சித்திட்டம் தொடர்பாகத் தோன்றியுள்ள நடைமுறை ரீதியிலான பிரச்சினைகளை பிரதம கணக்கீட்டு அலுவலர்/கணக்கீட்டு அலுவலர் விளக்கி கூறினார்.<br>சுகாதார அமைச்சு மற்றும் மகளிர், சிறுவர் விவகார அமைச்சு என்பவற்றுடன் இணைந்து பசும் பாலுக்குப் பதிலாக இலைக்கஞ்சி போன்ற மாற்று வழிமுறையொன்றைப் பின்பற்றுமாறு குழு பிரதம கணக்கீட்டு அலுவலருக்கு/ கணக்கீட்டு அலுவலருக்கு அறிவித்தது. |
| 6. | கர்ப்பிணித் தாய்மார்களுக்கு போசாக்கு பொதியொன்றை வழங்குவது தொடர்பான முன்னேற்ற நிலமை திருப்திகரமானதல்ல. | குறிப்பிட்ட கால எல்லைக்குள் சமர்ப்பிக்கப்படாமை, முத்திரைகள் இரத்தாதல் போன்ற காரணங்களினால் இந்த நிலமை ஏற்பட்டுள்ளது என்றும் அந்த முத்திரைகளை மீண்டும் அமைச்சுக்கு அனுப்புவதாகவும் பிரதம கணக்கீட்டு அலுவலர்/கணக்கீட்டு அலுவலர் குழுவுக்கு அறிவித்தார். |
| 7. | 2005 ஆம் ஆண்டில் வரவு செலவுத் திட்டத்தின்கீழ் ரூபா 1,500,000/- பணம் செலவழித்து உடுநுவர பிரதேச செயலகத்துக்குரிய காணியொன்றில் நிர்மாணிக்கப்பட்ட தொழிற்பயிற்சி நிலையம் பயன்படுத்தாமல் மூடப்பட்டிருத்தல் தொடர்பாக குழு கேள்வி எழுப்பியது. | இந்த கருத்திட்டத்தின் பணிகள் இன்னும் முடியவில்லை என்பதுடன் மீண்டும் பன்முகப் படுத்தப்பட்ட நிதியின் கீழ் பணம் ஒதுக்கப்பட்டதன் பின் மீதிப்பணிகளை நிறைவு செய்வதற்கான இயலுமை காணப்படுவதாக பிரதம கணக்கீட்டு அலுவலர்/கணக்கீட்டு அலுவலர் அறிவித்தார். |

| | கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள் | பிரதம கணக்கீட்டு அலுவலரின்/ கணக்கீட்டு அலுவலரின் விடயங்கள் பற்றிய தெளிவுபடுத்தல் மற்றும் குழுவின் கருத்துகள்/கட்டளைகள் |
|---|---|---|
| 8. | தேசிய நீர்வழங்கல் சபையினால் நீரை சேமித்து வைப்பதற்கான தாங்கி ஒன்றை அமைப்பதற்காக கையேற்கப்பட்டிருந்த 20 பேச்சஸ் காணிக்காக இழப்பீடாக கிடைத்திருந்த ரூபா 1,448,286/- தொகையை அந்தக் காரியத்துக்காக செலவிடாமல் பொது வைப்புக் கணக்கில் வைத்திருத்தல். | முதலாவது காணி பொருத்தமானதல்ல என்பதனால் வேறு காணியொன்று கேட்கப்பட்டுள்ளதாகவும், அதன்படி தற்போது விலை மதிப்பு திணைக்களத்துக்கு அந்த காணியை மதிப்பிட்டு அறிக்கையொன்றை அனுப்புமாறு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும், விலை மதிப்பீட்டு அறிக்கை கிடைத்ததன் பின்னர் குறிப்பிட்ட பணிகளை ஆரம்பிக்க முடியும் என்றும் பிரதம கணக்கீட்டு அலுவலரினால்/கணக்கீட்டு அலுவலரினால் குழுவுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. |
| 9. | இலங்கை இராணுவத்தின் பொலிஸ் சேவை படையணியின் பாவனைக்காக 06 மாதகாலத்துக்கு விடுவிக்கப்பட்டிருந்த கண்டி மேலதிக மாவட்ட செயலாளருக்கான அரச குடிமனை மீண்டும் கையளிக்கப்படாமை தொடர்பாக குழு கேள்வி எழுப்பியது. | குறிப்பிட்.ட குடிமனையை இவ்வருடம் ஏப்ரல் மாதம் 16 ஆம் திகதியாகும்போது மீண்டும் கையளிப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளதாக பிரதம கணக்கீட்டு அலுவலரினால்/கணக்கீட்டு அலுவலரினால் குழுவுக்கு அறிவிக்கப்பட்டது. |
| | **சிறைச்சாலைகள் திணைக்களம்**<br>**2016 பெப்ரவரி 24** | |
| 1. | திணைக்களத்தில் பெருமளவு வெற்றிடங்கள் காணப்படுவதாக அவதானித்த குழு விசேடமாக சிரேஷ்ட மட்டத்திலான உத்தியோகத்தர் எண்ணிக்கையில் 50 % வீதம் வெற்றிடங்கள் நிலவுவது தொடர்பாக கேட்கப்பட்டதுடன் அந்தக் குறைபாடு காரணமாக தற்கால பதவியணியினருக்கு செலுத்த நேரிட்டுள்ள மேலதிக நேரக் கொடுப்பனவு தொடர்பாகவும் கேட்கப்பட்டது. | வெற்றிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், மேலதிக நேரக் கொடுப்பனவாக வருடமொன்றுக்கு ரூபா 300 மில்லியன் செலுத்த நேரிட்டுள்ளதாகவும் பிரதம கணக்கீட்டு அலுவலர்/கணக்கீட்டு அலுவலர் தெரிவித்தார். இந்த வெற்றிடங்களை நிரப்புவது தொடர்பாக நிதி அமைச்சின் செயலாளருடன் கலந்துரையாடி அது தொடர்பாக துரித தீர்வொன்றை காணுமாறும் அதன்படி எடுக்கப்படும் நடவடிக்கைகள் சம்பந்தமான அறிக்கையொன்றை குழுவுக்கு சமர்ப்பிக்குமாறும் குழுவானது பிரதம கணக்கீட்டு அலுவலருக்கு/கணக்கீட்டு அலுவலருக்கு கட்டளையிட்டது. |
| 2. | 2015 டிசம்பர் மாதம் 31ஆம் திகதிக்கு தீர்க்கப்படவேண்டிய/அரச வருமானத்துக்கு வரவு வைக்கவேண்டிய எனினும் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்படாத ரூபா 7,069,572/- பொது வைப்புக் கணக்கில் காணப்படுவதை குழு அவதானித்தது. | திறைசேரியிடமிருந்து கிடைத்த ஆலோசனைக்கமைய குறிப்பிட்ட பணிகளுக்காக கணக்கொன்றை ஆரம்பித்து ஏனைய பணத்தை அரச வருமானத்தில் வரவு வைப்பதற்கு நடவடிக்கை எடுத்து வருவதாக பிரதம கணக்கீட்டு அலுவலர்/கணக்கீட்டு அலுவலர் தெரிவித்தார். |
| 3. | வர்த்தக முற்பணக் கணக்கில் அறவிடப்படவேண்டிய பணமாக ரூபா 62,273,889/- காணப்படுவதுடன் அதனை தீர்ப்பதற்கு எடுத்துள்ள நடவடிக்கைகள் சம்பந்தமாக குழுவில் கேள்வி எழுப்பப்பட்டது. | இந்தப் பணத்தை அறவிட்டுக் கொள்வதற்காக முறையான வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளதாக பிரதம கணக்கீட்டு அலுவலரினால்/கணக்கீட்டு அலுவலரினால் குழுவுக்கு அறிவிக்கப்பட்டது. அதன்படி குறிப்பிட்ட வருடத்துக்குள் அதை அறவிட முடியுமென தெரிவிக்கப்பட்டது. |

| | **கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்** | **பிரதம கணக்கீட்டு அலுவலரின்/ கணக்கீட்டு அலுவலரின் விடயங்கள் பற்றிய தெளிவுபடுத்தல் மற்றும் குழுவின் கருத்துகள்/கட்டளைகள்** |
|---|---|---|
| 4. | மஹர சிறைச்சாலை மைதானத்தை வாடகைக்கு வழங்குவதன் மூலம் கிடைக்கும் வருமானத்தை நிதி ஒழுங்குவிதிகளுக்கு முரணாக விளையாட்டு மற்றும் நலன்புரி சங்கத்தின் கணக்கிற்கு வரவு வைத்தல். | சிறைச்சாலை திணைக்களத்தின் விளையாட்டு நிகழ்ச்சிகளுக்கு திறைசேரியிடமிருந்து பணம் கிடைப்பதில்லை என்றும் அதற்கு தேவையான பணம் விளையாட்டு மைதானங்கள் மூலம் மற்றும் விளையாட்டு கழகங்களுக்கு கிடைக்கும் பணம் மூலம் பெற்றுக்கொள்ளப்படுவதாகவும் பிரதம கணக்கீட்டு அலுவலரினால்/கணக்கீட்டு அலுவலரினால் அறிவிக்கப்பட்டது.<br><br>அது தொடர்பாக திறைசேரியின் அனுமதியைப் பெற்றுக்கொள்ளுமாறு குழு அறிவித்தது. |
| 5. | ரூபா 23 மில்லியன் மீதி காணப்படும் பரிசு நிதியம் தொடர்பாக குழு கேள்வி எழுப்பியது. | சிறைச்சாலை கட்டளைச் சட்டத்தின்கீழ் பரிசு நிதியம் ஏற்படுத்தப்பட்டுள்ளதுடன் அதனை முறையாக முன்னெடுப்பதற்காக திறைசேரியின் ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் பிரதம கணக்கீட்டு அலுவலர்/கணக்கீட்டு அலுவலர் குழுவுக்கு அறிவித்தார். |
| 6. | 2011 செப்ரம்பர் மாதம் 23 ஆம் திகதி வெலிக்கடை சிறைச்சாலையின் மேலதிக அத்தியட்சகர் அனுமதியில்லாமல் திணைக்களத்துக்குரிய வாகனத்தில் தனது வீட்டுக்கு செல்லும்போது விபத்துக்கு உள்ளாகிய ரூபா 400,000/- நட்டம் ஏற்பட்டுள்ளது. அதனை நான்கு வருடங்கள் செல்லும்வரை அறவிட நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | அதன் இறுதி விசாரணை அறிக்கை கிடைத்துள்ளது என்றும், ஏற்பட்ட நட்டத்தை குறிப்பிட்ட அத்தியட்சகரிடமிருந்து அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் ஒழுக்காற்று விசாரணை நடத்த நிர்வாக ஆணையாளரினால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் பிரதம கணக்கீட்டு அலுவலர்/கணக்கீட்டு அலுவலர் குழுவுக்கு அறிவித்தார். அது தொடர்பாக குழுவுக்கு அறிக்கையொன்றை சமர்ப்பிக்குமாறு பிரதம கணக்கீட்டு அலுவலருக்கு/கணக்கீட்டு அலுவலருக்கு கட்டளையிடப்பட்டது. |
| 7. | சிறைச்சாலை மறுசீரமைப்புத் திட்டத்தின்கீழ் சிறைச்சாலைகளின் இடவசதிகளை விஸ்தரிப்பதற்கும் புனர்வாழ்வு நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்துவதற்கும் அந்த சிறைச்சாலைகள் அமைந்துள்ள வர்த்தகப் பெறுமதியுள்ள காணிகளை நகர அபிவிருத்திக்கு பயன்படுத்துவதற்காக சிறைச்சாலைகளை வேறு இடங்களுக்கு கொண்டு செல்லல் தொடர்பான ஐந்தாண்டுத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படாமை தொடர்பாக குழு வினாவியது. | சிறைச்சாலைகளை வேறு இடங்களுக்கு கொண்டு செல்லல் தொடர்பாக இதுவரை உறுதியான தீர்மானங்கள் ஏதும் எடுக்கப்படவில்லை என்றும் பிரதம கணக்கீட்டு அலுவலர்/கணக்கீட்டு அலுவலர் குழுவுக்கு அறிவித்தார். |
| 8. | சிறைக்கைதிகளை வகைப்படுத்தி தடுத்துவைத்தல் மற்றும் சுகாதார முகாம்களை நடத்துதலின் முக்கியத்துவம் தொடர்பாக குழு கவனம் செலுத்தியது. | |
| 9. | கைதிகளினால் தயாரிக்கப்படும் பொருட்களுக்கு அவர்களது உழைப்புக்கேற்ற பெறுமதியை செலுத்துவது தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டது. | இது தொடர்பாக கவனம் செலுத்துமாறு பிரதம கணக்கீட்டு அலுவலருக்கு/கணக்கீட்டு அலுவலருக்கு ஆலோசனை வழங்கப்பட்டது. |

| | **கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்** | **பிரதம கணக்கீட்டு அலுவலரின்/ கணக்கீட்டு அலுவலரின் விடயங்கள் பற்றிய தெளிவுபடுத்தல் மற்றும் குழுவின் கருத்துகள்/கட்டளைகள்** |
|---|---|---|
| 10. | சிறைச்சாலைகள் திணைக்களத்தினால் கொள்வனவு செய்யப்படும் பொருட்களின் தரம் தொடர்பாக பிரச்சினைகள் இருப்பதை குழு அவதானித்தது. | நிபுணர்களின் ஆலோசனைகளைப் பெற்று திணைக்களத்துக்கு உயர் தரத்திலான பொருட்களை கொள்வனவு செய்வதற்காக நிகழ்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக பிரதம கணக்கீட்டு அலுவலர்/கணக்கீட்டு அலுவலர் குழுவிடம் தெரிவித்தார். |
| | **இலங்கை புகையிரத திணைக்களம்**<br>**2016 பெப்ரவரி 25** | |
| 1. | பதவியணியில் அங்கீகரிக்கப்படாத 1588 ஊழியர்களுக்கான மிகை காணப்படுதலும் வெற்றிடங்களை நிரப்புதலும். | அமைச்சரவை அங்கீகாரத்துக்கமைய ஆட்சேர்ப்பு நடைமுறையொன்றை தயாரித்து அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக பிரதம கணக்கீட்டு அலுவலர்/கணக்கீட்டு அலுவலர் குழுவுக்கு தெரிவித்தார்.<br>ஆட்சேர்ப்பு நடைமுறை, நியமனம் வழங்கும் திகதி உட்பட கால எல்லைகளை குறித்து அறிக்கையாக குழுவுக்கு சமர்ப்பிக்குமாறு பிரதம கணக்கீட்டு அலுவலருக்கு/கணக்கீட்டு அலுவலருக்கு அறிவிக்கப்பட்டது. |
| 2. | புகையிரத திணைக்களத்தில் ஊழியர் மேலதிக நேரக்கொடுப்பனவை செலுத்தும் முறையானது தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகளுக்கு முரணானது என குழுவினால் தெரிவிக்கப்பட்டது. | புகையிரத திணைக்கள பதவியணியினருக்கு மேலதிக நேரக் கொடுப்பனவு செலுத்தல் தொடர்பாக புயிரத ஆலோசனைக் கோவைக்கிணங்க மேற்கொள்ளப்படுவதாக பிரதம கணக்கீட்டு அலுவலர்/கணக்கீட்டு அலுவலர் குழுவுக்கு அறிவித்தார்.<br>ஊழியர் மேலதிக நேரக் கொடுப்பனவு செலுத்தலுக்கு அனுமதி பெற்றுக்கொள்ள வேண்டிய நிறுவனங்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் தொடர்பாக குழுவுக்கு அறிவிக்குமாறு பிரதம கணக்கீட்டு அலுவலருக்கு/கணக்கீட்டு அலுவலருக்கு அறிவிக்கப்பட்டது. |
| 3. | 2014/12/31 ஆம் திகதிக்கு நிலுவை அனுமதிப்பத்திரங்களுக்கான வருமானம் ரூபா 1,277.32 மில்லியன் காணப்படுதல். | நிலுவை வருமானத்தை மீண்டும் அறவிட்டுக் கொள்ள நடவடிக்கை எடுக்குமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டதுடன் அது தொடர்பாக இதுவரை எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் சம்பந்தமாக மார்ச் மாதம் 23 ஆம் திகதிக்கு முன்னர் குழுவுக்கு அறிவிக்குமாறு பிரதம கணக்கீட்டு அலுவலருக்கு/கணக்கீட்டு அலுவலருக்கு அறிவிக்கப்பட்டது.<br>நிதி அமைச்சுடன் கலந்துரையாடி நிலுவை வருமானத்தை அறவிட்டுக் கொள்ள தகுந்த வேலைத்திட்டமொன்றை தயாரித்துக் கொள்ளுமாறு பிரதம கணக்கீட்டு அலுவலருக்கு/கணக்கீட்டு அலுவலருக்கு கட்டளையிடப்பட்டது. |
| 4. | தனிப்பட்ட பெயர்களுக்கு எழுதப்பட்ட ரூபா 41 மில்லியன் பெறுமதியான 2691 காசோலைகள் 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் புகையிரத நிலையங்களுக்கு கிடைக்கும் நாளாந்த வருமானத்தில் புகையிரத நிலைய பொறுப்பதிகாரிகளினால் மாற்றறப்பட்டுள்ளமை. | இந்த நிலைமையை இல்லாமல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பிரதம கணக்கீட்டு அலுவலரினால்/கணக்கீட்டு அலுவலரினால் அறிவிக்கப்பட்டுள்ளது. |

| | **கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்** | **பிரதம கணக்கீட்டு அலுவலரின்/ கணக்கீட்டு அலுவலரின் விடயங்கள் பற்றிய தெளிவுபடுத்தல் மற்றும் குழுவின் கருத்துகள்/கட்டளைகள்** |
|---|---|---|
| 5. | புகையிரதத்தில் பண்டங்களை ஏற்றிச் செல்வது தொடர்பாக 2014 இல் 13 நிறுவனங்களிடமிருந்து ரூபா 74.67 மில்லியனும், 1980 தொடக்கம் 2013 இறுதி வரை 32 நிறுவனங்களிலிருந்தும் ரூபா 23.63 மில்லியனும் என்ற வகையில் 2014 ஆம் ஆண்டாகும்போது அறவிடப்படவேண்டிய ரூபா 98.30 மில்லியன் நிலுவை வருமானம் தொடர்பாக குழு கேள்வி எழுப்பியது. | நிலுவை வருமானம் ரூபா 29 மில்லியன் என்றும் ஏனைய நிலுவைப் பணம் முற்றாக செலுத்தப்பட்டுள்ளது என்றும் 2010 ஆம் ஆண்டுக்கு முன்னர் நிலுவை வருமானம் ரூபா 20 மில்லியன் என்றும் பிரதம கணக்கீட்டு அலுவலர்/கணக்கீட்டு அலுவலர் குழுவுக்கு அறிவித்தார். |
| 6. | இலங்கை புயைிரத திணைக்களத்துக்குரிய 13,980 ஏக்கர் காணியில் புகையிரத பாதைகள், அலுவலக கட்டிடங்கள், களஞ்சியங்கள் என்பவற்றுக்காக 8616 ஏக்கரும், மீதி ஒதுக்குப்பகுதிகளாகவும் பல்வேறு தரப்பினருக்கு குத்தகையாகவும் வழங்கப்பட்டுள்ளதாக அறியவந்துள்ளது. காணிகள் மற்றும் கட்டிடங்களைப் பயன்படுத்துவதில் காணப்பட்ட பலவீனங்கள் தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் சம்பந்தமாக குழு வினாவியது. | இருக்கும் காணிகள் தொடர்பாக நில அளவைப் படங்கள் இருப்பதாகவும், குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள காணிகளைப் போன்று மூன்று மடங்கில் அத்துமீறி குடியிருப்பதாகவும் பிரதம கணக்கீட்டு அலுவலர்/கணக்கீட்டு அலுவலர் அறிவித்தார். தரவுகளை கணனியில் உள்ளடக்கி முடிந்தவுடன் அது தொடர்பான அறிக்கையொன்றை வழங்குமாறு குழு கட்டளையிட்டது. |
| 7. | புகையிரத வேகக் கட்டுப்பாடு விதிப்புத் தொடர்பாக ஆராயும்போது 2013 இல் நிலவிய வேகக் கட்டுப்பாட்டைவிட ஒப்பீட்டளவில் 2015 இல் 80 வேகக் கட்டுப்பாடு அதிகரித்துக் காணப்படல். | வேகக் கட்டுப்பாடுகளைக் குறைப்பது தொடர்பாக புகையிரத பாதைகளை அபிவிருத்தி செய்வதற்குத் தேவை இருப்பதாகவும், அதற்காக தற்போது திட்டமிடப்பட்டிருப்பதாகவும் பிரதம கணக்கீட்டு அலுவலர்/கணக்கீட்டு அலுவலர் அறிவித்துள்ளார். |
| 8. | புகையிரத திணைக்களம் மற்றும் மொபிடெல் (தனியார்) நிறுவனத்துடன் இணைந்த ஒப்பந்தமொன்றின் அடிப்படையில் 2010 ஆம் ஆண்டு தொடக்கம் புகையிரத அனுமதிச் சீட்டுக்களை ஒதுக்குவதற்காக 141 பிரதான புகையிரத நிலையங்களுக்கு கணனி வலைப்பின்னலொன்று அறிமுகப்படுத்தப்பட்டபோதிலும் 40 புகையிரத நிலையங்களில் மாத்திரமே அது நடைமுறையில் உள்ளது. | கையடக்க தொலைபேசி மூலம் புகையிரத அனுமதிச்சீட்டுக்களை ஒதுக்கும் வசதி 50 புயைிரத நிலையங்களில் ஸ்தபிக்கப்பட்டுள்ளது என்று பிரதம கணக்கீட்டு அலுவலர்/கணக்கீட்டு அலுவலர் அறிவித்துள்ளார்.<br>இதன் பொருட்டு முன்கூட்டியே செலுத்தும் முறையொன்றை அறிமுகப்படுத்துவதற்கும், தற்போதுள்ள நடைமுறை ரீதியிலான நிலைமையை ஆராய்ந்து பார்த்து அதனை விருத்தி செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு குழுவினால் ஆலோசனை வழங்கப்பட்டது. |
| 9. | 13 புகையிரத எஞ்சின்கள் ஒரு வருடத்துக்கு அதிகமான காலம் திருத்தப்படும் நிலையில் இரத்மலானை தலைமை இயந்திர பொறியியல் வேலைத்தளத்தில் இருப்பதனை குழு அவதானித்தது. | புகையிரத எஞ்சின்கள் மிகவும் உயர்ந்த தொழில்நுட்ப மட்டத்தில் உள்ளதனால பழுது பார்த்தக்கான உதிரிப்பாகங்களைப் பெற்றுக் கொள்வதில் பெரும் அசௌகரியம் நிலவுவதாக பிரதம கணக்கீட்டு அலுவலர்/கணக்கீட்டு அலுவலர் அறிவித்துள்ளார். |
| 10. | திணைக்களத்தினால் நடைமுறைப்படுத்தப்படவுள்ள கணனி நிகழ்ச்சித்திட்டம். | திணைக்களத்தினால் செயற்படுத்தப்படவுள்ள கணனி நிகழ்ச்சித்திட்டம் அட்டவணையுடன் தொடர்பாக அட்டவணையுடன் 2016 மார்ச் 20 ஆம் திகதிக்கு முன்னர் குழுவுக்கு அறிவிக்குமாறு பிரதம கணக்கீட்டு அலுவலருக்கு/கணக்கீட்டு அலுவலருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. |

| | **கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்** | **பிரதம கணக்கீட்டு அலுவலரின்/ கணக்கீட்டு அலுவலரின் விடயங்கள் பற்றிய தெளிவுபடுத்தல் மற்றும் குழுவின் கருத்துகள்/கட்டளைகள்** |
|---|---|---|
| | **ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்**<br>**2016 பெப்ரவரி 26** | |
| 1. | ரூபா 1.6 திரிலியன் பெறுமதியான இந்த நிதியத்தின் உள்ளக கணக்காய்வுகள் மத்திய வங்கியினால் தனியார் நிறுவனமொன்றின் மூலம் மேற்கொள்ளப்படுவதாகவும், நிதிகளை முதலீடு செய்யும்போது போதியளவு பாதுகாப்பு இல்லை என்பதுடன் தொழில் ஆணையாளர் திணைக்களத்தின் உள்ளக கணக்காய்வுகள் போதுமானதல்ல என்பது. | உள்ளக கணக்காய்வுகளில் காணப்படும் குறைபாடுகளை நிவர்த்தி செய்து முறையாகவும் செம்மையாகவும் அந்த பணிகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுப்பதாக பிரதம கணக்கீட்டு அலுவலர்/கணக்கீட்டு அலுவலர் அறிவித்தார். |
| 2. | நிதியத்துக்கு பல்வேறு நிறுவனங்களிலிருந்து கிடைக்கும் பணத்தை சேமலாபக்....... கணக்குகளில் வரவு வைக்காமல் பொது வைப்புக் கணக்கொன்றில் பேணி வரப்படுவதாகவும், இதன்படி 2015 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு அதில் காணப்பட்ட மீதி சுமார் 3.5 பிலியன் எனவும்  அவதானித்த குழு, மேற்படி கணக்கை தீர்க்காமல் தொடர்ச்சியாக பேணல் | இந்த பணத்தை வெவ்வேறாக இனங்காண்பதில் அசௌகரியங்கள் காணப்படுவதாகவும், அடிக்கடி பணம் வரவு மற்றும் செலவு வைக்கப்படும் இக்கணக்கில் மீதியை முழுமையாக திறந்து வைக்கும் ஆற்றல் இல்லை என்றும் அப்பணத்தொகைகளை துரிதமாக ஏற்புடைய கணக்குகளுக்கு வரவு வைப்பதற்காக நிருவாக நடவடிக்கைகளை பலப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பி.க.அ/க.அ இனால் தெரிவிக்கப்பட்டது. |
| 3. | புதிய நிருவாக கட்டடமொன்றை நிர்மாணிப்பதற்கு நிதியத்திலிருந்து நிதி பயன்படுத்தல் மற்றும் மேற்படி தொகையை திறைசேரியினால் மீளளிப்புச் செய்தல் தொடர்பான தற்போதைய நிலைமை | இன்றளவில் திறைசேரியிடமிருந்து ரூபா 1482 மில்லியன் மீளளிப்புச் செய்யப்பட்டுள்ளதாகவும் மேற்படி முழுத் தொகையையும் பெற்றுக் கொள்வதற்கு தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்படுமெனவும் பி.க.அ/க.அ இனால் தெரிவிக்கப்பட்டது |
| 4 | இலங்கை மத்திய வங்கியிலிருந்து நிதியத்துக்கு இணைக்கப்பட்ட உத்தியோகத்தர்களின் சம்பளம் மீதான உழைக்கும் போதே செலுத்தும் வரியை அவர்களிடமிருந்து அறவிடாமல் ஊழியர் சேமலாப நிதியத்திலிருந்து செலுத்தப்படல் மற்றும் மேற்படி நிதியத்திலேயே பணியாற்றுகின்ற தொழில் திணைக்களத்தின் உத்தியோகத்தர்களுக்கு அது ஏற்புடையதாக இல்லாமை | இங்கு தெளிவற்ற நிலைமை காணப்படுவதாகவும் மேற்படி செயன்முறை சீராக்கப்பட வேண்டுமெனவும் மத்திய வங்கியின் ஆளுரனால் சுட்டிக்காட்டப்பட்டது.<br><br>அரச நிதி சுற்றுநிருபங்களுக்கமைவாக மேற்படி செயன்முறைகள் சீராகவும் இற்றைப்படுத்தப்பட்டதாகவும் இருக்க வேண்டுமென்பதோடு நிதி அமைச்சின் செயலாளருடன் கலந்துரையாடி வேலைத்திட்டமொன்றை வகுக்குமாறு தொழில் அமைச்சின் செயலாளருக்கு குழுவினால் அறிவுறுத்தப்பட்டது.<br><br>உழைக்கும் போதே செலுத்தும் வரி தொடர்பான அறிக்கையொன்றை குழுவிற்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு மேலும் அறிவுறுத்தப்பட்டது. |
| 5 | நிதியத்தின் மூலம் பணம் முதலீடு செய்யப்பட்ட இரண்டு நிறுவனங்களின் (பீசி ஹவுஸ் மற்றும் க்ரீன் எலிவேட்டர்ஸ்) முதலீடுகளில் இழப்பு ஏற்படல் | அதன் மூலம் சுமார் ரூபா 42 மில்லியன் மொத்த இழப்பு ஏற்பட்டுள்ளதாக பி.க.அ/க.அ இனால் தெரிவிக்கப்பட்டது |

| | **கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்** | **பிரதம கணக்கீட்டு அலுவலரின்/ கணக்கீட்டு அலுவலரின் விடயங்கள் பற்றிய தெளிவுபடுத்தல் மற்றும் குழுவின் கருத்துகள்/கட்டளைகள்** |
|---|---|---|
| 6 | 2014 ஆம் ஆண்டு வரவு செலவு திட்ட முன்மொழிவுகளுக்கமைய ரூபா 06 பிலியன் போனஸ் தொகை செலுத்துவதற்கு மேற்கொள்ளப்பட்ட தீர்மானம் தொடர்பாக குழுவினால் வினவப்பட்டது. | மேற்படி தொகையை வழங்கும் செயன்முறையை முன்னெடுத்துச் செல்வதில் சிரமங்கள் உள்ளதென்பது மத்திய வங்கி ஆளுனரால் சுட்டிக்காட்டப்பட்டது.<br>ஊழியர் சேமலாப நிதியத்தின் நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு ஏற்புடைய சகல நிறுவனங்களையும் ஒன்றிணைத்து அடுத்த 10 ஆண்டுகளுக்கு முறையான திட்டமொன்றை வகுக்குமாறு அறிவுறுத்திய குழு மேற்படி நிதியத்தின் நடவடிக்கைகள் வருடாந்தம் அரசாங்க கணக்கு குழுவின் மூலம் ஆய்வுக்குட்படுத்தப்படுமெனவும் வலியுறுத்தப்பட்டது. |
| 7 | நிதியத்தின் தகவல் தொழில்நுட்ப செயற்பாடு | தொழில் ஆணையாளர் அலுவலகம் மற்றும் மத்திய வங்கியுடன் இணைந்து மத்திய வங்கியின் தகவல்களுக்கு பாதிப்பேற்படாத வகையில் ஒன்றிணைந்த கணினி வேலைத்திட்டமொன்றை வகுப்பதற்குள்ள இயலுமை தொடர்பாக பரிசீலிக்குமாறு குழுவினால் சிபார்சு செய்யப்பட்டது. |
| | **வலுவாதார அபிவிருத்தி மற்றும் வனசீவராசிகள் அமைச்சு**<br>**2016 மார்ச் 08** | |
| 1 | வலுவாதார அபிவிருத்தி மற்றும் வனசீவராசிகள் அமைச்சின் புதிய பணிகள் | புதிய நிறுவன கட்டமைப்பு மற்றும் புதியதொரு திசைமுகப்படுத்தலுடன் கூடியதாக வலுவாதார அபிவிருத்தி மற்றும் வனசீவராசிகள் அமைச்சு தாபிக்கப்பட்டுள்ளதாக பி.க.அ தெரிவித்ததோடு அதன் நோக்கு மற்றும் பணியை அடைவதற்கு அமைச்சு மேற்கொண்டுள்ள உபாய வழிமுறைகளை விபரித்தார். |
| | **வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம்**<br>**2016 மார்ச் 08** | |
| 1 | 2015 ஆம் ஆண்டு செயற்பாட்டுத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த வனசீவராசிகளுக்கான வாழ்விடங்களை உறுதிப்படுத்தலின் கீழான 5 செயற்பாடுகள் முற்றாக செயற்படுத்தப்படாமை மற்றும் பாதுகாப்பு பிரதேச வலையமைப்பொன்றை தாபித்தலின் கீழான 09 செயற்பாடுகளுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 750,000 தொகை பிறிதொரு கருத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படல் | சீரற்ற காலநிலை காரணமாக மேற்படி பணிகளை நிறைவு செய்ய முடியவில்லை எனவும் அதற்கென ஒதுக்கப்பட்ட தொகை பிறிதொரு கருத்திட்டத்துக்கு முதலீடு செய்யப்பட்டதாகவும் பி.க.அ/க.அ இனால் தெரிவிக்கப்பட்டது |
| 2 | கணக்காய்வு விசாரணைகளுக்கு பதிலளித்தல் முறையானதாக இல்லாமை | உரிய காலப்பகுதியில் அதற்கான பதில்களை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்க வேண்டியது கட்டாயமென பி.க.அ/க.அ இற்கு கட்டளையிடப்பட்டது. |
| 3 | பணியாட்டொகுதியில் பல வெற்றிடங்கள் நிலவுதல் | பதவி நிலை உத்தியோகத்தர்களின் வெற்றிடங்கள் தொடர்பாக பொது நிருவாக அமைச்சிடம் கோரப்பட்டுள்ளதாகவும், இதர வெற்றிடங்களை நிரப்புவதற்காக நிதி ஏற்பாடுகள் கோரப்பட்டுள்ளதாகவும் பணியாட்டொகுதியை அதிகரிப்பதற்கு அமைச்சு இன்றளவில் திட்டமிட்டு வருவதாகவும் பி.க.அ தெரிவித்தார். |

| | கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள் | பிரதம கணக்கீட்டு அலுவலரின்/ கணக்கீட்டு அலுவலரின் விடயங்கள் பற்றிய தெளிவுபடுத்தல் மற்றும் குழுவின் கருத்துகள்/கட்டளைகள் |
|---|---|---|
| 4 | திணைக்களத்துக்கு சொந்தமான 14 வாகனங்களுக்கு ஏற்பட்டுள்ள ரூபா 1.4 மில்லியன் பெறுமதியான இழப்புகள் தொடர்பான தற்போதைய நிலை | அது தொடர்பாக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக பி.க.அ/க.அ இனால் குழுவிற்கு அறிவிக்கப்பட்டது.<br>இது தொடர்பாக விபரமான அறிக்கையொன்றை ஒரு மாத காலத்துக்குள் சமர்ப்பிக்குமாறு பி.க.அ/க.அ இற்கு கட்டளையிடப்பட்டது. |
| 5. | முற்பணமாக ரூபா 1,933,200/- செலுத்தப்பட்டிருந்த போதிலும் மன்னார் பணியாட்டொகுதி உத்தியோகபூர்வ விடுதிகள், வீச்சிடை பாதுகாப்பு அலுவலகம் மற்றும் தொழிலாளர் உத்தியோகபூர்வ விடுதிகளை நிர்மாணிப்பதற்கு ஏற்புடைய கருத்திட்டத்தின் பணிகள் ஆரம்பிக்கப்படாமை | கருத்திட்ட நடவடிக்கைகளுக்கு வெளித் தரப்புகளிலிருந்து வந்த அழுத்தங்கள் காரணமாக மேற்படி நடவடிக்கைகளை நிறைவு செய்ய முடியவில்லை எனவும் ஒப்பந்தக்காரர் கடந்த ஆண்டு மதிப்பீடுகளுக்கு இந்த ஆண்டின் பணத்தை கொண்டு ஏற்புடைய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு எழுத்து மூலமாக இணங்கியுள்ளாரெனவும் பி.க.அ/க.அ இனால் குழுவிற்கு தெரிவிக்கப்பட்டது.<br>இது தொடர்பாக அறிக்கையொன்றை குழுவிற்கு சமர்ப்பிப்பதற்கு பி.க.அ/க.அ இனால் இணக்கம் தெரிவிக்கப்பட்டது. |
| 6 | 22 யானைக் குட்டிகள் சட்ட விரோதமாக பல்வேறு வர்த்தகர்களுடைய பொறுப்பில் ஆலயங்களிலும் விஹாரைகளிலும் தடுத்து வைக்கப்பட்டுள்ளமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினால் விசாரணை நடாத்தப்பட்டு 37 யானைகளுக்கு நீதிமன்ற உத்தரவுகளை பெற்றுள்ளார்கள் என்றும், அவற்றில் 32 யானைகள் வனசீவராசிகள் திணைக்களத்தின் பொறுப்பில் உள்ளதெனவும், மேலும் 03 யானைகளை பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் ஒரு யானை தொடர்பாக மீள விசாரணைகள் மேற்கொள்ளப்படுவதாகவும் பி.க.அ/க.அ இனால் குழுவிற்கு தெரிவிக்கப்பட்டது. |
| 7 | யானைகளை பதிவு செய்வதற்கேற்புடையதாக திணைக்களம் செயற்படுத்தியிருந்த உள்ளக நிருவாகச் செயற்பாடு, குறிப்பாக ஆவணங்களின் பாதுகாப்பு தொடர்பாக மேற்கொண்டிருந்த நடவடிக்கைகள் மிக மோசமானதாக இருந்த காரணத்தினால் யானைகள் பதிவு ஆவணம் காணாமல் போயுள்ளமை | அது தொடர்பாக இன்றளவில் விசாரணைகள் மேற்கொள்ளப்படுவதாகவும் மார்ச் மாதம் இறுதி அளவில் மேற்படி விசாரணை அறிக்கைகளை பெற முடியுமெனவும் பி.க.அ/க.அ இனால் குழுவிற்கு தெரிவிக்கப்பட்டது |
| 8 | ஹொரொவ்பொத்தான மின் வேலி நிர்மாணப் பணிகளின் முன்னேற்றம் | மேற்படி கருத்திட்டம் நிறைவு செய்யப்பட்டு விட்டதாக பி.க.அ/க.அ இனால் குழுவிற்கு தெரிவிக்கப்பட்டது |
| 9 | ஹக்கல இயற்கை வன ஒதுக்கப் பகுதியில் நுவரெலியா மாவட்டத்துக்குரிய பிரதேசத்துக்குள் அனுமதியற்ற 116 காணி கைப்பற்றல்கள் மற்றும் பதுளை மாவட்டத்துக்குரிய பிரதேசத்துக்குள் அனுமதியற்ற 103 காணி கைப்பற்றல்களை தடுப்பதற்கு தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்படாமை | மாவட்டச் செயலாளர்களின் தலைமையில் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாகவும், மேற்படி குழு அறிக்கைக்கமைய எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதாக பி.க.அ/க.அ இனால் தெரிவிக்கப்பட்டது<br>அது தொடர்பாக அறிக்கையொன்றை குழுவிடம் சமர்ப்பிக்குமாறு பி.க.அ/க.அ இற்கு கட்டளையிடப்பட்டது. |

| | **கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்** | **பிரதம கணக்கீட்டு அலுவலரின்/ கணக்கீட்டு அலுவலரின் விடயங்கள் பற்றிய தெளிவுபடுத்தல் மற்றும் குழுவின் கருத்துகள்/கட்டளைகள்** |
|---|---|---|
| 10 | Convention on International Trade in Endangered Species of Wild Fauna And Flora (CITES) உரிமப்பத்திர கட்டணங்கள் தீர்மானிக்கப்பட்ட விதம் தொடர்பான சரியான தகவல்களை கணக்காய்வின் போது உறுதிப்படுத்த முடியாமை. | இச் சட்டத்துக்கு ஒழுங்குவிதிகள் தயாரிக்கப்படாத காரணத்தினால் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளதாகவும் இன்றளவில் மேற்படி நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்டு வருவதாகவும் பி.க.அ/க.அ இனால் குழுவிற்கு தெரிவிக்கப்பட்டது.<br><br>மேற்படி முழுமையான செயற்பாடுகள் தொடர்பாக அறிக்கையொன்றை குழுவிடம் சமர்ப்பிக்குமாறு பி.க.அ/க.அ இற்கு கட்டளையிடப்பட்டது. |
| 11 | வில்பத்து தேசிய பூங்காவில் எலுவன்குளம் கலாஓயாவிலிருந்து கொண்டச்சிகுடா வரை புதிய வீதியொன்றை பாவித்தல் தொடர்பான தற்போதைய நிலைமை | மேற்படி வீதி கடற் படையினரின் பாதுகாப்பு நடவடிக்கைளுக்காக நிர்மாணிக்கப்பட்டுள்ளதாகவும் இது தொடர்பாக 04 அரச சார்பற்ற நிறுவனங்களினால் உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டுள்ளதாகவும் கிடைக்கக்கூடிய தீர்ப்புக்கமைய மேற்படி வீதி தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்கு எதிர்பார்ப்பதாகவும் பி.க.அ/க.அ இனால் குழுவிற்கு தெரிவிக்கப்பட்டது<br><br>இது தொடர்பாக அறிக்கையொன்றை குழுவிற்கு சமர்ப்பிக்குமாறு பி.க.அ/க.அ இற்கு கட்டளையிடப்பட்டது. |
| 12 | அங்கமடில்ல தேசிய பூங்காவில் காட்டு யானைகளை வளர்ப்பு யானைகளாக்கும் நிலையமொன்றை நிர்மாணித்தல் மற்றும் தரை இறக்கும் மேடை அமைப்பதற்கு ரூபா 4,574,919/- செலவிடப்பட்டுள்ள போதிலும் அது செயலற்றுக் காணப்படல் | இது தொடர்பான அறிக்கையொன்றை தாமதமின்றி சமர்ப்பிக்குமாறு குழு பி.க.அ. க்கு கட்டளையிட்டது. |
| | **தேசிய மிருகக்காட்சிசாலை திணைக்களம்**<br><br>**2016 மார்ச் 08** | |
| 1 | 2016 ஆம் ஆண்டளவிலும் திணைக்களத்தினால் உள்ளக கணக்காய்வு பிரிவொன்று தாபிக்கப்படாமை | உள்ளக கணக்காய்வு பிரிவுக்கு அமைச்சின் உள்ளக கணக்காய்வு பிரிவைச் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் இணைக்கப்பட்டுள்ளார் எனவும், அதற்கு பதவி அங்கீகாரமளிக்கப்பட்டுள்ளதாகவும் கணக்காய்வாளர்களின் தட்டுப்பாடு நிலவுவதால் ஆட்சேர்ப்பு நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்படவில்லை எனவும் ஒரு மாதத்துக்குள் உள்ளக கணக்காய்வு பிரிவை பலப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் பி.க.அ/க.அ இனால் தெரிவிக்கப்பட்டது |
| 2 | மிருகக்காட்சி சாலையின் பிரதான உணவகத்தின் மாதாந்த வாடகை 50% ஆல் குறைக்கப்படல் தொடர்பாக ஒப்பந்தக்காரரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 4,075,500/- இழப்பு தொடர்பாக சட்ட மாஅதிபரின் ஆலோசனையை பெறல் மற்றும் அது தொடர்பாக விசாரிப்பதற்கு சிறப்பு உத்தியோகத்தரொருவர் நியமிக்கப்படல் தொடர்பான தற்போதைய நிலைமை | 03 தடவை சட்ட மாஅதிபரின் ஆலோசனை கோரப்பட்டுள்ள போதிலும் இதுவரை சட்ட மாஅதிபரின் ஆலோசனைகள் கிடைக்கப் பெறவில்லை எனவும் நியமிக்கப்பட்ட உத்தியோகத்தரும் நியமனத்தை நிராகரிப்பதாக கடிதம் மூலம் அறிவித்துள்ளதாகவும் பி.க.அ/க.அ இனால் தெரிவிக்கப்பட்டது<br><br>அமைச்சினால் இது தொடர்பாக நேரடி விசாரணை நடாத்தப்பட்டு 2016 ஏப்பிறல் 15 ஆம் திகதிக்கு முன்னதாக குழுவிற்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு பி.க.அ/க.அ இற்கு கட்டளையிடப்பட்டது. |
| 3 | அம்பாந்தோட்டை சபாரி பூங்காவின் நிர்மாணப் பணிகளின் தற்போதைய நிலைமை | 2016 மார்ச் மாதம் 27 ஆம் திகதியன்று அதை திறப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பி.க.அ/க.அ இனால் குழுவிற்கு தெரிவிக்கப்பட்டது. |

| | **கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்** | **பிரதம கணக்கீட்டு அலுவலரின்/ கணக்கீட்டு அலுவலரின் விடயங்கள் பற்றிய தெளிவுபடுத்தல் மற்றும் குழுவின் கருத்துகள்/கட்டளைகள்** |
|---|---|---|
| 4 | தேசிய மிருகக் காட்சிசாலை திணைக்களத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்டு வரும் ரிதியகம சபாரி பூங்கா மற்றும் முதற் கட்ட பணிகள் முடிக்கப்பட்டுள்ள பின்னவல வாகொல்ல புதிய மிருகக் காட்சி சாலை தேசிய மிருகக் காட்சிசாலை சட்டத்தில் உள்ளடக்கபடாமை | புதிய அமைச்சு உருவாக்கப்பட்டதை தொடர்ந்து தேசிய மிருகக் காட்சி சாலை சட்டம் திருத்தம் செய்யப்பட்டு மேற் குறிப்பிட்டவையும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக பி.க.அ/க.அ இனால் குழுவிற்கு தெரிவிக்கப்பட்டது |
| 5 | வத்தளையில் “மின் மெதுர” (அலங்கார மீன் காட்சியகம்) நிர்மாணிப்பதற்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதி பயன்படுத்தப்படாமை | ஏற்புடைய காணி நம்பிக்கை பொறுப்பாளர் திணைக்களத்துக்கு சொந்தமான காணி எனவும் குறித்த காணி தேசிய மிருகக் காட்சிசாலை திணைக்களத்திற்கு அளிக்கப்படவில்லை எனவும் பி.க.அ/க.அ இனால் குழுவிற்கு தெரிவிக்கப்பட்டது<br>பொருத்தமானதொரு காணி இருப்பின் அதனை பெற்றுக் கொடுப்பதற்கு ஏற்புடைய திட்ட வரைபுகளை மாநகர திட்டமிடல் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சிடம் சமர்ப்பிக்குமாறு கௌரவ தவிசாளரினால் பி.க.அ/க.அ இற்கு கட்டளையிடப்பட்டது. |
| 6 | பின்னவல வாகொல்ல புதிய மிருகக் காட்சிசாலையின் நிர்மாணப்பணிகளுக்கு சுவீகரிக்கப்பட வேண்டிய 13 ஏக்கர் காணிகள் அடையாளங் காணப்பட்டுள்ள போதிலும் மேற்படி காணியை சுவீகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்காமை | ஏற்புடைய காணி சுவீகரிப்பு நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்படுவதாக பி.க.அ/க.அ இனால் குழுவிற்கு தெரிவிக்கப்பட்டது |
| 7 | சர்வதேச நியமங்களுக்கமைய பின்னவல புதிய மிருகக் காட்சி சாலையை அமைப்பது நோக்கமாக இருந்த போதிலும் உத்தேச மொத்த காணியான 104 ஏக்கருக்கு ஏற்றுக்கொள்ளக் கூடிய அடிப்படை திட்டம் அல்லது விபரங்களுடன் கூடிய திட்டம் தயாரிக்கப்படவில்லை | காணி கையகப்படுத்தப்பட்டதைதொடர்ந்து தொகுதித் திட்டமொன்றை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமெனவும், தற்போது பொது திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் பி.க.அ/க.அ இனால் குழுவிற்கு தெரிவிக்கப்பட்டது |
| 8 | 1998 ஆம் ஆண்டில் வாகொல்ல மிருகக் காட்சிசாலையை அமைப்பதற்கு கமத்தொழில் திணைக்களத்துக்கு சொந்தமான வாகொல்ல பண்ணையிலிருந்து 16.45 ஹெக்டேயர் காணி சுவீகரிக்கப்பட்டுள்ள போதிலும் அதில் 4.15 ஹெக்டேயர் காணி 2012 ஆண்டு இறுதி அளவிலும் எவ்வித அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | ஏற்புடைய காணி கமத்தொழில் திணைக்களத்துக்கு சொந்தமான காணி எனவும் மேற்படி காணியில் மிருகக் காட்சிசாலை அமைப்பதால் வேறு காணியொன்றை கமத்தொழில் திணைக்களம் கோரியிருந்த போதிலும் கமத்தொழில் திணைக்களத்துக்கு பொருத்தமானதொரு காணி இன்னும் கிடைக்கவில்லை எனவும் பி.க.அ/க.அ இனால் குழுவிற்கு தெரிவிக்கப்பட்டது |
| 9 | பின்னவல விலங்குகளுக்கான காப்பகம் உடைக்கப்பட்ட காரணத்தினால் அதற்காக செலவிடப்பட்ட மூலப்பொருள் செலவு, ஆலோசனைக் கட்டணங்கள், மற்றும் மேற்படி கட்டுமானங்களை உடைத்து அப்புறப்படுத்துவதற்கான கட்டணமான ரூபா 9,466,569/- பயனற்ற செலவு உள்ளிட்ட முழுச் செலவு ரூபா 985,576,787/- என அவதானிக்க முடிந்தது. | பழைய அமைச்சின் கீழ் தயாரிக்கப்பட்ட திட்டம் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழ் வந்ததை தொடர்ந்து மாற்றுவதற்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டதெனவும், அதன் பிரகாரம் திட்டம் மாறி உள்ளதெனவும் பி.க.அ/க.அ இனால் குழுவிற்கு தெரிவிக்கப்பட்டது |

| | கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள் | பிரதம கணக்கீட்டு அலுவலரின்/ கணக்கீட்டு அலுவலரின் விடயங்கள் பற்றிய தெளிவுபடுத்தல் மற்றும் குழுவின் கருத்துகள்/கட்டளைகள் |
|---|---|---|
| 10 | அம்பாந்தோட்டை சபாரி பூங்காவில் குளங்கள் அமைக்கும் திட்டத்தின் செலவு ரூபா 9,209,900/- ஆக இருந்ததோடு அவற்றில் 09 குளங்களை அமைப்பதற்கு அளவை நடவடிக்கைகளுக்கு ரூபா 493,000/- செலவிடப்பட்டிருந்த போதிலும் இன்றளவில் நிர்மாணிக்கப்பட்டுள்ள குளமொன்றுக்கு நீர் பெற்றுக் கொள்வதற்குள்ள நீரேந்து பிரதேசங்கள் போதுமானதாக இல்லாததால் பணிகள் நிறுத்தப்பட்டுள்ளமை. | இரண்டு குளங்கள் அமைக்கப்பட்டுள்ளதாகவும், அவற்றில் மழை நீரை தேங்க வைப்பதற்கு நிலம் பதப்பட வேண்டுமெனவும், அதற்கு தற்போது வலவே ஆற்றிலிருந்து பெறப்படும் நீர் இடப்பட்டுள்ளதாகவும், அதை தொடர்ந்து மழை நீரை தேங்க வைக்க முடியுமெனவும் பி.க.அ/க.அ இனால் குழுவிற்கு தெரிவிக்கப்பட்டது |
| 11 | அம்பாந்தோட்டை சபாரி பூங்காவுக்கென சாத்தியக்கூறு அறிக்கையொன்று தேசிய மிருகக்காட்சி சாலை திணைக்களத்தினால் பெறப்பட்டுள்ள போதிலும் காட்டு யானை அச்சுறுத்தல் தொடர்பாக எவ்வித குறிப்புகளும் மேற்படி அறிக்கைகளில் உள்ளடக்கப்படாமை மற்றும் பாதுகாப்பு வேலிகள் காட்டு யானைகளால் அழிக்கப்பட்டுள்ளமை | சாத்தியக்கூறு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும், மின் வேலி மற்றும் சிறப்பு கொங்ரீட் மதில் நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாகவும் இன்றளவில் சிறப்பு மதில் கட்டப்பட்டு முடிக்கப்பட்டுள்ளதாகவும் பி.க.அ/க.அ இனால் குழுவிற்கு தெரிவிக்கப்பட்டது |
| 12 | அரசாங்க ஊழியர்களின் முற்பணக் கணக்கில் 2014 திசெம்பர் மாதம் 31 ஆம் திகதியன்று இதன் நிலுவை ரூபா 3,321,890/- ஆக காணப்படல் | ஏற்புடைய தொகையை அறவிடுவதற்கு சட்ட மா அதிபரின் ஆலோசனையை பெறும் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும் சில உத்தியோகத்தர்கள் தொடர்பாக சட்ட ரீதியான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் சகல பணத்தையும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் பி.க.அ/க.அ இனால் குழுவிற்கு தெரிவிக்கப்பட்டது |
| 13 | குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள தகவல்களுக்கமைய தெஹிவளை மிருகக்காட்சி சாலையில் விலங்குகள் பிறப்பின் போதும் அதை அண்மித்த நாட்களிலும் மரணிக்கும் அளவு குறிப்பிடத்தக்க மட்டத்தில் உள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது. | உலகின் இதர மிருகக்காட்சி சாலைகளில் விலங்குகளின் மரணங்களோடு ஒப்பிடுமிடத்து இது அவ்வளவு பெரிய எண்ணிக்கை அல்ல எனவும், மேற்படி எண்ணிக்கையை குறைப்பதற்கு பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் பி.க.அ/க.அ இனால் குழுவிற்கு தெரிவிக்கப்பட்டது<br>பொலித்தீன் போன்ற மூலபொருட்கள் தடை செய்யப்பட்டுள்ளதாகவும் எதிர்வரும் காலங்களில் பொலித்தீன் பாவனையை முழுமையாக தடுப்பதற்கு சுற்றுநிருபம் ஒன்றின் மூலம் நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் பி.க.அ/க.அ இனால் குழுவிற்கு தெரிவிக்கப்பட்டது |
| 14 | திணைக்களத்தில் ஆராய்ச்சி உதவியாளர்கள் 05 பேர் பணியாற்றி உள்ளதோடு 2009 – 2015 வரையான ஏழு வருட காலப்பகுதியில் போதியளவு ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்படவில்லை என்பது குழுவினால் அவதானிக்க முடிந்தது. | 2016 ஆம் ஆண்டுக்கு திட்டமிடப்பட்டுள்ள ஆராய்ச்சி பட்டியலை குழுவிற்கு சமர்ப்பிக்குமாறு தவிசாளரினால் பி.க.அ/க.அ இற்கு அறிவுறுத்தப்பட்டது.<br>தேசிய மிருகக்காட்சி சாலை திணைக்களத்துக்கு 05 ஆண்டுகளுக்கு ஏற்புடையவாறு அடிப்படைத் திட்டமொன்றை தயாரித்து அதன் பிரகாரம் இலக்குகளை வழங்குமாறு பி.க.அ/க.அ இற்கு கட்டளையிடப்பட்டது. |

| | கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள் | பிரதம கணக்கீட்டு அலுவலரின்/ கணக்கீட்டு அலுவலரின் விடயங்கள் பற்றிய தெளிவுபடுத்தல் மற்றும் குழுவின் கருத்துகள்/கட்டளைகள் |
|---|---|---|
| **தேசிய தாவரப் பூங்கா திணைக்களம்**<br>**2016 மார்ச் 08** | | |
| 1 | டுபாய் நாட்டில் மலர் செய்கைக்கு பயன்படுத்தப்படுகின்ற தொழில்நுட்பத்தை இலங்கையில் பாவிக்கக்கூடிய இயலுமை | அதற்கு மிகப் பெரிய தொகையை முதலீடு செய்ய வேண்டுமென பி.க.அ/க.அ தெரிவித்தார்.<br>மேற்படி எண்ணக்கரு தொடர்பாக மற்றும் கம்பஹா போன்ற தாவர பூங்காக்களை மேம்படுத்தல் தொடர்பான திட்டமொன்றை தயாரித்து குழுவிடம் சமர்ப்பிக்குமாறு பி.க.அ/க.அ இற்கு கௌரவ தவிசாளர் கட்டளையிட்டார். |
| 2 | வருட இறுதிக்கு முன்னர் வெற்றிடங்களை நிரப்புவது தொடர்பான தற்போதைய நிலைமை | திணைக்கள மட்டத்தில் நிரப்பக்கூடிய வெற்றிடங்கள் நிரப்பப்பட்டுள்ளதாகவும், நாடளாவிய சேவை மற்றும் இணைந்த சேவை வெற்றிடங்கள் தொடர்பாக ஏற்புடைய நிறுவனங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும், விஞ்ஞான சேவை வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் பி.க.அ/க.அ இனால் தெரிவிக்கப்பட்டது. |
| 3 | ஹக்கல தாவரப் பூங்காவின் 69 ஹெக்டேயர் காணி அனுமதியற்ற குடியிருப்பாளர்களினால் கைப்பற்றப்படல் தொடர்பான பிரச்சினையின் தற்போதைய நிலைமை | மேற்படி காணிகள் நுவரெலியா பிரதேச செயலாளர் பிரிவுக்கும் வெலிமட பிரதேச செயலாளர் பிரிவுக்குமுரியவை எனவும், பிரதேச செயலாளர்கள் ஊடாக குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாகவும், மேற்படி குழுவினால் ஏற்புடைய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் பி.க.அ/க.அ இனால் தெரிவிக்கப்பட்டது<br>இது தொடர்பான அறிக்கையொன்றை குழுவிற்கு சமர்ப்பிக்குமாறு பி.க.அ/க.அ இற்கு கட்டளையிடப்பட்டது. |
| 4 | மீகலேவ "ஹரித்த பியச" பயிற்சி நிலையத்தின் குறை பயன்பாடு | இன்றளவில் அது நாற்று மேடையாக மேம்படுத்தப்படுவதாகவும், அதன் கட்டடம் புதுப்பிக்கப்பட்டு வருவதாகவும், அதை தொடர்ந்து மலர்ச் செய்கையாளர்களின் பயிற்சி நிலையமாக இயக்குவதற்கான இயலுமை உள்ளதாகவும் பி.க.அ/க.அ இனால் குழுவிற்கு தெரிவிக்கப்பட்டது |
| 5 | ஹக்கல தாவர பூங்காவுக்கு சொந்தமான கட்டடத்தில் இயங்குகின்ற உணவகத்தின் மூலம் 2007 ஆகஸ்ட் முதல் 2013 யூலை வரை கிடைக்கப் பெற்ற வரி வருமானமான ரூபா 1,053,900/- தொகை அரசாங்கத்தின் இணைந்த நிதியத்துக்கு வரவு வைக்கப்படாது ஊழியர் நலன்புரி சங்க நிதியத்துக்கு வரவு வைக்கப்பட்டு அத் திகதியிலிருந்து கிடைக்கப் பெற்ற வரி வருமானமான ரூபா 270,000/- தொகை மாத்திரம் பொது வைப்புக் கணக்கில் வைத்திருத்தல் | வரித் தொகையாக கிடைக்கப் பெற்ற முழு வருமானமும் அரச வருமானத்துக்கு வரவு வைக்கப்பட வேண்டுமெனவும், இது தொடர்பாக திறைசேரியிடம் வினவ வேண்டுமெனவும் அது தொடர்பாக அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டுமெனவும் பி.க.அ/க.அ இற்கு கட்டளையிடப்பட்டது. |
| 6 | கம்பஹா தாவரப் பூங்காவிற்கு பிரவேசிப்பதற்கான உத்தேச பாலம் மீளாய்வு ஆண்டில் நிர்மாணிக்கப்படவில்லை என்பதால் ரூபா 2,399,315/- செலவில் நிர்மாணிக்கப்பட்ட புதிய பிரவேசப் பாதை, நுழைவாயில், நுழைவுச் சீட்டு கருமபீடம் பயன்படுத்த முடியாதுள்ளமை | நீர்ப்பாசனத் திணைக்களத்தின் எதிர்ப்பு காரணமாக இந்த நிலை ஏற்பட்டதாகவும் அதற்கு அனுமதி கிடைத்துள்ளதால் எதிர்கால திட்டமொன்று தயாரிக்கப்பட்டு வருவதாக பி.க.அ/க.அ இனால் குழுவிற்கு தெரிவிக்கப்பட்டது |

| | **கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்** | **பிரதம கணக்கீட்டு அலுவலரின்/ கணக்கீட்டு அலுவலரின் விடயங்கள் பற்றிய தெளிவுபடுத்தல் மற்றும் குழுவின் கருத்துகள்/கட்டளைகள்** |
|---|---|---|
| 7 | இலங்கையில் தாவரப் பூங்காக்களை பார்வையிடுவதற்கு வருகின்ற சுற்றுலாப் பயணிகளை கவர்வதற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள வழிமுறைகள் | மிரிஜ்ஜவில தாவர பூங்காவிற்கு புதிய நுழைவுப் பாதை அமைப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாகவும், அம்பாந்தோட்டை பூங்காவுக்கு புதிய அம்சங்கள் உள்ளடக்கப்பட்டு வருவதாகவும், அவ்வாறான பூங்காக்களில் புதிய அம்சங்களை சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் பி.க.அ/க.அ இனால் குழுவிற்கு தெரிவிக்கப்பட்டது |
| **கல்வி வெளியீட்டுத் திணைக்களம்**<br>**2016 மார்ச் 10** | | |
| 1 | 2002 பாடசாலை பாடநூல் அச்சு நடவடிக்கைகளுக்கு ஏற்புடையதாக<br>- ரூபா 23 இலட்சம் பெறுமதியான காசோலைகளை மோசடியான முறையில் அச்சீட்டாளருக்கு வழங்குதல்<br>- உடன்படிக்கையின் பிரகாரம் இணங்கிய பாடசாலை பாடநூல்கள் அச்சிடப்படாத காரணத்தினால் ரூபா 212,595,000/- இழப்பீட்டுத் தொகை அறவிடல்<br>- அச்சீட்டாளரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 39,112,143/- இழப்பீட்டுத் தொகையை அறவிடுவதற்கு ஏற்புடைய சட்ட நடவடிக்கைகள்<br>- ஏற்புடைய உத்தியோகத்தர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் ஒழுக்காற்று நடவடிக்கைகள் தொடர்பாக குழு வினவியது | இச் சம்பவத்துடன் தொடர்புடைய சகல விபரங்களும் அடங்கிய அறிக்கையொன்றை 2016 ஏப்பிறல் 01 ஆம் திகதிக்கு முன்னதாக குழுவிற்கு சமர்ப்பிக்குமாறு பி.க.அ/க.அ இற்கு கட்டளையிடப்பட்டது. |
| 2 | 2010 ஆம் அண்டின் விபரக்குறிப்பில் குறிப்பிடப்பட்ட பக்கங்களின் எண்ணிக்கையை விடவும் அதிக பக்கங்களுக்கு பணம் செலுத்துகையில் மேலதிக 64 வெற்றுப் பக்கங்களுக்கு ரூபா 158,526/- தொகையும் 2011 ஆம் ஆண்டில் வெற்றுப் பக்கங்களுக்கு தனியார் அச்சு ஒரு நிறுவனத்துக்கு எந்தவிதமான எழுத்துமூலமான கோரிக்கையுமின்றி ரூ.538,881/= செலுத்தப்பட்டுள்ளது. | மேற்படி வினவலுக்கு ஏற்புடையதாக பி.க.அ/க.அ இனால் வழங்கப்பட்ட பதில் தொடர்பாக திருப்தி கொள்ள முடியாதென வலியுறுத்திய குழு 2009 ஆம் ஆண்டிலிருந்து 2014 ஆம் ஆண்டு வரை மேற்கொள்ளப்பட்ட இவ்வாறான செலுத்துகைகள் தொடர்பான ஆவணமொன்றை மற்றும் ஒவ்வொரு கொடுப்பனவுக்குமான காரணங்களை உள்ளடக்கிய பகுப்பாய்வினையும் குழுவுக்கு சமர்ப்பிக்குமாறு த.க.அ./க.அ.இற்கு கட்டளையிடப்பட்டது. |
| 3. | பாடப்புத்தகங்களின் தேவையினை முறையாகக் கணக்கிடாது, பெருந்தொகையான புத்தகங்களை அச்சிடுதல் மற்றும் பெருந்தொகையான பழைய புத்தகங்கள் களஞ்சியசாலைகளில் காணப்படுதல். | அரசாங்கத்தின் கொள்கைரீதியான தீர்மானத்துக்கமைய பாடப்புத்தகங்கள் அச்சிடப்படுவதாகவும், தற்போது முன்னெடுக்கப்படும் பொருள் மதிப்பீட்டின் பின்னர், களஞ்சியசாலைகளில் உள்ள புத்தகங்கள் பற்றிய விபரங்களை வழங்க முடியுமெனவும் குழுவுக்கு அறிவிக்கப்பட்டது.<br>சகல களஞ்சியசாலைகளிலும் காணப்படும் புத்தகங்களை விற்பனைக்கு உகந்த புத்தகங்கள், பயன்படுத்த முடியாத புத்தகங்கள் மற்றும் பயன்படுத்தக்கூடிய புத்தகங்கள் என வகைப்படுத்தி, விபரமான ஒரு அறிக்கையினை ஏப்பிறல் மாதம் 01ஆந் திகதிக்கு முன்னர் குழுவுக்கு சமர்ப்பிக்குமாறு த.க.அ./க.அ.இற்கு கட்டளையிடப்பட்டது. |

| | கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள் | பிரதம கணக்கீட்டு அலுவலரின்/ கணக்கீட்டு அலுவலரின் விடயங்கள் பற்றிய தெளிவுபடுத்தல் மற்றும் குழுவின் கருத்துகள்/கட்டளைகள் |
|---|---|---|
| 4. | பாடசாலைகளுக்கு இலவசமாக பகிர்ந்தளிக்கப்பட்ட பாடப்புத்தகங்களின் பெறுமதியை அங்கிகரிக்கப்பட்ட முற்பணக் கணக்கில் வரவு வைப்பதற்கு பதிலாக 2014 டிசெம்பர் 31ஆந் திகதியில் ரூபா 9,662,075,549/= கடன்பட்டோர் மீதி கணக்குகளில் காட்டப்பட்டுள்ளமை. | இக்கணக்குகள் பிழையின்றி பதியப்படுதல் வேண்டுமென கணக்காய்வாளர் தலைமை அதிபதி வலியுறுத்தினார். பொதுத் திறைசேரியின் ஆலோசனைகளின் பிரகாரம் இக்கணக்குகளை முறையாக பேணுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளுமாறு குழு த.க.அ./க.அ.இற்கு கட்டளையிட்டது. |
| 5. | 2009 டிசெம்பர் 31 ஆம் திகதி முதல் நிலவும் ரூபா 303,469,564/= பெறுமதியான பயன்பாட்டிலிருந்து நீக்கப்பட்ட புத்தகங்கள், கையிருப்புப் பெறுமதிகள் கணக்குப் புத்தகங்களிலிருந்து நீக்கப்படாமல் 2015 டிசெம்பர் 31 ஆம் திகதி வரையில் கணக்கில் பதியப்பட்டிருந்தமை. | அகற்றப்பட்ட குறிப்பிட்ட புத்தகங்களை வாழைச்சேனை தொழிற்சாலைக்கு அனுப்புவதற்காக அமைச்சரவை அங்கிகாரம் கிடைக்கப்பெற்றுள்ளதாக த.க.அ./க.அ. தெரிவித்ததுடன், இதன் பிரகாரம் அலுவல்களை மேற்கொள்ளுமாறு குழு ஆலோசனை வழங்கியது.<br>திணைக்களத்தின் கணக்குப் பரிசீலனையிலிருந்து வெளிவரும் விடயங்களை கருத்தில் கொண்ட குழுவானது, கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் ஆலோசனைகளைப் பெற்று, உத்தியோகத்தர்களுக்கு கணக்கீட்டு நடவடிக்கைகள் பற்றிய பயிற்சியை வழங்கி இந்த நிலமையை திருத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு த.க.அ./க.அ.இற்கு ஆலோசனை வழங்கியது. |
| 6. | ஆங்கில மொழிமூல மாணவர்களுக்கு போதியளவிலான பாடப்புத்தகங்கள் இல்லையென குழுவினால் அவதானிக்கப்பட்டது. | தேவையினைக் கருத்தில் கொண்டு போதியளவிலான ஆங்கில மொழிமூல பாடப்புத்தகங்கள் அச்சிடப்பட்டு வழங்கப்பட்டுள்ளதாகவும், இத்தகைய ஒரு நிலமை காணப்படுகின்றதாயின் இது தொடர்பில் ஆராய்ந்து பார்த்து தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதாகவும் த.க.அ./க.அ. தெரிவித்தார். |
| 7. | பாடசாலை புத்தகங்களை ஆக்குவதில் அரச துறைக்கு முன்னுரிமை வழங்க வேண்டுமென விதப்புரை செய்யப்பட்டிருந்த போதிலும், தேவைப்பாட்டில் சுமார் 70% தனியார் அச்சீட்டாளர்களிடமிருந்து அச்சிடப்பட்டுள்ளமை குறித்து குழுவில் ஆராயப்பட்டது. | அரச அச்சகங்களிலிருந்து உரியவாறு புத்தகங்களை அச்சிடுவதில் நடைமுறைச் சிக்கல்கள் காணப்படுவதாக த.க.அ./க.அ. சுட்டிக்காட்டினார்.<br>இந்த நிலமையைக் கருத்தில் கொண்டு எதிர்காலத்தில் புத்தகங்களை அச்சிடுவதற்கான உகந்த, வினைத்திறனான செயன்முறையொன்றை அமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு த.க.அ./க.அ.இற்கு கட்டளையிடப்பட்டது. |
| **காணி உரிமை நிர்ணயத் திணைக்களம்**<br>**2016 மார்ச் 10** | | |
| 1. | திணைக்களத்தின் மொத்த வெற்றிடங்களின் எண்ணிக்கை 63% ஆக அதிகூடிய சதவீதமாகக் காணப்படுதல் | 22 பதவிநிலை உத்தியோகத்தர்களுக்கான பற்றாக்குறை காணப்படுவதாகவும், வெற்றிடங்கள் பொதுநிருவாக அமைச்சினால் நிரப்பப்பட வேண்டுமெனவும், இது குறித்து பொதுநிருவாக அமைச்சை அறிவுறுத்தியிருப்பதாகவும் த.க.அ./க.அ. குழுவுக்கு அறிவித்தார். |
| 2. | 2015 பெப்ரவரி மாதம் 05ஆந் திகதி விபத்துக்குள்ளானதில் வாகனத்திற்கு ஏற்பட்ட நட்டம் ரூபா 1.2 மில்லியன் என மதிப்பிடப்பட்டிருந்தபோதிலும், இதில் ரூபா 62,000/= மாத்திரம் சாரதியிடமிருந்து அறவிடப்பட்டிருத்தல். | இது தொடர்பில் ஒழுக்காற்று விசாரணை நடத்தி, முறையான ஒரு தீர்ப்பு வழங்கப்படாமையால், அறவிடுவதில் சிக்கல் தோன்றியிருப்பதாகவும், ஒழுக்காற்று விசாரணைக்கான குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாகவும், அறவிடுதல் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளதாகவும் த.க.அ./க.அ. குழுவுக்கு தெரிவித்தார். |

| | **கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்** | **பிரதம கணக்கீட்டு அலுவலரின்/ கணக்கீட்டு அலுவலரின் விடயங்கள் பற்றிய தெளிவுபடுத்தல் மற்றும் குழுவின் கருத்துகள்/கட்டளைகள்** |
|---|---|---|
| | **நில அளவைத் திணைக்களம்**<br>**2016 மார்ச் 10** | |
| 1. | பல்வேறுபட்ட அளவைகள் மற்றும் காணி சுவீகரிப்பு அளவைகளுக்கான இலக்குகள் காணப்பட்டபோதிலும், குறித்த இலக்குகள் சாத்தியமற்றவையாக காணப்படுதல் | சில சந்தர்ப்பங்களில் விரைவில் பூர்த்தி செய்ய வேண்டிய பணிகள் கையளிக்கப்படுகையில், இலக்குகளைத் தாண்டி விரைவில் பூர்த்தி செய்ய வேண்டி ஏற்படுவதாகவும் த.க.அ./க.அ. தெரிவித்தார். |
| 2. | பணியாட்டொகுதியில் அங்கிகரிக்கப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை 7503ஆக காணப்பட்ட போதிலும், இதில் 1408 வெற்றிடங்கள் காணப்படுதல். | தற்போது நிலஅளவையாளர்கள் 650பேர் ஆட்சேர்க்கப்பட்டுள்ளதாகவும், ஏனைய பணியாட்டொகுதிகளில் காணப்படும் வெற்றிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதாகவும், திணைக்களத்தின் சாரதிகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கான தேவை இருப்பதனால், அங்கிகாரத்துக்காக முன்வைத்துள்ளதாகவும் த.க.அ./க.அ. குழுவுக்கு தெரிவித்தார். |
| 3. | காணாமற்போன வாகனங்களில் அடையாளம் காணப்படாத 22வாகனங்கள் குறித்து குழு வினவியது. | 19 வாகனங்கள் மகாவலி அதிகார சபை மற்றும் நீர்ப்பாசனத் திணைக்களத்திடமிருந்தமை குறித்து அறியவருவதாக த.க.அ./க.அ குழுவுக்கு தெரிவித்தார். இது தொடர்பில் அறிக்கையொன்றை சமர்ப்பிக்குமாறு குழு த.க.அ./க.அ.இற்கு பணிப்புரை விடுத்தது. |
| 4. | நிலஅளவையாளர் சேவையிலிருந்து நீங்கிய 71 உத்தியோகத்தர்கள் அவர்களது பொறுப்பில் காணப்பட்ட ரூபா 7,492,657/= பெறுமதியான அளவீட்டுக் கருவிகளை கையளிக்காமை குறித்து விசாரணை நடத்தி அறிக்கை சமர்ப்பித்தல், குறிப்பிட்ட 71உத்தியோகத்தர்களிடம் இதற்கான பணத்தை அறவிடுதல் மற்றும் 50பேரிடம் அறவிடப்பட வேண்டிய பணத்தை பதிவழித்தல். | குறிப்பிட்ட அளவீட்டுக் கருவிகள் தொடர்பில் 64பேருடைய ஆவணவக் கோப்பு நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்டுள்ளதுடன், 04பேருடைய ஆவணக் கோப்புகள் சட்டப் பிரிவுக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும், 03பேருடைய ஆவணக் கோப்புகள் தொடர்பில் அறவீட்டு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதாகவும் த.க.அ./க.அ. தெரிவித்தார். |
| | **தேசிய சுவடிக்காப்புத் திணைக்களம்**<br>**2016 மார்ச் 10** | |
| 1. | திணைக்களத்தில் உள்ளக கணக்காய்வுப் பிரிவொன்று அமைக்கப்படாமை மற்றும் பெறுகைகள் திட்டம் முறையாக தயார் செய்யப்படாமை. | மார்ச் மாதத்தினுள் உள்ளக கணக்காய்வுப் பிரிவை அமைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதாகவும், முறையான பெறுகைகள் திட்டமொன்றை தயார் செய்து முன்வைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதாகவும் த.க.அ./க.அ. தெரிவித்தார்.<br>திருத்தங்களுடனான பெறுகைகள் திட்டத்தை இரண்டு வார காலப்பகுதிக்குள் தயார் செய்து குழுவுக்கு முன்வைக்குமாறு பணிப்புரை விடுக்கப்பட்டது. |
| 2. | திணைக்களத்தின் பணியாட்டொகுதியில் காணப்படும் மொத்த வெற்றிடங்களின் எண்ணிக்கை 53%ஆகக் காணப்படுவதுடன், 2010ஆம் ஆண்டு முதல் காணப்படும் முக்கிய மூன்று பதவிகளுக்கான வெற்றிடங்கள் நிரப்பப்படாமையால் நிறுவனத்தின் வினைத்திறனுக்கு ஏற்படும் பாதிப்பு | ஆட்சேர்ப்பு நடைமுறை இதுவரையில் அங்கிகரிக்கப்படாமை இதற்கு ஏதுவாகியுள்ளதாக க.அ. தெரிவித்தார். இது குறித்து ஒருங்கிணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம், சம்பள ஆணைக்குழு உள்ளிட்ட குறித்த பிரிவுகளுக்கு ஆற்றுப்படுத்துமாறும், இந்த நிறுவனங்கள் வழங்கும் விதப்புரைகளை குழுவுக்கு சமர்ப்பிக்குமாறும் பணிப்புரை விடுக்கப்பட்டது. |

| | கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள் | பிரதம கணக்கீட்டு அலுவலரின்/ கணக்கீட்டு அலுவலரின் விடயங்கள் பற்றிய தெளிவுபடுத்தல் மற்றும் குழுவின் கருத்துகள்/கட்டளைகள் |
|---|---|---|
| 3. | தேசிய சுவடிக்கூடத்தை மேம்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்து குழுவில் வினவப்பட்டது. | ஆசியாவில் சிறந்த சுவடிக்கூடமாக இடம்பிடித்தபோதிலும், நவீன தொழிநுட்பத்துடனான வளர்ச்சியில் குறிப்பிட்டதொரு பின்னடைவு காணப்படுவதாகவும், தற்போது டிஜிட்டல் தொழிநுட்பம் மீது கவனம் செலுத்தப்பட்டுள்ளாகவும், இதற்காக தேசிய சுவடிக்காப்புச் சட்டம் மற்றும் இடைநேர்விளைவான சட்டதிட்டங்களை திருத்துவதற்கான தேவைப்பாடு குறித்து த.க.அ./க.அ. தெளிவுபடுத்தினார்.<br>இதன் முன்னேற்றம் உள்ளடங்கிய அறிக்கையை குழுவுக்கு சமர்ப்பிக்குமாறு த.க.அ./க.அ.இற்கு பணிப்புரை விடுக்கப்பட்டது. |
| 4. | தேசிய சுவடிக்காப்புத் திணைக்களத்தினால் தற்போது பாதுகாக்கப்படாதுள்ள ஆவணங்கள் | திணைக்களத்தின் தொழிநுட்பப் பிரிவினால் இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாகவும், போதியளவு ஊழியர்கள் இல்லையெனவும், நிலவுகின்ற வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்பதற்கான அங்கிகாரத்துக்காக ஆற்றுப்படுத்தியுள்ளதாகவும், த.க.அ./க.அ. குழுவுக்கு தெரிவித்தார். |
| 5. | திணைக்களத்துக்குச் சொந்தமான புதிய கட்டிடத்தின் விஸ்தரிப்புப் பணிகள் மற்றும் கருவிகள் கொள்வனவுக்காக வழங்கப்பட்டிருந்த நிதியில் ரூ. 49.58 மில்லியன் மீண்டும் திறைசேரிக்கு அனுப்பப்பட்டுள்ளமை. | கட்டிடத்தின் நிர்மாணப் பணிகளை மேற்கொண்ட சி.ஈ.சி.பீ. நிறுவனமே தேவையான கருவிகளை வழங்குவதென திட்டமிட்டிருந்தபோதிலும், மீளவும் விலைமனுக் கோருமாறு செய்யப்பட்ட விதப்புரையின் பிரகாரம், பெறுகைகள் செயன்முறையில் ஏற்பட்ட தாமதம் இதற்கு காரணமானதென த.க.அ./க.அ. தெரிவித்தார். |
| **தேசிய நல்லிணக்கம், கலந்துரையாடல் மற்றும் அரச கருமமொழிகள் அமைச்சு**<br>**2016 மார்ச் 10** | | |
| 1. | முன்னாள் அமைச்சரொருவரது வீட்டிலிருந்த வளிச்சீராக்கி இயந்திரம் உள்ளிட்ட சில கருவிகள் அமைச்சுக்கு உரிய விதத்தில் கையளிக்கப்படாமை. | பொருள் கொள்ளல் கட்டளை குறிப்பிட்ட அமைச்சுக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும், குறித்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாகவும் த.க.அ./க.அ. தெரிவித்தார். |
| 2. | அரச நிறுவனங்களில் அரச கரும மொழிகள் கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்காக திட்டமிடப்பட்டுள்ள புதிய மாதிரி வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதிலான தேர்ச்சி | தெரிவு செய்யப்பட்ட 14 அரச நிறுவனங்களில் தாபிக்கப்பட்டுள்ள புதிய மாதிரி வேலைத்திட்டம் சிறப்பாக முன்னெடுக்கப்படுவதாக த.க.அ./க.அ. தெரிவித்தார். |
| 3. | 'தனியாய' எனும் சினிமா நாடகத்தை தயாரிப்பதற்காக கதை ஆசிரியரொருவருக்கு ரூ.500,000/= பணம் செலுத்தப்பட்டுள்ளபோதிலும், அச்செயற்பாடு இடைநிறுத்தப்பட்டுள்ளமையை குழு அவதானித்தது. | இதனை ஒளிபரப்புவதற்காக தேசிய ரூபவாஹி அலைவரிசையுடன் செய்துகொள்ளப்பட்டிருந்த உடன்படிக்கை நடைமுறைப்படுத்தப்படாததன் காரணமாக இந்நிலமை ஏற்பட்டதாக த.க.அ. தெரிவித்தார்.<br>சமூக ஒருங்கிணைப்பிணை நோக்காகக் கொண்ட ஒரு சினிமாப் படைப்பாகையால் இது குறித்து மீளவும் கவனம் செலுத்துமாறு த.க.அ.இற்கு ஆலோசனை வழங்கப்பட்டது. |
| 4. | வட மாகாணத்தில் நிலவும் சமூக ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர்களின் பற்றாக்குறை | சமுக ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர்கள் 92பேரை ஆட்சேர்ப்பதற்காக பொது நிருவாக அமைச்சின் அங்கிகாரம் கோரப்பட்டுள்ளதாகவும், அங்கிகாரம் கிடைக்கப்பெற்றதும் ஆட்சேர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதாக த.க.அ. தெரிவித்தார். |

| | **கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்** | **பிரதம கணக்கீட்டு அலுவலரின்/ கணக்கீட்டு அலுவலரின் விடயங்கள் பற்றிய தெளிவுபடுத்தல் மற்றும் குழுவின் கருத்துகள்/கட்டளைகள்** |
|---|---|---|
| 5. | தேசிய கீதத்தை இலங்கையின் தேசிய மொழிகள் இரண்டிலும் இசைப்பது பற்றிய பிரச்சினை | இது தொடர்பில் இலங்கைக்கான அடையாளத்தை பாதுகாக்கும் அமைச்சரவை உபகுழுவினால் தயாரிக்கப்பட்டுள்ள அறிக்கை குறித்து தெளிவுபடுத்திய த.க.அ., இதன் பிரதியை குழுவுக்கு சமர்ப்பிப்பதற்கு உடன்பட்டார்.<br>இது தேசிய நல்லிணக்கத்தின் மீது நேரடியாக தாக்கம் செலுத்தும் ஒரு விடயமாகையால், அமைச்சினால் ரூபவாஹினி நிகழ்ச்சித்திட்டங்கள், வானொலி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் துண்டுப் பிரசுரங்கள் மூலம் பொதுமக்களுக்கு இது பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதை காலத்தின் தேவையாகக் கருதி நடவடிக்கை மேற்கொள்ளுமாறு குழுவானது த.க.அ.க்கு ஆலோசனை வழங்கியது. |
| 6 | அரச நிறுவனங்களில் அரசகரும மொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்துவதிலான தேர்ச்சி | தனியார் துறைக்கும் இது ஏற்புடையதாகும் வகையில் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென வலியுறுத்தியதுடன், இதற்காக குறிப்பிட்ட சட்டத்தில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டுமென பிரேரிக்கப்பட்டது. |
| | **அரச கருமமொழிகள் திணைக்களம்**<br>**2016 மார்ச் 10** | |
| 1. | திணைக்களத்தில் மொழிபெயர்ப்பாளர் பதவியில் 33 வெற்றிடங்கள் காணப்படுவதால் அரச மற்றும் அரசுசார்ந்த நிறுவனங்களின் மொழிபெயர்ப்பு நடவடிக்கைகளில் ஏற்படும் தாமதம் குறித்தும் சிரேஷ்ட மட்டத்திலான 06 பதவிகள் வெற்றிடமாகக் காணப்படுவது குறித்தும் குழுவில் வினவப்பட்டது. | சம்பள மட்டங்களில் காணப்படும் சிக்கல்கள் காரணமாக திணைக்களத்துக்கு ஆட்சேர்க்கப்படும் உத்தியோகத்தர்களை தக்க வைத்துக்கொள்வதில் சிரமம் காணப்படுவதாக த.க.அ./க.அ. சுட்டிக்காட்டினார்.<br>இந்தப் பதவியை முக்கியமானதாகக் கருதி மொழிபெயர்ப்பாளர்களை விசேட சம்பள மட்டமொன்றில் அமர்த்துவது உகந்ததென குழு சுட்டிக் காட்டியதுடன், இந்த சிக்கலை தீர்த்துக் கொள்ளக்கூடிய ஒரு வழிமுறை குறித்து பொது நிருவாக அமைச்சுடன் பேச்சுவார்த்தை நடத்தி 2016 மார்ச் 31ஆந் திகதிக்கு முன்னர் குழுவுக்கு அறிவிக்குமாறு த.க.அ./க.அ.இற்கு பணிப்புரை விடுக்கப்பட்டது. |
| | | முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் தேவையான ஊழியர்களின் எண்ணிக்கையை (245) அங்கிகரித்தபோதிலும், இதற்கான மேலதிக ஏற்பாடுகள் திறைசேரியிலிருந்து கிடைக்கப்பெறாதென அறிவித்துள்ளமையால், இந்த வெற்றிடங்களை நிரப்ப முடியாதென க.அ. தெரிவித்தார்.<br>இதற்கான நடைமுறைச் சாத்தியமான ஒரு தீர்ப்பினை வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கௌரவ தவிசாளர் திறைசேரி பிரதிநிதிகளுக்கு ஆலோசனை வழங்கினார். |

| | **கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்** | **பிரதம கணக்கீட்டு அலுவலரின்/ கணக்கீட்டு அலுவலரின் விடயங்கள் பற்றிய தெளிவுபடுத்தல் மற்றும் குழுவின் கருத்துகள்/கட்டளைகள்** |
|---|---|---|
| 2. | மும்மொழி அகராதிகள் 58 இன் பற்றாக்குறை, புதிய 21 எழுத்துத் தமிழ் புத்தகங்கள் அழிவடைதல் மற்றும் 2012 ஆம் ஆண்டில் ரூபா 49,000/= பெறுமதியான 150 பேச்சுத் தமிழ் புத்தகங்களும் 95 எழுத்துத் தமிழ் புத்தகங்களும் காணாமற்போதல் தொடர்பில் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்து குழு வினவியது. | இது தொடர்பில் விசாரணை முன்னெடுக்கப்படுவதாகவும், 02 மாத காலப்பகுதிக்குள் இது பற்றிய அறிக்கையை சமர்ப்பிப்பதாகவும் த.க.அ./க.அ. தெரிவித்தார். |
| 3. | அரச உத்தியோகத்தர்களுக்கு மொழித்தேர்ச்சி பெறுவதற்கான வசதிகளை வழங்கும் முகமாக e-Learning தொலைக்கல்வி முறைமையை தொழிற்படுத்துதல். | வளவாளர்களுக்கு செலுத்துவதற்காக பொது நிருவாக அமைச்சினால் அங்கிகரிக்கப்பட்டுள்ள கட்டணங்கள் போதியதாக இன்மையால், அவர்களது சேவையைப் பெறுவதில் காணப்படும் சிரமங்கள் காரணமாக இந்த செயன்முறையை நடைமுறைப்படுத்துவதற்கு முடியாதுள்ளதாக த.க.அ./க.அ. சுட்டிக் காட்டினார். |
| 4. | சிங்களம் /தமிழ் சுயமாக தொழிற்படும் மொழிபெயர்ப்பு மென்பொருளை அமைத்தல். | மொறட்டுவை பல்கலைக்கழகத்துடன் இணைந்து இந்த செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதாகவும், எதிர்வரும் 06மாத காலப்பகுதிக்குள் மென்பொருளை தயாரித்து முடிக்க இயலுமென்றும் க.அ. தெரிவித்தார். |
| **கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சு**<br>**2016 மார்ச் 11** | | |
| 1. | பணியாட்டொகுதியில் காணப்படும் வெற்றிடங்கள் மற்றும் பதில் கடமையாற்றுதல் அடிப்படையில் நிலவும் பதவிகளை நிரப்புதல் | வெற்றிடங்கள் தொடர்பிலான நடவடிக்கைகளை மேற்கொண்டிருப்பதாக த.க.அ./க.அ. தெரிவித்தார்.<br>நிலவுகின்ற 203 ஊழியர்களுக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்காக எடுக்கப்படும் நடவடிக்கைகள் பற்றிய முழுமையான ஒரு அறிக்கையை காலவரையறை சகிதம் குழுவுக்கு சமர்ப்பிக்குமாறு த.க.அ./க.அ.இற்கு பணிப்புரை விடுக்கப்பட்டது. |
| 2. | கைத்தொழில் துறை, கைத்தொழில்களின் எண்ணிக்கை மற்றும் கைத்தொழில் பேட்டைகளிலிருந்து உருவாகும் வேலைவாய்ப்புக்களின் எண்ணிக்கை | வழங்கப்பட்டுள்ள தரவுகள் குறித்து திருப்தியடைய முடியாதென குழு த.க.அ./க.அ. இற்கு அறிவித்ததுடன், இது பற்றிய விபரமான ஒரு அறிக்கையை மார்ச் 31ஆந் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு பணிப்புரை விடுக்கப்பட்டது. |
| 3. | தற்போதுள்ள கைத்தொழில் பேட்டைகளில் ஒன்றுசேரும் கழிவுகளை முகாமைத்துவம் செய்தல். | தற்போது அமைச்சின் தலையீட்டில் தங்கொட்டுவை பிரசேத்தில் அமைந்துள்ள கைத்தொழிற்சாலைகளின் கழிவுகளை முகாமைத்துவம் செய்வதற்கான ஒரு மத்திய பிரிவொன்றை (central unit) அமைப்பதற்கான ஒரு தீர்மானம் எட்டப்பட்டுள்ளதாகவும், இதற்குத் தேவையான நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் த.க.அ./க.அ. குழுவுக்கு அறிவித்தார். |

| | **கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்** | **பிரதம கணக்கீட்டு அலுவலரின்/ கணக்கீட்டு அலுவலரின் விடயங்கள் பற்றிய தெளிவுபடுத்தல் மற்றும் குழுவின் கருத்துகள்/கட்டளைகள்** |
|---|---|---|
| 4. | புள்ளிவிபரங்களுக்கு அமைவாக கைத்தொழிற்சாலைகளின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் ஊழியர்களின் எண்ணிக்கையில் குறைவு காணப்படுதல். | கொள்கை ரீதியான வேறுபாடுகள், அதிக வரி விதிப்புக்கள் மற்றும் வெளிநாடுகளிலிருந்து பொருட்களை இறக்குமதி செய்தல் போன்றன இதற்கான காரணங்களாக அமைந்துள்ளன எனவும், கைத்தொழிற்சாலைகளை தாபிக்கையில் உடன்படிக்கைகளை செய்துகொண்டு செயற்பட்டாலும், தொழில் முயற்சியாளரது விருப்பத்தின் பேரில் அதிலிருந்து நீங்குவதற்கான வாய்ப்பு அவர்களுக்கு உரித்தாக இருப்பது இந்த நிலமைக்கான காரணமென த.க.அ./க.அ.இற்கு தெரிவித்தார். |
| 5. | அமைச்சுக்கு ஒதுக்கப்பட்ட ரூபா 3.116 பில்லியன் மூலதனச் செலவில் 1.8% ஒதுக்கப்பட்டுள்ள கடன் வழங்கும் கருத்திட்டம் குறித்து குழு வினவியது. | 8% வட்டி வீதத்தில் சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழில்கள் மற்றும் கமத்தொழில் நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்காக கடன் வழங்கும் குறித்த நிதியத்தில் 10 அரச வங்கிகள் தொடர்புபட்டுள்ளதாகவும், அமைச்சின் உத்தியோகத்தர்கள் ஊடாக இதன் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாகவும், இதனை மென்மேலும் முறைப்படுத்துவதற்காக SME இன் கீழ் அமைச்சரவை அங்கிகாரத்தின் மீது செயல்திட்டமொன்று தயார் செய்யப்பட்டுள்ளதாகவும், தேசிய தொழில்முயற்சிகள் அபிவிருத்தி அதிகார சபையுடன் இணைந்து பிரதேச செயலகப் பிரிவுகள் வாரியாக விளம்பரப்படுத்துவதாகவும், ஏற்றுமதி அபிவிருத்தி சபையினால் தகுதியானவர்களைத் தெரிவு செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாகவும் த.க.அ./க.அ. தெரிவித்தார். இந்த இரண்டு நிறுவனங்களினதும் நடவடிக்கைகள் பற்றிய விபரமான அறிக்கையினை மார்ச் 31ஆந் திகதிக்கு முன்னர் குழுவுக்கு சமர்ப்பிக்குமாறு த.க.அ./க.அ.இற்கு பணிப்புரை விடுக்கப்பட்டது. |
| 6 | கைத்தொழில் அமைச்சின் கீழ் காணப்படும் கைத்தறி நெசவுக் கைத்தொழிலின் முன்னேற்றம் | 06 மாத கால பிரயோக பயிற்சியை வழங்கி இந்த கைத்தொழிலில் நபர்களை ஈடுபடுத்துவதாகவும், இதற்காக ரூபா 70 மில்லியன் அங்கிகரிக்கப்பட்டுள்ளதாகவும் த.க.அ./ க.அ. குழுவுக்கு தெரிவித்தார். |
| | **வாணிப திணைக்களம்**<br>**2016 மார்ச் 11** | |
| 1. | கடந்த 10 வருட காலப்பகுதியில் மொத்த உள்நாட்டு உற்பத்தியைப் போன்றே மொத்த தேசிய உற்பத்தியிலும் சதவீத ரீதியிலான குறைவு காட்டப்பட்டுள்ளதுடன், இதற்கு ஏதுவான காரணங்கள் குறித்து குழு வினவியது | ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுகையில் இலங்கையின் ஏற்றுமதியில் போதியளவிலான பல்வகைத்தன்மை பேணப்படாமை, உலக சந்தையில் ஏற்பட்ட கடுமையான போட்டித்தன்மை, ஏற்றுமதி அளவில் ஏற்பட்ட குறைவு மற்றும் ஏற்றுமதி காலத்திற்கேற்ற வகையில் நவீனமயமாக்கப்படாமை ஆகியன இதற்கு ஏதுவாக அமைந்துள்ளதாக த.க.அ./க.அ. தெரிவித்தார். |

| | **கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்** | **பிரதம கணக்கீட்டு அலுவலரின்/ கணக்கீட்டு அலுவலரின் விடயங்கள் பற்றிய தெளிவுபடுத்தல் மற்றும் குழுவின் கருத்துகள்/கட்டளைகள்** |
|---|---|---|
| 2. | GSP+ சலுகை மற்றும் மீன்பிடி உற்பத்திகளின் ஏற்றுமதியின் மீதான தடையினை நீக்குவதற்காக திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்து குழுவின் கவனம் செலுத்தப்பட்டது. | 2004 மற்றும் 2005ஆம் ஆண்டுகளில் GSP சலுகைகளை எதிர்பார்த்து விண்ணப்பித்த போதிலும் அதனைப் பெற்றுக்கொள்ள முடியவில்லை எனவும், அப்போது இடம்பெற்ற யுத்தம் காரணமாக 2008ஆம் ஆண்டில் இது குறித்து கருத்தில் எடுக்கப்படவில்லை எனவும், மீண்டும் கோரிக்கையை முன்வைப்பதற்கான விண்ணப்பப்படிவங்கள் தயார் செய்யப்படுவதாகவும், ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுகையில் இலங்கையின் நிலமை மகிழ்ச்சிகரமானதாக உள்ளதால், 03 மனித உரிமை சமவாயங்கள் குறித்து மாத்திரம் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் பதிலிருப்பை அவர்கள் எதிர்பார்ப்பதாகவும், மீன்பிடி உற்பத்திகளின் ஏற்றுமதி மீதான தடையை நீக்குவதற்காக குறித்த அமைச்சுடன் சிறந்த ஒருங்கிணைப்பினைப் பேணி செயற்பட்டதாகவும் த.க.அ./க.அ. தெரிவித்தார்.<br>மே மாதமளவில் குறித்த தடையை நீக்குவதற்கான இயலுமை கிட்டுமென த.க.அ. நம்பிக்கை தெரிவித்தார். |
| 3. | தூதராண்மைக் குழுக்களில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள வணிக உத்தியோகத்தர்களின் விடயப் பொறுப்புக்கள் மற்றும் குறித்த உத்தியோகத்தர்களை நியமிப்பதன் மூலம் நாட்டுக்கு கிடைக்கப்பெற்றுள்ள நன்மைகள் | ஒவ்வொரு வணிக உத்தியோகத்தரும் அமைச்சரவையின் அங்கிகாரத்தின் மீது வருடாந்த செயலாற்றுகை அறிக்கையினை தயார் செய்து, முதலீடு மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டுக்காக ஒரு இலக்கினை அடிப்படையாகக் கொண்ட திட்டமொன்றை நடைமுறைப்படுத்த வேண்டுமெனவும், இதன் முன்னேற்றத்தை மீண்டும் அறிவிக்க வேண்டுமெனவும் த.க.அ./க.அ. தெரிவித்தார்.<br>வெளிநாட்டு முதலீடுகளை ஊக்குவிக்கும் நோக்கில் தாபிக்கப்பட்டுள்ள ஏனைய நிறுவனங்களுக்கிடையில் உள்ளக தொடர்புகள் பேணப்படாமை தொடர்பில் குழு தமது அதிருப்தியைத் தெரிவித்ததுடன், உரிய திட்டமொன்றுடன், குறித்த நிறுவனங்களுக்கிடையில் ஒருங்கிணைப்பினை மேற்கொண்டு எதிர்வரும் ஐந்து வருட காலப்பகுதிக்குள் மேம்படுத்தக்கூடிய கைத்தொழில்களை அடையாளம் கண்டு அது பற்றிய ஒரு அறிக்கையினையும் |
| | | வணிக உத்தியோகத்தர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள 25 நாடுகளில் முதலீடு மற்றும் ஏற்றுமதி ஊக்குவிப்புக்காக அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள இலக்குகள் மற்றும் இது தொடர்பில் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ள பின்னாய்வு குறித்த அறிக்கையை ஒரு மாத காலத்தினுள் குழுவுக்கு பெற்றுக்கொடுக்குமாறு பி.க.அ.க்கு கட்டளையிடப்பட்டது. |

| | கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள் | பிரதம கணக்கீட்டு அலுவலரின்/ கணக்கீட்டு அலுவலரின் விடயங்கள் பற்றிய தெளிவுபடுத்தல் மற்றும் குழுவின் கருத்துகள்/கட்டளைகள் |
|---|---|---|
| | **கம்பனிகள் பதிவாளர் திணைக்களம்**<br>**2016 மார்ச் 11** | |
| 1. | நிறுவன செயலாற்றுகையில் நேரடியாக தாக்கம் செலுத்தியுள்ள 39% ஆன பணியாட் தொகுதி பற்றாக்குறை | வெற்றிடமாக காணபட்ட சில பதவிகளுக்கு ஆட் சேர்ப்புச் செய்யப்பட்டதாகவும், அமைச்சரவையின் அங்கீகாரத்துடன் முழு நேர அடிப்படையில் கம்பனி பதிவாளர் பதவிக்கு அலுவலர் ஒருவர் நியமிக்கப்பட்டதாகவும், தற்சமயம் கம்பனி பதிவாளர் பதவியில் பதில் கடமையாற்றும் அலுவலரை இப்பதவியில் நிரந்தரமாக்குவதில் பிரச்சினை காணப்படுவதாகவும் பி.க.அ./க.அ குறிப்பிட்டுள்ளார். |
| 2. | பெறுகைகள் கோவையின் 5.4.8 (ஆ) பிரிவிற்கு அமைவாக செயலாற்றுகைப் பிணையின்றி ரூபா 88,812,227/= ஆன கணினிமயமாக்கல் கருத்திட்டமொன்று அளிக்கப்பட்டதுடன் இக்கருத்திட்டம் பயனற்றுப்போனதால் நிறுவனத்திற்கு ரூபா 13 மில்லியன் நிதிசார் நட்டம் ஏற்பட்டுள்ளமை | இவ்விடயம் பற்றி கால வரையறையுடன் கூடிய அறிக்கையொன்றை குழுவிற்கு சமர்ப்பிக்குமாறு பி.க.அ/க.அ க்கு கட்டளையிடப்பட்டது. |
| 3 | பதிவு செய்யப்பட்ட நிறுவனங்களால் 2008-2015 காலத்தில் திணைக்களத்திற்கு சேர வேண்டிய நிலுவை பணமாகவிருந்த ரூபா 628,240,000/= தொகையை அறவிடுவதற்கு எடுக்கப்பட்ட வழிமுறைகள் பற்றிய அறிக்கையொன்றை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்குமாறு பி.க.அ/க.அ. க்கு கட்டளையிடப்பட்டது. | ஒவ்வொரு புதிய பதிவின் போதும் நிறுவனம் குறித்த பணத்தை செலுத்த வேண்டியதுடன் தற்சமயம் அன்னளவாக 79000 நிறுவனங்கள் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன. வர்த்தக முயற்சிகள் மேற்கொள்ளப்படாவிடினும் வருடாந்த பதிவிற்காக ரூ. 60,000/= ஐ நிறுவனத்திற்கு செலுத்த வேண்டுமெனவும் வருமான முரண்பாட்டை கருத்திற்கொள்ளாது நிலுவை பணத்தை செலுத்துவதால் பதிவை இற்றைப்படுத்திக்கொள்ள முடியுமென பி.க.அ./க.அ. ஆல் குறிப்பிடப்பட்டது. |
| 4. | ரூ.325.65 மில்லியன் நட்டம் ஏற்பட்டுள்ள நிறுவனமொன்றின் பங்குகளை கொள்வனவு செய்வதற்காக நிறுவனத்தின் நிதியத்தினால் செலவிடப்பட்டு பெற்றுக்கொண்ட பங்குகளின் உரிமையை நிறுவனத்தின் நிதியத்திற்கு பெற்றுக்கொள்ளல். | 2007 ஆண்டில் அமைச்சரவைப் பத்திரமொன்றினால் இத்தொகை E-Serivice Sri Lanka என்ற அரச, தனியார் கூட்டு நிறுவனமொன்றில் முதலீடு செய்யப்பட்டுள்ளதுடன் இதன் பங்கு உரிமச் சான்றிதழ் அமைச்சின் செயலாளரின் பெயருக்கு வழங்கப்பட்டுள்ளது. இக்கொடுக்கல் வாங்கலை பரிசோதிப்பதற்கு சனாதிபதி விசாரணை பிரிவிற்கும் நிதி குற்றப்புலனாய்வு பிரிவிற்கும் அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பி.க.அ/க.அ. ஆல் கூறப்பட்டது.<br><br>இக்கொடுக்கல் வாங்கல் தொடர்பாக அறிக்கையொன்றை பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பி.க.அ/க.அ க்கு கட்டளையிடப்பட்டது. |
| | **அளவைக் கூறுகள், கட்டளைகள் மற்றும் சேவைகள் திணைக்களம்**<br>**2016 மார்ச் 11** | |
| 1. | 2015 ஆண்டளவில் உள்ளிட்ட தர பிரிவுகளில் காணப்பட்ட 35 வெற்றிடங்களை பூர்த்தி செய்தல் | நிலவும் வெற்றிடங்களை நிரப்புவதற்கு வழிமுறைகள் எடுக்கப்பட்டதாகவும், போதுமான தகைமைகள் காணப்படாமையினால் உள்ளக ஆட்சேர்ப்பு பிரச்சினைக்குரியதென பி.க.அ./க.அ. ஆல் கூறப்பட்டது. |

| | கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள் | பிரதம கணக்கீட்டு அலுவலரின்/ கணக்கீட்டு அலுவலரின் விடயங்கள் பற்றிய தெளிவுபடுத்தல் மற்றும் குழுவின் கருத்துகள்/கட்டளைகள் |
|---|---|---|
| 2 | திணைக்கள வளாகத்தில் புதிய அளவை ஆய்வுகூடமொன்றை நிர்மாணிப்பதற்கு எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு இணைவாக சேவை வழங்கலுக்கு ரூபா 15,325,542/= பணம் 2007 ஆண்டு தொடக்கம் 2009 வரையான காலத்தில் செலவிடப்பட்ட போதிலும் நிர்மாணப்பணிகள் 7 ஆண்டுக்களுக்குப் பின் நிறைவு செய்யப்பட்டிருந்தமையால் பயனற்ற செலவினமாகியமை. | குறித்த இடத்தில் சர்வதேச தரங்களுக்கு இணையாக நிர்மாணிப்பதற்கு போதாமையால் ரூபா 76 மில்லியன் செலுத்தப்பட்டு நகர அபிவிருத்தி அதிகார சபையினால் பெற்றுக்கொள்ளப்பட்ட காணியில் இது நிர்மாணிக்கப்பட்டு தற்சமயம் இயங்கும் நிலையில் இருப்பதாக பி.க.அ./க.அ. ஆல் கூறப்பட்டது. |
| 3 | புதிய கணினி வலையமைப்பை இயங்கச் செய்தல் | நிதி பற்றாக்குறையால் கணினி வலையமைப்பு கருத்திட்டம் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டதாகவும் இதற்கென ரூ.50 மில்லியன் மதிப்பீடொன்று இலங்கை வர்த்தக நிதிக் கூட்டுத்தாபனத்தினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும் பி.க.அ./க.அ.குறிப்பிட்டார். |
| **ஏற்றுமதி விவசாயத் திணைக்களம்**<br>**2016 மார்ச் 11** | | |
| 1. | பணியாட்டொகுதியில் நிலவும் வெற்றிடங்கள் | மூப்பு மட்டத்திலான பதவி வெற்றிடங்களுக்குரிய சுற்றறிக்கைகளுக்கு அமைவாக உள்ள அலுவலர்கள் 2018 இல் தகைமையை பெற்றுக்கொள்ளவிருப்பதாகும், இதர வெற்றிடங்களை நிரப்புவதற்கு தேவையான வழிமுறைகள் மேற்கொள்ளப்படுவதாகவும் பி.க.அ/க.அ. ஆல் குழுவிற்கு கூறப்பட்டது.<br>இவ்வெற்றிடங்களை நிரப்புவதற்கு எடுக்க வேண்டிய வழிமுறைகள் பற்றி தயாரிக்கப்பட்ட அறிக்கையொன்றை 2016 ஏப்பிரல் மாதம் 05 ஆம் திகதிக்கு முன் குழுவிற்கு சமர்ப்பிக்குமாறு பி.க.அ/க.அ. க்கு கட்டளையிடப்பட்டது. |
| 2. | 2012 மூலதன செலவின் குறை பயன்பாடும் 2014 இல் நிதி ஏற்பாடுகள் 9%-79% வீச்சிடையில் மீதியாயுள்ளமையும் காணப்பட்டமை | 2014 இல் திட்டமிடப்பட்டவாறு ஆய்வுகூட உபகரண கொள்வனவை மேற்கொள்ள முடியாமை இதற்கு காரணமாகுமென க.அ. கூறினார். |
| 3. | திணைக்களத்தின் செயற்பாடு மற்றும் எதிர்வரும் ஐந்து ஆண்டுகளில் விவசாய உற்பத்திகளின் ஏற்றுமதியை மேம்படுத்துவதற்கு இலக்கிடப்பட்ட வேலைத்திட்டங்களை வகுத்தல். | தற்சமயம் டொலர் 0.5 பில்லியன் மட்டத்தில் காணப்படும் ஏற்றுமதி வருமானத்தை 2020 அளவில் ஒரு பில்லியன் டொலராக அதிகரிப்பதற்கு திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளதாக பி.க.அ/க.அ. ஆல் குழுவிற்கு கூறப்பட்டது. ஏற்றுமதி பயிர் வகைகள் ஊக்குவிப்பு திட்டங்கள், இலக்கிடப்பட்ட வெளிநாட்டுச் செலாவணித் தொகை, 2020 ஆம் ஆண்டில் அதனை ஈட்டிக்ெகாள்ளும் முறை, 2017, 2018 மற்றும் 2019 ஆண்டுகளில் முறையாக மேற்படி நோக்கங்களை அடைவதற்கான முறையியலொன்று அடங்கிய அறிக்கையொன்றை 2016 ஏப்ரல் ஏப்பிரல் 30 ஆம் திகதிக்கு முன் குழுவிற்கு பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்குமாறு பி.க.அ./க.அ. க்கு கட்டளையிடப்பட்டது. |
| 4. | அரசாங்கம் மற்றும் தனியாருக்கு சொந்தமான 350 ஏக்கர் காணியை சுவீகரிப்பு செய்யாமை. | குறித்த காணியில் 07 துண்டுகள் இற்றைவரையில் சுவீகரிக்கப்படாததுடன், எஞ்சிய 42 காணித் துண்டுகளையும் சுவீகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும், பி.க.அ./க.அ. குழுவிடம் தெரிவித்துள்ளார். |

| | **கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்** | **பிரதம கணக்கீட்டு அலுவலரின்/ கணக்கீட்டு அலுவலரின் விடயங்கள் பற்றிய தெளிவுபடுத்தல் மற்றும் குழுவின் கருத்துகள்/கட்டளைகள்** |
|---|---|---|
| 5. | 2012 ஜூலை 26 ஆம் திகதி திருடப்பட்டதாக கூறப்பட்ட திணைக்களத்திற்கு சொந்தமான பெஜரோ வகை ஜீப் வண்டி பற்றி மேற்கொண்ட விசாரணை மற்றும் அதன் நட்டத்தை ஈடுசெய்வதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் | இதன் விசாரணைகள் நிறைவு செய்யப்பட்டுள்ளதாகவும், குறித்த சாரதி பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளதாகவும், வாகனம் வழங்கப்பட்டிருந்த உத்தியோகத்தரிடமிருந்து விதந்துரைக்கப்பட்ட தொகையொன்றை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் பி.க.அ./க.அ. குழுவிடம் தெரிவித்துள்ளார்.<br>மேற்படி விடயம் பற்றிய முழுமையான அறிக்கையொன்றை குழுவிடம் சமர்ப்பிக்குமாறு பி.க.அ./க.அ. க்கு கட்டளையிடப்பட்டது. |
| 6. | வல்லாபட்டா தாவரத்தை ஏற்றுமதி செய்வதால் பெருமளவு வெளிநாட்டுச் செலாவணியை ஈட்டமுடியுமென்பதால் அதனை ஊக்குவித்தல். | தனியார் துறையின் ஊடாக இத்தாவரம் ஏற்கனவே பிரபல்யப்படுத்தப்பட்டு வருதாக பி.க.அ./க.அ. குழுவிடம் தெரிவித்தார்.<br>சட்டப்படி மேற்படி தாவரத்தை வளர்ப்பது பற்றி விவசாய திணைக்களமும் ஏற்றுமதி விவசாய திணைக்களமும் கவனம் செலுத்த வேண்டுமென குழு பிரேரித்துள்ளது. |
| | **இலங்கை சுங்க திணைக்களம் (மீள அழைக்கப்பட்டமை)<br>2016 மார்ச் 23** | |
| 1. | அரசாங்கத்தின் நடைமுறையிலுள்ள சட்டவிதிகளுக்கு ஒத்திசைவற்ற முறையில் மேலதிக நேர கொடுப்பனவு முறையியலொன்றை சுங்க திணைக்களம் பின்பற்றியுள்ளமை | இது பற்றிய அறிக்கையொன்றை 2016 மே 01 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு குழு பி.க.அ. க்கு கட்டளையிட்டது. |
| 2. | 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க உற்பத்தி வரி (விஷேட ஏற்பாடுகள்) சட்டம் முழுமையாக அமுலாக்கப்படாமையினால் நாடு இழக்கின்ற வருமானம் | சட்டத்தை திருத்துவதற்கு சட்ட மாஅதிபரினால் வழங்கப்பட்டுள்ள பிரேரணைகளுக்கு ஒத்திசைவது பற்றி மற்றும் சட்டத்தை அமுலாக்குவது பற்றி திகதி குறிப்பிடப்பட்ட அறிக்கையொன்றை 2016 மே 01 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு பி.க.அ./க.அ. க்கு கட்டளையிடப்பட்டது. |
| 3. | மத்திய அகற்றல் பிரிவின் ஊடாக விற்பனை செய்யப்பட்ட மோட்டார் வாகனத்தை பதிவு செய்வதற்கு பதிலாக ரூபா 36 மில்லியனுக்கு அதிகமான பெறுமதியைக் கொண்ட "ஹமர்" இரக இறக்குமதி செய்யப்பட்ட /பொருத்தப்பட்ட வாகனமொன்றை பதிவு செய்வதற்கு ஏற்ற வகையில் கணினி கட்டமைப்புக்குள் மோசடியான தகவல்கள் சேர்க்கப்பட்டுள்ளன. | இது போன்ற மோசடியை தவிர்ப்பதற்கு நிறுவனங்களுக்கு இடையில் கணினி கட்டமைப்புக்கள் ஒன்றுடன் ஒன்று தொடர்புபடுத்தப்பட வேண்டுமெனவும், தன்னியக்க கணக்கிணக்க முறையொன்று காணப்படுதல் முக்கியமானதெனவும், இது பற்றி விசாரணை செய்து அறிக்கையொன்றை சமர்ப்பிக்குமாறும் பி.க.அ./க.அ. க்கு அறிவிக்கப்பட்டது. |
| 4. | ரூ.859,500/= செலவிடப்பட்டு 07 கைவிரல் அடையாள பதிவு இயந்திரங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருக்கையில் இவ்வியந்திரங்களை பயன்படுத்த சுங்க அதிகாரிகள் மறுப்புத் தெரிவித்தமை மற்றும் புதிய சுங்க கட்டிடத்தில் இவ்வியந்திரங்களை பொருத்துவதற்கு நடவடிக்கை எடுக்காமை. | சுங்க உத்தியோகத்தர்களின் தொழிலின் தன்மைக்கு ஏற்ப ஒரு இடத்திற்கு மாத்திரம் இவர்களது சேவை மட்டுப்படுத்தப்படாமை மற்றும் இவ்வியந்திரங்கள் நுண்ணிய தொழில் நுட்பத்தை கொண்டுள்ளமையால் இவ்வியந்திரங்களை பயன்படுத்துவதில் நடைமுறைச் சிக்கல்கள் காணப்படுவதாக பி.க.அ. தெளிவுபடுத்தினார்.<br>இந்நிலைமை பற்றி சட்ட காப்பீட்டை பெற்றுக்கொள்ளுமாறும் இது பற்றி அறிக்கையொன்றை 2016 மே 01 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறும் குழு பி.க.அ./.க.அ. க்கு கட்டளையிட்டுள்ளது. |

| | கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள் | பிரதம கணக்கீட்டு அலுவலரின்/ கணக்கீட்டு அலுவலரின் விடயங்கள் பற்றிய தெளிவுபடுத்தல் மற்றும் குழுவின் கருத்துகள்/கட்டளைகள் |
|---|---|---|
| 5. | மனித பாவனைக்கு பொருத்தமற்ற வெள்ளைப்பூண்டு அடங்கிய கொள்கலனை விடுவித்தமை மற்றும் ரூ.1,134,000 பெறுமதியான சுங்க வரியை கைவிட்டமை | பொது சுகாதாரம் பற்றி கடுமையான பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுக்கும் பொறுப்பு பற்றி விசாரிக்கப்பட்டதுடன் இது பற்றி பின்னாய்வொன்றை மேற்கொள்ளுமாறு பி.க.அ./க.அ. க்கு கட்டளையிடப்பட்டது. |
| 6. | தீர்வை வரி விடுவிப்பு அடிப்படையில் பெறப்படும் வரிச் சலுவை | கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் தீர்வை வரி விடுவிப்பு அடிப்படையில் பொருட்களை விற்பனை செய்யும் நிலையங்களின் உரிமையாளர்களால் விமான பயணிகளுக்கு உரிய வரிச் சலுகை சரியாக பெற்றுக்கொடுக்கப்படுவதை அவதானிப்பதற்காக முறையான வேலைத்திட்டமொன்றை ஒழுங்கு செய்யுமாறு பி.க.அ./க.அ. க்கு கட்டளையிடப்பட்டது. |
| 7. | வாகன இறக்குமதியின் போது இடம்பெறும் முறைகேடுகள் மற்றும் வாகன பதிவின் போது மேற்கொள்ளப்படும் மோசடிகள் பற்றிய தகவல்களை பெற்றுக்கொள்வதற்கு முறையான செயன்முறையொன்று இல்லாமையால் அரசாங்கம் இழக்கின்ற வரி வருமானம். | மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களத்துடன் இணைந்து வாகன இறக்குமதி வரியை அறவிடுவதற்கு முறையான வேலைத்திட்டமொன்றை ஒழுங்கு செய்யுமாறு பி.க.அ./க.அ. க்கு கட்டளையிடப்பட்டது..<br><br>கொள்கலன்களை பரிசோதிப்பதற்கு உயர் தொழில் நுட்பத்திலான ஸ்கேன் இயந்திரங்கள் பயன்படுத்தப்படவிருப்பதாகவும் இதனையடுத்து இந்நிலைமையை சீராக்க முடியுமெனவும் க.அ. தெரிவித்தார். |
| 8. | கொள்கலன் ஏற்றி இறக்கல் நிலையங்களில் அரசாங்க உடைமையாக்கப்பட்ட பொருட்கள் பற்றி விபரமான தகவல்கள் இன்மையால் இப்பொருட்களை ஏலவிற்பனைக்கு விடப்படும்போது உண்மையாக இப்பொருட்கள் இருந்த நிலையில் காணப்படுகின்றனவா என உறுதிப்படுத்திக்கொள்ள முடியாமை. | பொருட்கள் அரசுடைமையாக்கப்படும் போது காணப்பட்ட உதிரிப்பாகங்கள் ஏலவிற்பனையின் போது இல்லாமை பற்றி திணைக்களம் மேற்கொண்டுள்ள வழிமுறைகளை அறிக்கையிடுமாறும் இந்நிலைமையை சீராக்குவதற்கு வேலைத்திட்டமொன்றை ஒழுங்கு செய்து அதனை குழுவிற்கு அறிவிக்குமாமாறும் பி.க.அ./க.அ. க்கு கட்டளையிடப்பட்டது. |
| 9. | சுங்க வரி அற்ற பொருட்களை கொள்வனவு செய்யாத பயணிகளின் விமான பயணக் கடவுச் சீட்டு இலக்கத்தை பயன்படுத்தி வெளிநபர்களால் தீர்வை வரி அற்ற விற்பனை நிலையங்களில் பொருட்களை கொள்வனவு செய்வதை தடுத்தல். | இதற்கேற்ற பொருத்தமான உள்ளக வேலைத்திட்டமொன்றை வகுக்காமை பற்றி குழுவிற்கு அறிக்கையொன்றை சமர்ப்பிக்குமாறு கௌரவ தவிசாளர் அறிவித்துள்ளார். |
| 10. | சுங்க திணைக்கள உத்தியோகத்தர்களால் பெற்றுக்கொள்ளப்பட்ட பரிசுகள் (ஊக்குவிப்பு கொடுப்பனவுகள்) மற்றும் சட்ட நிலைமை | ஊக்குவிப்பு கொடுப்பனவு பற்றிய சட்டநிலைமை மற்றும் அரச, தனியார் நிறுவனங்களிடமிருந்து கடந்த 10 ஆண்டுகளில் அறவிடப்பட்ட தண்டப்பண வருமானம் பற்றி நிறுவன ரீதியில் தனித்தனியே தயாரிக்கப்பட்ட அறிக்கையை சமர்ப்பிக்குமாறு குழு அறிவித்தது. |

| | கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள் | பிரதம கணக்கீட்டு அலுவலரின்/ கணக்கீட்டு அலுவலரின் விடயங்கள் பற்றிய தெளிவுபடுத்தல் மற்றும் குழுவின் கருத்துகள்/கட்டளைகள் |
|---|---|---|
| **மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களம் (மீள அழைக்கப்பட்டமை)**<br>**2016 மார்ச் 24** | | |
| 1. | கணக்காய்வு நடவடிக்கையின் முன்னேற்றம் | கணக்காய்வின் ஊடாக சமர்ப்பிக்கப்பட்டிருந்த இரண்டு விடங்கள் தவிர ஏனையவை பற்றி தெளிவான வழிமுறைகள் எடுக்கப்படவில்லையெனவும் திறனாய்வின்றி இத்திணைக்களத்தின் நடவடிக்கைகள் பற்றி திருப்தியடைய முடியாதெனவும், இத்திணைக்களத்தின் செயற்பாடுகள் பற்றி அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவின் தீவிர கவனம் செலுத்தப்பட வேண்டிய அவசியம் நிலவுவதாகவும் கணக்காய்வாளர் தலைமையதிபதி தெரிவித்தார்.<br>ஆய்வுக்குட்படுத்தப்படும் சம்பவங்கள் இடம்பெற்ற வேளையில் தற்போதைய உத்தியோகத்தர்கள் சேவையில் இருக்கவில்லை என்ற விடயம் ஏற்புடையதாகாதெனவும், சகல தகவல்களையும் சமர்ப்பிக்கும் பொறுப்பு தற்போதைய உத்தியோகத்தர்களுக்கு இருப்பதாகவும் குழு வலியுறுத்தியது. |
| 2. | 597 வாகனக் கோப்புகள் காணாமல் போயுள்ளமை | இக்கோப்புகளில் 52 கிடைத்துள்ளதெனவும், இவற்றில் 28 கணக்காய்விற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும், எஞ்சிய கோப்புகளை தேடுவதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும், குழுவின் விசாரணைக்கு பதிலளித்த பி.க.அ/க.அ. குறிப்பிட்டார்.<br>கணக்காய்வு விசாரணைக்கு கணக்காய்வாளர் தலைமையதிபதி திணைக்களத்தினால் கோரப்பட்ட மொத்த கோப்புகளின் எண்ணிக்கை மற்றும் கொடுக்கப்பட்டுள்ள அளவு பற்றி துல்லியமாக குழுவிற்கு அறிவிக்குமாறு கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு அறிவிக்கப்பட்டது.<br>2015 ஆண்டில் 668,907 வாகனங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக க.அ. அறிவித்துள்ளார். மேற்படி பதிவு செய்யப்பட்ட வாகனங்களில் காணப்படும் 105,628 மோட்டார் கார்கள் (Motor Car) பற்றிய தகவல்களை சுங்க திணைக்களத்திற்கு அனுப்பி விதப்புரையை பெற்றுக்கொள்ளுமாறும் இவ்வாகனங்கள் மற்றும் பதிவு குறித்த அறிக்கையொன்றை குழுவிற்கு வழங்குமாறும் பி.க.அ./க.அ. க்கு கட்டளையிடப்பட்டது.<br>ஒவ்வொரு மாத இறுதியில் திணைக்கள கணக்காளரும் உள்ளக கணக்காய்வாளரும் இணைந்து, வாகன இறக்குமதி பற்றிய தகவல்களை சுங்க திணைக்களத்தின் ஊடாக பெற்றுக்கொண்டு அவற்றின் பதிவுகளோடு ஒப்பிட்டு அறிக்கையொன்றை தயாரிக்குமாறும், இதனை மார்ச் மாதம் 31 ஆம் திகதி தொடக்கம் அமுல்படுத்துமாறும் இங்கு குழுவினால் ஆலோசனை வழங்கப்பட்டது. |

| | கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள் | பிரதம கணக்கீட்டு அலுவலரின்/ கணக்கீட்டு அலுவலரின் விடயங்கள் பற்றிய தெளிவுபடுத்தல் மற்றும் குழுவின் கருத்துகள்/கட்டளைகள் |
|---|---|---|
| 3. | E மோட்டரின் கருத்திட்டம் | 2009 ஆம் ஆண்டு தொடக்கம் ரூபா 700 மில்லியன் செலவிடப்பட்டுள்ள நிலையில் இக்கருத்திட்டத்தின் செயலிழந்த நிலை பற்றி குழு மிகுந்த வருத்தத்தை தெரிவித்தது.<br><br>உத்தியோகபூர்வமாக தயாரிக்கப்பட்ட அறிவுறுத்தல் பத்திரமொன்றை இத்திணைக்களத்திற்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பி.க.அ./க.அ. க்கு அறிவுறுத்தல் வழங்கிய குழு, அதன் நடைமுறை நிலை பற்றிய அறிக்கையொன்றை 01 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்புமாறும் பிக.அ. க்கு கட்டளையிடப்பட்டது.<br><br>அத்துடன் E மோட்டரின் கருத்திட்டத்தை அமுலாக்குவது பற்றி ICTA மற்றும் LANKA CLEAR ஆகிய நிறுவனங்களிடம் அறிவுரையை பெற்றுக்கொள்ளுமாறும், நிதி அமைச்சுடன் இணைந்து மீண்டும் கலந்துரையாடி தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் பி.க.அ./க.அ. க்கு கட்டளையிடப்பட்டது. |
| 4. | 5494 வாகனங்கள் முறைகேடான விதத்தில் பதிவு செய்யப்பட்டிருத்தல் | இது பற்றிய விரிவான அறிக்கையொன்றை 2016 ஜூன் மாதம் 10 ஆம் திகதிக்கு முன் பெற்றுக்கொடுக்குமாறு உத்தரவிடப்பட்டது. |
| 5. | கையுழவு இயந்திரங்களை இறக்குமதி செய்த சுங்க குறிப்புக்களை பயன்படுத்தி 7 பிராடோ ஜீப் வாகனங்களை பாவித்தமை பற்றி 2009 ஆம் ஆண்டில் குற்றப் புலனாய்வு திணைக்களத்தில் முறைப்பாடு செய்த போதும் மோட்டார் வாகன திணைக்களத்தினால் இதற்கான ஆவணங்கள் பெற்றுக்கொடுக்காமையினால் இவ்விசாரணைகளை தொடர முடியாதென குற்றப்புலனாய்வு திணைக்களம் அறிவித்துள்ளதால் இது பற்றி மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் | இவ்விடயம் பற்றிய பூர்வாங்க விசாரணைகள் மோட்டார் வாகன திணைக்களத்தினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும், இதன் முன்னேற்றத்தை இக்குழுவிற்கு அறிவிக்க நடவடிக்கை எடுக்க இருப்பதாகவும் பி.க.அ./க.அ. தெரிவித்தார்.<br><br>இவ்விசாரணைக்காக போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சின் உத்தியோகத்தர் ஒருவரை ஈடுபடுத்துமாறும் தகவல்களை சுங்க திணைக்களத்திடம் பெற்றுக்கொள்ளுமாறும், அறிவுரை வழங்கிய குழு இவ்வாகனங்களை கரைநிரல் பட்டியல்படுத்துவதில் மாத்திரம் நின்றுவிடாது அவற்றின் பதிவை இரத்துச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் மேலும் பி.க.அ./க.அ. க்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. |
| 6. | கணக்காய்வு பற்றிய மீளாய்வு | கணக்காய்வாளர் சமர்ப்பித்திருந்த விடயங்களை விரிவாக மீளாய்வு செய்த குழு திணைக்களத்தின் பாரதூரமான நிர்வாக குறைபாடுகள் மற்றும் செயற்றிறனின்மை காணப்படுவதாக குறிப்பிட்டுள்ளது. இந்நிலையை போக்குவதற்கு உடனடியாக தீர்வுகளை எட்ட வேண்டுமெனவும், இதற்காக நேர்வரிசை அமைச்சினால் முகாமைத்துவ குழுவொன்றை நிறுவி திணைக்களத்தின் நடவடிக்கைகளை தீவிரமாக மேற்பார்வை செய்யுமாறும், வழங்கப்படும் அறிவுறுத்தல்கள் அமுலாக்கப்படாவிடின் இது பற்றி குழுவிற்கு அறிவிக்குமாறும் பி.க.அ./க.அ. க்கு கட்டளையிடப்பட்டது. |

| | **கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்** | **பிரதம கணக்கீட்டு அலுவலரின்/ கணக்கீட்டு அலுவலரின் விடயங்கள் பற்றிய தெளிவுபடுத்தல் மற்றும் குழுவின் கருத்துகள்/கட்டளைகள்** |
|---|---|---|
| | | E மோட்டரின் கருத்திட்டம் நடைமுறையில் உள்ளவரையில் இத்திணைக்களத்தின் முகாமைத்துவத்திற்கென சீரான வேலைத்திட்டமொன்றை தயாரித்து அதன் முன்னேற்றத்தை குழுவிற்கு அறிவிக்குமாறும் திருத்தப்பட்ட E மோட்டரின் கருத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் விதத்தை பற்றி கால அடிப்படையில் அறிக்கையொன்றை குழுவிற்கு சமர்ப்பிக்குமாறும் அறிவிக்கப்பட்டது. |
| **தொழில், தொழிற் சங்க உறவுகள் அமைச்சு**<br>**2016 ஏப்ரல் 07** | | |
| 1. | பணியாட்டொகுதியில் வெற்றிட்டங்கள் காணப்படல் | சகல வெற்றிடங்களையும் நிரப்புவதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்க இருப்பதாக க.அ. தெரிவித்தார். |
| 2. | ரூபா 11,940/= மில்லியனை அறவிடுவதற்காக 13,604 வழக்குகள் காணப்படுதல், இதில் ரூபா 429 மில்லியனுக்கான 2,385 வழக்குகளுக்கு பகிரங்க பிடியாணை பிறப்பித்துள்ளமையை அவதானித்த குழு இவ்வழக்குகளின் அசமந்த போக்கினை பற்றி வினவியது. | நீண்டகாலமாக காணப்படும் 16,000 வழக்குகள் இருப்பதாகவும் இவ்வழக்கு நடவடிக்கைகளை முறைப்படி முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் பி.க.அ. தெரிவித்தார்.<br>தொடரப்பட்டுள்ள வழக்குகளில் ரூபா 11 பில்லியன் கிடைக்க வேண்டியிருப்பதால் இந்நடைமுறையை சீராக்குவதற்கு செயற்றிட்டமொன்றை, வகுத்து அறிக்கையொன்றை 2016 யூன் மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்புமாறு குழுவினால் பி.க.அ. க்கு கட்டளையிடப்பட்டது. |
| 3. | வாகன விபத்துக்கள் காரணமாக நேர்ந்துள்ள ரூபா 7.3 மில்லியன் வரையான நட்டம் | இவ்விபத்துக்களால் ஏற்பட்டுள்ள நட்டம் மற்றும் இழப்புக்களை ஈடுசெய்வதற்கு முறையான வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் எதிர்காலத்தில் இவ்வாறான நிலைமைகள் ஏற்படுவதை தணிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் பி.க.அ. தெரிவித்தார். |
| 4. | சிறு பராய கணக்கு உரிமையாளர்களின் ஆவணங்கள் மற்றும் கணக்குப் புத்தகங்கள் பாதுகாப்பற்றதாக காணப்படுதல் மற்றும் இற்றைப்படுத்துதல். | சகல கணக்குகளையும் கணினி மயப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும், இதற்கு அமைவாக வருடாந்தம் இற்றைப்படுத்துதல் மேற்கொள்ளப்படுவதாகவும் தொழிலாளர் இழப்பீட்டு ஆணையாளர் அறிவித்தார். |
| 5. | பயனாளிகள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்களுக்கு இழப்பீட்டை பெற்றுக்கொடுக்கும் வேலைத்திட்டமொன்று மற்றும் சேவை காலத்தில் சேவைக்கு சமுகமளிக்கும் போதும் இடம்பெறும் விபத்துக்களுக்கு இழப்பீட்டை பெற்றுக்கொள்ளல். | பயனாளிகளின் தரப்பு குறித்து கூடிய கவனத்தை செலுத்தி, தொழில் வழங்குனர்கள் மற்றும் தொழில் சங்கங்களுடன் கலந்துரையாடி, காலத்திற்கேற்ற வகையில் தொழிலாளர் இழப்பீட்டு சட்டத்தை திருத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை தாமதிக்காது மேற்கொள்ளுமாறு பி.க.அ. க்கு ஆலோசனை வழங்கப்பட்டது.<br>தொழிலாளர் சட்டங்கள், கட்டளைச் சட்டங்கள் மற்றும் இதன் பயன்கள் பற்றி உரிய வேலைத்திட்டமொன்றை அமுல்படுத்துமாறு ஆலோசனை வழங்கப்பட்டது. |

| | கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள் | பிரதம கணக்கீட்டு அலுவலரின்/ கணக்கீட்டு அலுவலரின் விடயங்கள் பற்றிய தெளிவுபடுத்தல் மற்றும் குழுவின் கருத்துகள்/கட்டளைகள் |
|---|---|---|
| **தொழில் திணைக்களம்**<br>**2016 ஏப்ரல் 07** | | |
| 1. | ஊழியர் சேமலாப நிதி சீராக அறவிடப்படாமை மற்றும் சேவை வழங்குனர்கள் ஊழியர் சேமலாப நிதி தவணைத் தொகையை செலுத்தாமை. | தொழில் அலுவலகங்களில் காணப்படும் பிரச்சினைகள் தீர்க்கப்பட்டுள்ளதாகவும் நிதியத்திற்கான தவணைத் தொகை செலுத்தப்படாமை பற்றி சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியேற்படுமெனவும் இது குறித்த சகல விடயங்களையும் கருத்திற்கொண்டு ஊழியர் சேமலாப நிதிய சட்டத்தை திருத்துவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக பி.க.அ./க.அ. தெரிவித்தார். |
| 2. | திணைக்களத்திடமிருந்த ரூபா 800,000/= பெறுமதியான வாகனம் 2002 ஜனவரி மாதத்தில் கடத்தப்பட்டமை தொடர்பில் நடவடிக்கை மேற்கொள்வதில் தாமதம் | காணாமல் போன வாகனம் பற்றிய விபரங்களை மோட்டார் வாகன திணைக்களத்திடமிருந்து பெற்றுக்கொண்டு, குறிப்பிட்ட விசாரணைகளில் காணப்படும் விதப்புரை மற்றும் இழப்பீட்டை அறவிடுவதற்கான முறையியல் பற்றிய அறிக்கையொன்றை இரண்டு வாரங்களுக்குள் குழுவிற்கு அனுப்புமாறு பி.க.அ./க.அ. க்கு கட்டளையிடப்பட்டது. |
| 3. | இலஞ்ச குற்றச்சாட்டின் கீழ் கைது செய்யப்பட்ட நான்கு உத்தியோகத்தர்களுக்கு எதிராக முறையான ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்காமை | குறிப்பிட்ட உத்தியோகத்தர்களை கட்டாய லீவில் அனுப்பியுள்ளதாகவும், வழக்கு தாக்கல் செய்த பின்னர் வேலை தடைசெய்யப்பட்டுள்ளதாகவும் பி.க.அ./க.அ. தெரிவித்தார். இது பற்றிய சகல தகவல்களையும் கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு அறிக்கையிடுமாறு குழுவினால் பி.க.அ./க.அ. க்கு கட்டளையிடப்பட்டது. |
